Approved by the Text Book Committee, Madras.

TAMIL MANI MALAI

BOOK I

COMPILED BY

C. V. THANIKACHALAM PILLAI

Head Tamil Pandit, Muthialpet High School, Madras.

WITH AN INTRODUCTION BY
VIDWAN M. RAGHAVA IYENGAR AVL.,
CHIEF PANDIT,
UNIVERSITY TAMIL LEXICON OFFICE, MADRAS.

K. PALANIANDI PILLAI & CO.
EDUCATIONAL PUBLISHERS
TRIPLICANE : : MADRAS.

தமிழ் மணி மாலை

முதற் புத்தகம்

தொகுத்தோர் :

சி. வ. தணிகாசலம் பிள்ளை

தலைமைத் தமிழாசிரியர்

முத்தியாலுப்பேட்டை உயர் கலாசாலை, சென்னை.

கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனி,

திருவல்லிக்கேணி : : சென்னை.

பதிப்புரிமை] [விலை அணா 10.

PRINTED AT
THE ROYAL PRINTING WORKS,
MOUNT ROAD, MADRAS.

முகவுரை

தமிழ் மணி மாலை—முதற் புத்தகம் என்னும் பெயரோடு மிளிரும் இந்நூல், நான்காம் பாரத்துப் (Fourth Form) பிள்ளைகட்கெனத் தொகுக்கப்பெற்றதாகும். செய்யுள், வசனம் இரண்டுஞ் சேர்ந்த இத்தொகுதி நூல், பல்வகையிலும் பண்புற்று விளங்குகின்றதென்பதை இதனை ஒரு முறை உற்று நோக்குவோர் நன்கறியக் கூடும்.

எனது வேண்டுகோட்கிணங்கி இந்நூலிலமைந்துள்ள கட்டுரைகளைப் பல பெருமக்களிடமிருந்து வருவித்துத் தந்த என் நண்பர் திரு. மா. இராசமாணிக்கம் பிள்ளையவர்கட்கும், அவரது விருப்பத்தையேற்று அக்கட்டுரைகளை அளித்துதவிய பெரியார்கட்கும் எனது நன்றி என்றும் உரித்தாகுக.

அன்பன்,

சி. வ. தணிகாசலம்

சென்னைச் சர்வ கலாசாலைத் தமிழ் லெக்ஷிகன் ஆபீஸ்

தலைமைத் தமிழ்ப் பண்டிதர்

வித்துவான்

மு. இராகவையங்கார் அவர்கள் எழுதிய

மதிப்புரை

மகா-ஈ-ஈ-ஸ்ரீ சி. வ. தணிகாசலம் பிள்ளையவர்கள் தொகுத்து வெளியிட்ட 'தமிழ் மணி மாலை' முதலிரண்டு புத்தகங்களையும் நன்கு பார்வையிட்டேன். இவ்விரண்டு தொகுதிகளும், தனித்தனி செய்யுளும் வசனமுமாகிய இரண்டு பகுதிகள் கொண்டன. ஆங்கில உயர்தரக் கலாசாலைகளில் தமிழ் கற்கும் நான்கு, ஐந்தாம் பார மாணவர்க்கு உபயோகமாக இவை முறையே அமைக்கப் பெற்றவை. இவற்றுட் செய்யுட் பகுதிகள், மாணவர் வகுப்பு நிலைக்கேற்றவாறு மூன்னூல்களினின்று திரட்டிய சிறந்த இனிய பாடல்கள் உடையனவாகவும், வசனப் பகுதிகள் சிறந்த பண்டிதர் பலர் எழுதிய வியாசங்கள் உடையனவாகவும் உள்ளன. இவை யாவும் மாணக்கர் தகுதியறிந்து எழுதப்பட்டனவாயும், படித்தற்கின்பமும் நல்லறிவும் ஊட்டத் தக்கனவாயும் அமைந்திருப்பது அறிந்து மகிழ்கின்றேன். இத்தகைய பாட நூல்களே நம் நாட்டு மாணவரின் தமிழறிவை நன்கு வளர்த்துப் பயனளிக்க வல்லன. நெடுங்காலம் மாணக்கர்க்குத் தமிழ்ப் பயிற்சி செய்வித்து வரும் பண்டிதரான பிள்ளையவர்கள், அவர்கள் தகுதியறிந்து தொகுத்து வெளியிட்ட இப்புத்தகத் தொகுதிகளை உயர்தரக் கலாசாலைகள் எல்லாம் உபயோகப்படுத்தி நற்பயன் பெற வேண்டும் என்பது என் விருப்பம்.

திருவல்லிக்கேணி,
12—9—33.

இங்ஙனம்,
மு. இராகவையங்கார்

உள்ளுறை

செய்யுள்

		பக்கம்
I.	கடவுள் வாழ்த்து	
1.	அருட்பா	1
2.	திருப்பூவல்லி	2
3.	நாய்ச்சியார் திருமொழி	3
4.	தமிழ்த் தாய்	5
II.	நீதி	
1.	திரி கடுகம்	6
2.	நான்மணிக்கடிகை	8
3.	நாலடியார்	9
4.	அற நெறிச் சாரம்	12
5.	திருக்குறள்	14
6.	நீதி நெறி விளக்கம்	15
III.	கதை	
1.	நளவெண்பா	18
2.	கும்பகர்ணன் அறவுரை	23
3.	தருமிக்குப் பொற்கிழியளித்தது ...	25
4.	அருச்சுனன் சோகமும் சபதமும் ...	28
5.	குசேலர் சரிதை	31
6.	மெய்ப்பொருள் நாயனார்	34
IV.	பல்சுவை	
1.	மீனாட்சியம்மை குறம்	37
2.	தனிச் செய்யுட்கள்	39
3.	சிவபிரான் திருமணச் சிறப்பு	41
4.	புற நானூறு	43
5.	இயற்கை இன்பம்	45

உரை நடை

பொருள்		பக்கம்
1.	கல்வியும் கைத்தொழிலும் (சுவாமி வேதாசலம் அவர்கள்) ...	51
2.	சிவ காருணியம் (சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள்) ...	56
3.	கன்னனும் கும்பகர்ணனும் (சி. வ. தணிகாசலம் பிள்ளை அவர்கள்) ...	59
4.	நூல் நிலைய இயக்கம் (கா. மு. சின்னப்பா பிள்ளை அவர்கள்) ...	62
5.	அருச்சுனன் சுபத்திரையை மணத்தல் (வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள்) ...	65
6.	ஜாம்ஷட்ஜி நசர்வான்ஜி டாட்டா (அ. கி. பரந்தாம முதலியார் அவர்கள்) ...	68
7.	மகிழ்ச்சி (ச. கந்தசாமி முதலியார் அவர்கள்) ...	74
8.	செஞ்சிக்கோட்டை (தை. ஆ. கனகசபாபதி முதலியார் அவர்கள்) ...	78
9.	வருணனை (மயிலை. சிவ. முத்துக்குமாரசாமி முதலியார் அவர்கள்) ...	82
10.	சர்வ தேச சங்கம் (ரா. அரங்கநாயகி அம்மையார் அவர்கள்) ...	84
11.	கிராமச் சீர்திருத்தம் (திருஞானசம்பந்தம் அவர்கள்) ...	88
12.	இராம் மோஹனரும் சீர்திருத்தங்களும் (தி. கி. கோபாலையர் அவர்கள்) ...	92
13.	கலிங்கப் போர் (திரு. தி. செல்வகேசவராய முதலியார் அவர்கள், M.A.) ...	99
14.	கொலம்பஸும் புதிய கண்டமும் (S. S. அருணகிரிநாதர் அவர்கள்) ...	103
15.	சரித்திர நூல்களைக் கற்பதனால் வரும் பயன் (திரு. தி. த. கனகசுந்தரம் பிள்ளை அவர்கள், B.A.) ...	109

செய்யுள்

தமிழ் மணி மாலை

முதற் புத்தகம்

I. கடவுள் வாழ்த்து

---

1. அருட்பா

எழுவகைப் பிறவிகளுள் எப்பிறவி எய்துகினும்
எய்துக ; பிறப்பில் இனிதான்
எய்தாமை எய்துகினும் எய்திடுக ; இருமையினும்
இன்பம்எய் தினும்எய்துக ;
வழுவகைத் துன்பமே வந்திடினும் வருக;மிகு
வாழ்வுவந் திடினும்வருக ;
வறுமைவரு கினும்வருக ; மதிவரினும் வருக;அவ
மதிவரினும் வருக;உயர்வோ(டு)
இழிவகைத் துலகின்மற் றெதுவரினும் வருக;அல(து)
எதுபோகி னும்போக;நின்
இணையடிகள் மறவாத மனமொன்று மாத்திரம்
எனக்கடைதல் வேண்டும்அரசே !

கழிவகைப் பவரோக நீக்குநல் லருளெனுங்
கதிமருந் துதவுநிதியே !

கனகவம் பலநாத ! கருணையங் கணபோத !
கமலகுஞ் சிதபாதனே !

—இராமலிங்க சுவாமிகள்

2. திருப்பூவல்லி

1 இணையார் திருவடி என்தலைமேல் வைத்தலுமே,
துணையான சுற்றங்கள் அத்தனையும் துறந்தொழிந்தேன் ;
அணையார் புனல்தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
புணையாளன் சீர்பாடிப் பூவல்லி கொய்யாமோ !

2 எந்தைதம் தாய்சுற்றம் மற்றுமெல்லாம் என்னுடைய
பந்தம் அறுத்தென்னை ஆட்கொண்ட பாண்டிப்பிரான் ;
அந்த இடைமருதில் ஆனந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவிநாம் பூவல்லி கொய்யாமோ !

3 நாயிற் கடைப்பட்ட நம்மையும்ஓர் பொருட்படுத்து,
தாயிற் பெரிதும் தயாவுடைய தம்பெருமான்
மாயப் பிறப்பறுத் தாண்டான்,என் வல்வினையின்
வாயிற் பொடியட்டிப் பூவல்லி கொய்யாமோ !

4 தேன்நாடு கொன்றை சடைக்கணிந்த சிவபெருமான்
ஊன்நாடி நாடிவந் துள்புகுந்தான் ; உலகர்முன்னே
நான்நாடி ஆடிநின்(று) ஓலமிட நடம்பயிலும்
வான்நாடர் கோவுக்கே பூவல்லி கொய்யாமோ !

5 எரிமூன்று தேவர்க் கிரங்கிஅருள் செய்தருளி,
சிரமூன்(று) அறத்தன் திருப்புருவம் நெரித்தருளி,
உருமூன்றும் ஆகி உணர்வரிதாம் ஒருவனுமே
புரமூன்(று) எரித்தவா பூவல்லி கொய்யாமோ !

6 வணங்கத் தலைவைத்து, வார்கழல்வாய் வாழ்த்தவைத்(து),
இணங்கத்தன் சீரடியார் கூட்டமும்வைத்(து), எம்பெருமான்
அணங்கொ(டு) அணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ !

7 நெறிசெய் தருளித்தன் சீரடியார் பொன்னடிக்கே
குறிசெய்து கொண்டென்னை ஆண்டபிரான் குணம்பரவி,
முறிசெய்து நம்மை முழுதுடற்றும் பழவினையைக்
கிறிசெய்த வாபாடிப் பூவல்லி கொய்யாமோ !

8 பன்னுள் பரவிப் பணிசெய்யப் பாதமலர்
என்ஆகம் துன்னவைத்த பெரியோன் எழிற்சுடராய்க்
கன்னுர் உரித்தென்னை ஆண்டுகொண்டான் கழலிணைகள்
பொன்னுன வாபாடிப் பூவல்லி கொய்யாமோ !

9 பேராசை ஆம்இந்தப் பிண்டமறப் பெருந்துறையான்,
சீரார் திருவடி என்தலைமேல் வைத்தபிரான்,
காரார் கடல்நஞ்சை உண்டுகந்த காபாலி,
போரார் புரம்பாடிப் பூவல்லி கொய்யாமோ !

10 பாலும் அமுதமும் தேனுடனும் பராபரமாய்க்
கோலம் குளிர்ந்துள்ளம் கொண்டபிரான் குரைகழல்கள்
ஞாலம் பரவுவார் நன்னெறியாம் அந்நெறியே
போலும் புகழ்பாடிப் பூவல்லி கொய்யாமோ !

—திருவாசகம் - மாணிக்க வாசகர்

---

3. நாய்ச்சியார் திருமொழி

1 வாரணம் ஆயிரம் சூழ வலம்செய்து
நாரண நம்பி நடக்கின்றுன் என்(று),எதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும் .
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீ!நான்.

2 நாளை வதுவை மணமென்று நாளிட்டு,
பாளை கமுகு பரிசுடைப் பந்தற்கீழ்,
கோளரி மாதவன் கோவிந்தன் என்பானோர்
காளை புகுதக் கனாக்கண்டேன் தோழீ!நான்.

3 இந்திர னுள்ளிட்ட தேவர் குழாமெல்லாம்
வந்திருந்(து) என்னை மகட்பேசி, மந்திரித்து,
மந்திரக் கோடி உடுத்தி, மணமாலை
அந்தரி சூட்டக் கனாக்கண்டேன் தோழீ!நான்.

4 நால்திசைத் தீர்த்தம் கொணர்ந்து நனிநல்கி,
பார்ப்பனச் சிட்டர்கள் பல்லார் எடுத்தேத்தி,
பூப்புனை கண்ணிப் புனிதனென்(டு) என்தன்னைக்
காப்புநாண் கட்டக் கனாக்கண்டேன் தோழீ!நான்.

5 கதிரொளி தீபம் கலச முடனேந்தி,
சதிரிள மங்கையர் தாம்வந்(து) எதிர்கொள்ள,
மதுரையார் மன்னன் அடிநிலை தொட்டெங்கும்
அதிரப் புகுதக் கனக்கண்டேன் தோழீ!நான்.

6 மத்தளம் கொட்ட, வரிசங்கம் நின்றூத,
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்(து)என்னைக்
கைத்தலம் பற்றக் கனக்கண்டேன் தோழீ!நான்.

7 வாய்நல்லார் நல்ல மறையோதி மந்திரத்தால்
பாசிலை நாணல் படுத்துப் பரிதிவைத்துக்
காய்சின மாகளி(று) அன்னுன்என் கைப்பற்றி,
தீவலம் செய்யக் கனக்கண்டேன் தோழீ!நான்.

8 இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றுவான்,
நம்மை உடையவன், நாரா யணன்நம்பி,
செம்மை உடைய திருக்கையால் தாள்பற்றி
அம்மி மிதிக்கக் கனக்கண்டேன் தோழீ!நான்.

9 வரிசிலை வாள்முகத்(து) என்னைமார் தாம்வந்திட்(டு),
எரிமுகம் பாரித்(து), என்னைமுன் னேநிறுத்தி,
அரிமுகன் அச்சுதன் கைம்மேல்என் கைவைத்து,
பொரிமுகந்(து) அட்டக் கனக்கண்டேன் தோழீ!நான்.

10 குங்குமம் அப்பிக் குளிர்சாந்தம் மட்டித்து,
மங்கல வீதி வலம்செய்து, மணநீர்
அங்கவ னோடும் உடன்சென்றங் கானைமேல்
மஞ்சனம் ஆட்டக் கனக்கண்டேன் தோழீ!நான்.

—ஆண்டாள்

———

4. தமிழ்த் தாய்

1 நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக்(கு) எழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும் ;
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே !

2 பல்லுயிரும் பலவுலகும் படைத்(து) அளித்துத் துடைக்கினுமோ
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்,
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமும்துளுவும்
உன்உதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்,
ஆரியம்போல் உலகவழக்(கு) அழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே.

—மனோன்மணீயம்-சுந்தரம் பிள்ளை

3 திருவளரும் செந்தமிழாம் தேமலர்தா னெப்பொழுதும்
முருகு விரித்தொளிரும் மூவுலகும் அம்மானே !
முருகு விரித்தொளிரும் மூவுலகும் ஆமாயின்,
அருமைமிகு வானவரும் அணிவரோ? அம்மானே !
அங்கொன்றைத் தாரனுமுன் அன்புவைத்தான் அம்மானே !

4 தேங்குசுவை யில்கவினில் திகழ்பழமை யின்மிகுந்த
பாங்கி னுயர்மொழிநம் பைந்தமிழ்காண் அம்மானே !
பாங்கி னுயர்மொழிநம் பைந்தமிழே ஆமாயின்,
ஆங்கிலத்திற் பொருள்மிகவே அளித்திடுமோ? அம்மானே !
அகத்தும் புறத்தும் அளித்திடுங்காண் அம்மானே !

—ந. மு. வேங்கடசாமி நாட்டார்

5 வானுர்ந்த பொதியின்மிசை வளர்கின்ற மதியே !
மன்னியமூ வேந்தர்கள்தம் மடிவளர்ந்த மகளே !
தேனுர்ந்த தீஞ்சுனைசால் திருமாலின் குன்றம்
தென்குமரி ஆயிடைநற் செங்கோல்கொள் செல்வீ !
கானுர்ந்த தேனே!கற் கண்டே!நற் கனியே !
கண்ணே!கண் மணியே!அக் கட்புலஞ்சேர் தேவீ !
ஆனுத நூற்கடலே அளித்தருளும் அமிழ்தே !
அம்மே!நின் சீர்ப்பெருமை அறைதலியார்க் கெளிதே !

—ரா. வேங்கடாசலம் பிள்ளை

II. நீ தி

1. திரி கடுகம்

1 பகைமுன்னர் வாழ்க்கை செயலும், தொகைநின்ற
பெற்றத்துள் கோலின்றிச் சேறலும்,—மூற்றன்னைக்
காய்வானைக் கைவாங்கிக் கோடலும் இம்மூன்றுஞ்
சாவ உறுவான் தொழில்.

2 பிறர்தன்னைப் பேணுங்கால் நாணலும், பேணர்
திறன்வேறு கூறிற் பொறையும்,—அறவினையைக்
காராண்மை போல ஒழுகலும் இம்மூன்றும்
ஊராண்மை என்னுஞ் செருக்கு.

3 வாளைமீன் உள்ளல் தலைப்படலும், ஆளல்லான்
செல்வக் குடியுள் பிறத்தலும்,—பல்லவையுள்
அஞ்சுவான் கற்ற அருநூலும் இம்மூன்றும்
துஞ்(சு)ஊமன் கண்ட கனவு.

4 கணக்காயர் இல்லாத ஊரும், பிணக்கறுக்கும்
மூத்தோரை இல்லா அவைக்களனும்,—பாத்துண்ணும்
தன்மை யிலாளர் அயலிருப்பும் இம்மூன்றும்
நன்மை பயத்தல் இல.

5 தாளாளன் என்பான் கடன்படா வாழ்பவன்;
வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணுதான்;
கோளாளன் என்பான் மறவாதான்; இம்மூவர்
கேளாக வாழ்தல் இனிது.

6 மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும், மாசில்சீர்ப்
பெண்ணினுள் கற்புடையாள் பெற்றானும்,—உண்ணும்நீர்
கூவல் குறைவின்றித் தொட்டானும் இம்மூவர்
சாவா உடம்பெய்தி னார்.

7 ஒல்வ(து) அறியும் விருந்தினனும், ஆருயிரைக்
கொல்வ(து) இடைநீக்கி வாழ்வானும்,—வல்லிதின்
சீலம் இனிதுடைய ஆசானும் இம்மூவர்
ஞாலம் எனப்படு வார்.

8 தன்னச்சிச் சென்றுரை எள்ளா ஒருவனும்,
மன்னிய செல்வத்துப் பொச்சாப்பு நீத்தானும்,
என்றும் அழுக்கா(று) இகந்தானும் இம்மூவர்
நின்ற புகழுடை யார்.

9 தன்னை வியந்து தருக்கனும், தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கனும்,—முன்னிய
பல்பொருள் வெஃகும் சிறுமையும் இம்மூன்றும்
செல்வம் உடைக்கும் படை.

10 வைததனை இன்சொல்லாக் கொள்வானும், நெய்பெய்த
சோறென்று கூழை மதிப்பானும்,—ஊறிய
கைப்பதனைக் கட்டியென்(று) உண்பானும் இம்மூவர்
மெய்ப்பொருள் கண்டுவாழ் வார்.

11 கண்ணுக்(கு) அணிகலம் கண்ணோட்டம்; காமுற்ற
பெண்ணுக்(கு) அணிகலம் நாணுடைமை;—நண்ணும்
மறுமைக்(கு) அணிகலம் கல்வி;இம் மூன்றும்
குறியுடையார் கண்ணே உள.

12 பேஎய்ப் பிறப்பிற் பெரும்பசியும், பாஅய்
விலங்கின் பிறப்பின் வெருவும்,—புலந்தெரியா
மக்கட் பிறப்பின் நிரப்பிடும்பை இம்மூன்றும்
துக்கப் பிறப்பாய் விடும்.

13 வள்ளன்மை பூண்டான்கண் செல்வமும், உள்ளத்(து)
உணர்வுடையான் ஓதிய நூலும்,—புணர்வின்கண்
தக்க(து) அறியும் தலைமகனும் இம்மூவர்
பொத்தின்றிக் காழ்த்த மரம்.

14 ஈதற்குச் செய்க பொருளை; அறநெறி
சேர்தற்குச் செய்க பெருநூலை;—யாதும்

அருள்புரிந்து சொல்லுக சொல்லே;இம் மூன்றும்
இருளுலகம் சேராத ஆறு.

15 கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி ; கொண்டன
செய்வகை செய்வான் தவசி ; கொடி(து)ஒரீஇ
நல்லவை செய்வான் அரசன்; இவர்மூவர்
பெய்யெனப் பெய்யும் மழை.

—நல்லர்தனூர்

---

2. நான்மணிக் கடிகை

1 இன்னுமை வேண்டின், இரவெழுக ; இந்நிலத்து
மன்னுதல் வேண்டின், இசைநடுக ;—தன்னெடு
செல்வது வேண்டின், அறஞ்செய்க ; வெல்வது
வேண்டின், வெகுளி விடல்.

2 மழையின்றி மாநிலத்தார்க்(கு) இல்லை ; மழையும்
தவமிலார் இல்வழி இல்லை ; தவமும்
அரசிலார் இல்வழி இல்லை ; அரசனும்
இல்வாழ்வான் இல்வழி இல்.

3 இரும்பின் இரும்பிடை போழ்ப ; பெருஞ்சிறப்பின்
நீருண்டார் நீரால்வாய் பூசுப ;—தேரின்,
அரிய அரியவற்றுள் கொள்ப ; பெரிய
பெரியரால் எய்தப் படும்.

4 நாற்றம் உரைக்கும் மலருண்மை ; கூறிய
மாற்றம் உரைக்கும் வினைநலம் ;—தூக்கின்,
அகம்பொதிந்த தீமை முகமுரைக்கும் ; எல்லாம்
முகம்போல முன்னுரைப்ப(து) இல்.

5 நலனும் இளமையும் நல்குரவின் கீழ்ச்சாம் ;
குலனும் குடிமையும் கல்லாமைக் கீழ்ச்சாம் ;
வளமில் குளத்தின்கீழ் நெற்சாம் ; பரம்மல்லல்
பண்டத்தின் கீழ்ச்சாம் பகடு.

6 நல்லார்க்கும் தம்மூரென்(று) ஊரில்லை ; நன்னெறிச்
செல்வார்க்கும் தம்மூரென்(று) ஊரில்லை ;—அல்லாக்
கடைகட்கும் தம்மூரென்(று) ஊரில்லை ; தங்கைத்(து)
உடையார்க்கும் எவ்வூரும் ஊர்.

7 கல்லா ஒருவர்க்குத் தம்வாயில் சொல்கூற்றம் ;
மெல்லிலை வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம் ;
அல்லவை செய்வார்க்(கு) அறங்கூற்றம் ; கூற்றமே
இல்லத்துத் தீங்கொழுகு வாள்.

8 இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம் ;
வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம் ;
கிளைஞரில் போழ்தில் சினங்குற்றம் ; குற்றம்
தமரல்லார் கையகத்(து) ஊண்.

9 எல்லா விடத்தும் கொலைதீது ; மக்களைக்
கல்லா வளர விடல்தீது ;—நல்லார்
நலம்தீது நாணற்று நிற்பின் ; குலந்தீது
கொள்கை அழிந்தக் கடை.

10 ஏரி சிறிதாயின், நீரூரும் ; இல்லத்து
வாரி சிறிதாயின், பெண்ணூரும் ; மேலைத்
தவஞ்சிறி தாயின், வினையூரும் ; ஊரும்
உரஞ்சிறி தாயின், பகை.

—விளம்பி நாகனார்

---

3. நாலடியார்

க ல் வி

1 கல்வி கரையில ; கற்பவர் நாள்சில ;
மெல்ல நினைப்பின், பிணிபல ; தெள்ளிதின்
ஆராய்ந்(து) அமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து.

2 வைப்புழிக் கோட்படா ; வாய்த்தியில் கேடில்லை ;
மிக்க சிறப்பின் அரசர் செறின்வவ்வார் ;

எச்சம் எனஒருவன் மக்கட்குச் செய்வன
விச்சை;மற்(று) அல்ல பிற.

3 இம்மை பயக்குமால் ; ஈயக் குறைவின்றால் ;
தம்மை விளக்குமால் ; தாமுளராக் கேடின்றால் ;
எம்மை உலகத்தும் யாம்காணேம், கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து.

புலவர்

4 தவலருந் தொல்கேள்வித் தன்மை உடையார்,
இகலிலர், எஃகுடையார், தம்முள் குழீஇ
நகலின் இனிதாயின் காண்பாம், அகல்வானத்(து)
உம்பர் உறைவார் பதி.

5 நுண்ணுணர்வி னொடு கூடி நுகர்வுடைமை
விண்ணுலகே ஒக்கும் விழைவிற்றால் ;—நுண்ணூல்
உணர்விலர் ஆகிய ஊதியம் இல்லார்ப்
புணர்தல் நிரயத்துள் ஒன்று.

6 களர்நிலத் துப்பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர் ;
கடைநிலத்தோர் ஆயினும், கற்றுணர்ந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்.

7 கல்லாரே ஆயினும், கற்றாரைச் சேர்ந்தொழுகின்,
நல்லறிவு நாளும் தலைப்படுவர் ;—தொல்சிறப்பின்
ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலால் புத்தேடு
தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு.

8 கற்றறிந்த நாவினர் சொல்லார்தம் சோர்வஞ்சி ;
மற்றையர் ஆவார் பகர்வர் : பணியின்மேல்
வற்றிய ஓலை கலகலக்கும் ; எஞ்ஞான்றும்
பச்சோலைக்(கு) இல்லை ஒலி.

9 புத்தகமே சாலத் தொகுத்தும் பொருள்தெரியார்
உய்த்தகம் எல்லாம் நிறைப்பினும்,—மற்றவற்றைப்

போற்றும் புலவரும் வேறே ; பொருள்தெரிந்து
தேற்றும் புலவரும் வேறு.

10 பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் பாடழிந்(து)
அல்லல் உழப்ப(து) அறிதிரேல்,—தொல்சிறப்பின்
நாவின் கிழத்தி உறைதலால் சேராளே
பூவின் கிழத்தி புலந்து.

11 நாருத் தகடேபோல் நன்மலர்மேல் பொற்பாவாய் !
நீருய் நிலத்து விளியரோ !—வேருய
புன்மக்கள் பக்கம் புகுவாய்நீ, பொன்போலும்
நன்மக்கள் பக்கம் துறந்து.

12 கல்லாது நீண்ட ஒருவன் உலகத்து
நல்லறி வாள ரிடைப்புக்கு—மெல்ல
இருப்பினும், நாயிருந் தற்றே ; இரா அ(து)
உரைப்பினும், நாய்குரைத் தற்று.

நட்பு

13 யானை அனையவர் நண்பொரீஇ, நாயனையார்
கேண்மை தழீஇக் கொளல்வேண்டும் : யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் ; எறிந்தவேல்
மெய்யதா வாள்குழைக்கும் நாய்.

14 பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும் ;—வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலும் தேயுமே
தானே சிறியார் தொடர்பு.

—சமண முனிவர்

4. அற நெறிச் சாரம்

கல்வி கேள்வி ஒழுக்கங்கள்

1 எப்பிறப் பாயினும் ஏமாப்(பு) ஒருவற்கு
மக்கட் பிறப்பிற் பிறிதில்லை;—அப்பிறப்பில்
கற்றலும், கற்றவை கேட்டலும், கேட்டதன்கண்
நிற்றலும் கூடப் பெறின்.

இலக்குமி தங்கும் இடம்

2 நல்வினைப்பின் அல்லால், நறுந்தா மரையாளும்
செல்லாள் சிறந்தார்பி னுயினும்;—நல்வினைதான்
ஒத்தும் ஒழுக்கமும் தானமும் உள்வழி
நீத்தல் ஒருபொழுதும் இல்.

தற்புகழ்ச்சி நீக்கத் தக்கது

3 'பலகற்றும் யாம்!'என்று தற்புகழ வேண்டா;
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையும் காக்கும்;
சிலகற்றார் கண்ணும் உளவாம், பலகற்றார்க்(கு)
அச்சாணி அன்னதோர் சொல்.

பொறுமை

4 எள்ளிப் பிறருரைக்கும் இன்னுச்சொல் தன்னெஞ்சில்
கொள்ளிவைத் தாற்போல் கொடிதெனினும்,—மெள்ள
அறிவென்னும் நீரால் அவித்தொழுக லாற்றின்,
பிறிதெனினும் வேண்டா தவம்.

இன்னு செய்யாமை

5 பிறர்க்கின்னு செய்தலின் பேதைமை இல்லை;
பிறர்க்கின்னு(து) என்றுபே ரிட்டுத் தனக்கின்னு
வித்தி விளைத்து வினைவிளைப்பக் காண்டலின்,
பித்தும் உளவோ பிற?

புறங் கூறுமை

6 முன்னின்(று) ஒருவன் முகத்தினும் வாயினும்
கன்னின்(று) உருகக் கலந்துரைத்துப்—பின்னின்று

இழித்துரைக்கும் சான்றோரை அஞ்சியே தேவர்
விழித்திமையா நின்ற நிலை.

கள்ளுண்டலின் இழிவு

7 ஒளியும், ஒளிசான்ற செய்கையும், சான்றோர்
தெளிவுடையர் என்றுரைக்கும் தேசும்—களியென்னும்
கட்டுரையால் கோதப் படுமேல், இவையெல்லாம்
விட்டொழியும் வேறாய் விரைந்து.

சூதாட்டத்தின் இழிவு

8 ஓதலும், ஓதி உணர்தலும், சான்றோரால்
மேதை எனப்படும் மேன்மையும்,—சூது
பொருமென்னும் சொல்லினுள் புல்லப் படுமேல்,
இருளாம் ஒருங்கே இவை.

தீய வழியில் பொருள் தேடி உண்ணலின் தாழ்வு

9 தனக்குத் தகவல்ல செய்தாங்கோர் ஆற்றல்
உனற்கு விரும்பும் குடரை—வனப்புற்ற
ஆம்பற்றாள் வாடலே போல அகத்தடக்கித்
தேம்பத்தாம் கொள்வ(து) அறிவு.

புலால் உண்ணலின் குற்றம்

10 தம்புண் கழுவி மருந்திடுவர் ; தாம்பிறிதின்
செம்புண் வறுத்த வறைதின்பர் ;—அந்தோ !
நடுநின்(று) உலக நயனிலா மாந்தர்
வடுவன்றோ செய்யும் வழக்கு ?

நண்பினர் இயல்பு

11 இம்மை அடக்கத்தைச் செய்து புகழாக்கி
உம்மை உயர்கதிக்(கு) உய்த்தலால்,—மெய்ம்மையே
பட்டாங்(கு) அறமுரைக்கும் பண்புடை யாளரே
நட்டார் எனப்படு வார்.

12 அறுதொழில் நீத்தாரை மெச்சா(து) அவற்றே(டு)
உறுநரைச் சார்ந்துய்யப் போதல்—இறுவரைமேல்
கண்ணில் முடவன் துணையாக நீள்கானம்
கண்ணிலான் சென்ற(து) உடைத்து.

—முனைப்பாடியார்

---

5. திருக்குறள்

1 அன்பின் வழிய(து) உயிர்நிலை ; அஃதிலாற்(கு)
என்புதோல் போர்த்த உடம்பு.

2 'கெடுவல்யான்' என்ப(து) அறிக ; தன் நெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின்.

3 கொல்லான், புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்.

4 காக்க பொருளா அடக்கத்தை ; ஆக்கம்
அதனினூஉங்(கு) இல்லை உயிர்க்கு.

5 சிறுமையுள் நீங்கிய இன்சொல், மறுமையும்
இம்மையும் இன்பம் தரும்.

6 ஒழுக்காறுக் கொள்க ஒருவன், தன் நெஞ்சத்(து)
அழுக்கா(று) இலாத இயல்பு.

7 கேடில் விழுச்செல்வம் கல்வி ; ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.

8 யாகாவார் ஆயினும், நாகாக்க ; காவாக்கால்,
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

9 உதவி வரைத்தன்(று) உதவி ; உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

10 எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் ; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

11 ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும், செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

12 மோப்பக் குழையும் அனிச்சம் ; முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

13 எல்லார்க்கும் நன்றும் பணிதல் ; அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து.

14 ஆற்றின் அளவறிந்(து) ஈக ; அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி.

15 வாய்மை எனப்படுவ(து) யாதெனின், யாதொன்றும்
தீமை இலாத சொலல்.

16 ஈகுதல் பொருட்டன்று நட்டல் ; மிகுதிக்கண்
மேற்சென்(று) இடித்தற் பொருட்டு.

17 வாள்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

18 நலம்வேண்டின், நாணுடைமை வேண்டும்; குலம்வேண்டின்,
வேண்டுக யார்க்கும் பணிவு.

---

6. நீதி நெறி விளக்கம்

1 இன்சொல்லன் தாழ்நடையன் ஆயினுமொன் றில்லானேல்,
வன்சொல்லின் அல்லது வாய்திறவா ;—என்சொலினும்,
கைத்துடையான் காற்கீழ் ஒதுங்கும் கடல்ஞாலம் ;
பித்துடைய அல்ல பிற.

2 கற்றோர்க்குக் கல்வி நலனே கலன் அல்லால்,
மற்றோர் அணிகலம் வேண்டாவாம் ;—முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா ; யாரே
அழகுக்(கு) அழகுசெய் வார் ?

3 தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை,
‘அம்மா ! பெரி(து !)’என்(று) அகமகிழ்க ;—தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக, ‘கற்றவெலாம்
எற்றே இவர்க்குநாம்!’ என்று.

4 கல்வி யுடைமை பொருளுடைமை என்றிரண்டு
செல்வமும் செல்வம் எனப்படும் ;—இல்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோல் தாமும்
தலைவணங்கித் தாழப் பெறின்.

5 பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன்(று) உண்டு :—பிறர்பிறர்
சீரெல்லாம் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்கும் தாழ்ச்சி சொலல்.

6 குலமகட்குத் தெய்வம் கொழுநனே ; மன்ற
புதல்வர்க்குத் தந்தையும் தாயும் ;—அறவோர்க்(கு)
அடிகளே தெய்வம் ; அனைவோர்க்கும் தெய்வம்
இலைமுகப் பைம்பூண் இறை.

7 நட்புப் பிரித்தல், பகைநட்டல், ஒற்றிகழ்தல்,
பக்கத்தார் யாரையும் ஐயுறுதல்,—தக்கார்
நெடுமொழி கோறல், குணம்பிறி(து) ஆதல்
கெடுவது காட்டும் குறி.

8 கண்ணேக்(கு) அரும்பா, நகைமுகமே நாள்மலரா,
இன்மொழியின் வாய்மையே தீங்காயா,—வண்மை
பலமா நலங்கனிந்த பண்புடையார் அன்றே
சலியாத கற்ப தரு ?

9 வாங்கும் கவளத்(து) ஒருசிறிது வாய்தப்பின்,
தூங்கும் களிறே துயருறு ;—ஆங்கதுகொண்(டு)
ஊரும் எறும்பிங்(கு) ஒருகோடி உய்யுமால்
ஆரும் கிளையோ(டு) அயின்று.

10 உலையா முயற்சி கலைகணை ஊழின்
வலிசிந்தும் வன்மையும் உண்டே;—உலகறியப்
பான்மூளை தின்று மறலி உயிர்குடித்த
கான்மூளையே போலும் கரி.

11 மெய்வருத்தம் பாரார், பசிநோக்கார், கண்துஞ்சார்,
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்,—செவ்வி

அருமையும் பாரார், அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்.

12 புறம்நட்(டு) அகம்வேர்ப்பார் நச்சுப் பகைமை
வெளியிட்டு வேறுதல் வேண்டும்;—கழிபெருங்
கண்ணோட்டம் செய்யார், கருவியிட்(டு) ஆற்றுவார்
புண்வைத்து மூடார் பொதிந்து.

13 இனியவர் என்சொலினும், இன்சொல்லே; இன்னர்
கனியும் மொழியும் கடுவே;—அனல்கொளுந்தும்
வெங்காரம் வெய்தெனினும், நோய்தீர்க்கும்; மெய்பொடிப்பச்
சிங்கி குளிர்ந்தும், கொலும்.

14 நல்லா(று) ஒழுக்கின் தலைநின்றார் நல்கூர்ந்தும்,
அல்லன செய்தற்(கு) ஒருப்படார்:—பல்பொறிய
செங்கண் புலியே(று) அறப்பசித்தும், தின்னுவாம்
பைங்கண் புனத்தபைங் கூழ்.

15 கற்புடுத்(து), அன்பு முடித்து,நாண் மெய்ப்பூசி,
நற்குண நற்செய்கை பூண்டாட்கு—மக்கட்பே(று)
என்பதோர் செல்வமு முண்டாயின், இல்லன்றே
கொண்டாற்குச் செய்தவம் வேறு?

—தமரகுருபரர்

———

III. கதை

1. நளவெண்பா

சுயம்வர காண்டம்

1 காமர் கயல்புரளக் காவி முகைநெகிழத்
தாமரையின் செந்தேன் தலையவிழப்—பூமடந்தை
தன்னுட்டம் போலுந் தகைமைத்தே சாகரஞ்சூழ்
நன்னாட்டின் முன்னாட்டும் நாடு.

2 மாமனுநூல் வாழ வருசந் திரன்சுவர்க்கி,
தாமரையாள் வைகும் தடந்தோளான்,—காமருபூந்
தாரான் முரணிநகர் தானென்று சாற்றலாம்
பாராளும் வேந்தன் பதி.

3 வாங்குவளைக் கையார் வதன மதிபூத்த
பூங்குவளைக் காட்டிடையே போயினன்;—தேங்குவளைத்
தேனுடி வண்டு சிறகுலர்த்தும் நீர்நாடன்
பூநாடிச் சோலை புக.

4 நீணிறத்தாற் சோலை நிறம்பெயர, நீடியதன்
தாணிறத்தாற் பொய்கைத் தலஞ்சிவப்ப,—மாணிறத்தான்
முன்னப்புள் தோன்றும் முளரித் தலைவைகும்
அன்னப்புள் தோன்றிற்றே ஆங்கு.

(அவ்வன்னப் பறவை நளன் கையிலகப்பட, அவன் அதற்கு யாதொரு துன்பமுஞ் செய்திலன்; அதைக் கண்டு களிப்படைந்து அவனை நோக்கி,)

5 "வீமன் திருமடந்தை மென்மாலை உன்னுடைய
வாம நெடும்புயத்தே வைகுவிப்பேன்;—சேம
நெடுங்குடையாய்!" என்றுரைத்து நீங்கியதே, அன்னம்
ஒடுங்கிடையாள் தான்பா லுயர்ந்து.

6 மன்னன் விடுத்த வடிவில் திகழ்கின்ற
அன்னம்போய்க் கன்னி அருகணைய,—நன்னுதலும்
தன்னுடல் விட்டுத் தனியிடஞ்சேர்ந்(து) ஆங்கதனை
"என்னுடல்? சொல்" என்ரு ளீங்கு.

7 "செம்மனத்தான், தண்ணளியான், செங்கோலான், மங்கையர்கள்
தம்மனத்தை வாங்கும் தடந்தோளான்,—மெய்ம்மை
நளனென்பான், மேனிலத்தும் நானிலத்தும் மிக்கான்
உளனென்பான் வேந்தன் உனக்கு.

8 "அறங்கிடந்த நெஞ்சும், அருளொழுகு கண்ணும்,
மறங்கிடந்த திண்தோள் வலியும்,—திறங்கிடந்த
செங்கண்மால் அல்லனேல், தேர்வேந்தர் ஒப்பரோ,
அங்கண்மா ஞாலத்(து) அவற்கு?"

9 "வாவி உறையும் மடவனமே! என்னுடைய
ஆவி உவந்தளித்தாய் ஆதியால்;—காவினிடைத்
தேர்வேந்தற் கென்னிலைமை சென்றுரைத்தி," என்றுரைத்தாள்
பார்வேந்தன் பாவை பதைத்து.

(தன் மகளாகிய தமயந்தி விவாக வயதெய்தியதைக் கண்டு.)

10 "மங்கை சுயம்வரநா ளேழென்று வார்முரசம்
எங்கும் அறை(க)"என்(று) இயம்பினான்;—பைங்கமுகின்
கூந்தல்மேல் கங்கைக் கொழுந்தோடும் நன்னுடன்
வேந்தர்மேல் தூதோட விட்டு.

(தமயந்தியின் சுயம்வரச் செய்தியறிந்த மன்னர் பலர், குண்டினபுர மடைந்து,)

11 புள்ளுறையும் சோலைகளும் பூங்கமல வாவிகளும்
உள்ளும் புறமும் இனிதுறைந்தார்;—தெள்ளரிக்கண்
பூமகளைப் பொன்னைப் பொருமேவல் விதர்ப்பன்தன்
கோமகளைத் தம்மனத்தே கொண்டு.

12 "கேட்ட சிறுமருங்குல் கீழ்மகளிர் நீள்வரம்பின்
இட்ட பசுங்குவளை ஏரடித்த—கட்டி
கரையத்தேன் ஊறுங் கடல்நாடன் ஊர்க்கு
விரையத்தேர் ஊர்," என்றான் வேந்து.

(தேரேறிச் சென்ற நளன், வீமன் நகராகிய குண்டினபுரத்தை அணுக,)

13 காவல் குடைவேந்தைக் கண்ணுற்று விண்ணவர்கோன்,
"ஏவல் தொழிலுக்(கு) இசை," என்றான்;—ஏவற்கு
மன்னவனும் நேர்ந்தான், மனத்திலுல் மற்றதனை
இன்னதென ஓரா(து) இசைந்து.

(இந்திரன் நளனை நோக்கி,)

14 "செங்கண் மதயானைத் தேர்வேந்தே! தேமாலை
எங்களிலே சூட்ட இயல்வீமன்—மங்கைபால்
தூதாக," என்றான்; அத் தோகையைத்தன் ஆகத்தே
கோதாக வென்றான்அக் கோ.

(பின்னர் நளன் அதற்கிணங்கிச் சென்று, தமயந்தியைக் கண்டான். அவள்,)

15 "காவல் கடந்தெங்கள் கன்னிமா டம்புகுந்தாய்
யாவனை! விஞ்சைக்(கு) இறைவனை!—தேவனை!
உள்ளவா சொல்," என்றாள்; ஊசல் குழைமீது
வெள்ளவாள் நீர்சோர விட்டு.

(தான் இன்னனென்பதைத் தமயந்திக்குணர்த்திய பிறகு,)

16 "என்னுரையை யாதென்(று) இகழா(து) இமையவர்வாழ்
பொன்னுலகம் காக்கும் புரவலனை,—மென்மாலை
சூட்டுவாய்," என்றான்; தொடையில்தேன் தும்பிக்கை
ஊட்டுவா னெல்லா முரைத்து.

17 போதரிக்கண் மாதராள், "பொன்மாலை சூட்டத்தான்
ஆதரித்தார் தம்மோ(டு) அவையகத்தே—சோதிச்
செழுந்தரள வெண்குடையாய்! தேவர்களும் நீயும்
எழுந்தருள்க," என்றாள் எடுத்து.

18 விண்ணவர்தம் ஏவலுடன் வீமன் திருமகள்பால்
நண்ணு புகழ்நளனும் நன்குரைத்த—பெண்ணணங்கின்
வன்மொழியுந் தேவர் மனமகிழத் தான்மொழிந்த
மென்மொழியும் சென்றுரைத்தான் மீண்டு.

19 "அங்கி அமுதம்நீர் அம்பூ அணியாடை
எங்குநீ வேண்டினமற்(று) அவ்விடத்தே—சங்கையறப்
பெற்றாய்," எனவருணன் ஆகண் டலன்தருமன்
மற்றோனு மீந்தார் வரம்.

20 வையம் பகலிழப்ப வானம் ஒளியிழப்பப்
பொய்கையும் நீள்கழியும் புள்ளிழப்பப்—பையவே
செவ்வாய அன்றில் துணையிழப்பச் சென்றடைந்தான்
வெவ்வாய் விரிகதிரோன் வெற்பு.

21 மல்லிகையே வெண்சங்கா வண்டே, வான்கருப்பு
வில்லி கணைதெரிந்து மெய்காப்ப,—முல்லைமலர்
மென்மாலை தோளசைய, மெல்ல நடந்ததே
புன்மாலை அந்திப் பொழுது.

22 ஊக்கிய சொல்லர், ஒலிக்குந் துடிக்குரலர்,
வீக்கிய கச்சையர், வேல்வாளர்—காக்க
இடையாமங் காவலர்கள் போந்தார், இருளின்
புடைவாய் இருள்புடைத்தாற் போன்று.

23 வில்லி கணையிழப்ப வெண்மதியும் சீரிழப்பத்
தொல்லை இருள்கிழியத் தோன்றினன்—வல்லி
மணமாலை வேட்டிடுதோள் வாளரசர் முன்னே
குணவாயில் செங்கதிரோன் குன்று.

24 மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள் :—மின்னிறத்துச்
செய்யதாள் வெள்ளைச் சிறையன்னம் செங்கமலப்
பொய்கைவாய்ப் போவதே போன்று.

25 மன்னர் குலமும் பெயரும் வளநாடும்
இன்ன பரிசென்(று) இயலணங்கு—முன்னின்று
தார்வேந்தன் பெற்ற தனிக்கொடிக்குக் காட்டினாள்
தேர்வேந்தர் தம்மைத் தெரிந்து.

26 காவலரைத் தன்சேடி காட்டக்கண்(டு) ஈரிருவர்
தேவர் நளனுருவாச் சென்றிருந்தார் ;—பூவரைந்த
மாசிலாப் பூங்குழலாள் மற்றவரைக் காணுறின்(று)
ஊசலா டுற்றுள் உளம்.

27 “மின்னுந்தார் வீமன்தன் மெய்ம்மரபில் செம்மைசேர்
கன்னியான் ஆகில், கடிமாலை—அன்னந்தான்
சொன்னவனைச் சூட்ட அருள்,” என்றுள் சூழ்விதியின்
மன்னவனைத் தன்மனத்தே வைத்து.

28 கண்ணிமைத்த லால்,அடிகள் காசினியில் தோய்தலால்,
வண்ண மலர்மாலை வாடுதலால்,—எண்ணி,

நறுந்தா மரைவிரும்பும் நன்னுதலே அன்னாள்
அறிந்தாள் நளன்தன்னை ஆங்கு.

29 விண்ணரசர் எல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்க,
கண்ணகல் ஞாலங் களிகூர,—மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட, வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன்.

30 திண்தோள் வயவேந்தர் சென்தா மரைமுகம்போய்,
வெண்தா மரையாய் வெளுத்தவே :—ஒண்தாரைக்
கோமாலை வேலான் குலமாலை வேற்கண்ணாள்
பூமாலை பெற்றிருந்த போது.

31 வேலை பெருவமுதம் வீமன் திருமடந்தை
மாலை பெருதகலும் வானுடர்—வேலை
பொருங்கலிநீர் ஞாலத்தைப் புன்னெறியி லாக்கும்
இருங்கலியைக் கண்டார் எதிர்.

32 "ஈங்குவர வென் ?" என்(று) இமையவர்தங் கோன்வினவ, அ,த
தீங்கு தருகலியும் செப்பினான் :—"நீங்கள்
விருப்பான வீமன் திருமடந்தை யோடும்
இருப்பான் வருகின்றேன் யான்."

33 "மன்னவரில் வைவேல் நளனே மதிவதனக்
கன்னி மணமாலை கைக்கொண்டான் ;—உன்னுடைய
உள்ளக் கருத்தை ஒழித்தே குதி," என்றான்
வெள்ளத் தனியானை வேந்து.

34 "விண்ணரசர் நிற்க வெறித்தே மணமாலை
மண்ணரசற்(கு) ஈந்த மடமாதின்—எண்ணம்
கெடுக்கின்றேன் ! மற்றவள்தன் கேள்வனுக்குங் கீழ்மை
கொடுக்கின்றேன் !" என்றான் கொதித்து.

35 வாய்மையும், செங்கோல் வளனும், மனத்தின்கண்
தூய்மையும், மற்றவன்தன் தோள்வலியும்,—பூமான்
நெடுங்கற்பும் மற்றவற்கு நின்றுரைத்துப் போனான்
அடுங்கொற்ற வச்சிரத்தான் ஆங்கு.

36 "செருக்கதிர்வேல் கண்ணியுடன் தேர்வேந்தன் கூடி
இருக்கத் தரியேன் : இவரைப்—பிரிக்க
உடனுக," என்றான் ; உடனே பிறந்த
விடனுக மன்னன் வெகுண்டு.

37 கணிமொழிந்த நாளில் கடிமணமுஞ் செய்தார்
அணிமொழிக்கு மண்ணல் அவற்கும் ;—பணிமொழியார்
குற்றேவல் செய்யக் கொழும்பொன் அறைபுக்கார் ;
மற்றேவர் ஓவ்வார் மகிழ்ந்து.

—புகழேந்திப் புலவர்

---

2. கும்பகர்ணன் அறவுரை

கும்பகர்ணன் கூற்று

1 "ஆனதோ வெஞ்சமம் ? அலகில் கற்புடைச்
சானகி துயரினம் தவிர்ந்த தில்லையோ ?
வானமும் வையமும் வளர்ந்த வான்புகழ்
போனதோ ? புகுந்ததோ பொன்றுங் காலமே ?

2 "கிட்டிய தொருசெருக் கிளர்பொற் சிதையைச்
சுட்டிய தோமுனஞ் சொன்ன சொற்களால் ?
திட்டியின் விடமன்ன கற்பின் செல்வியை
விட்டிலை யோ ? இது விதியின் வண்ணமே !

3 "கல்லா மூலகினை, வரம்பு கட்டவுஞ்
சொல்லாம், பெருவலி இராமன் தோள்களை
வெல்லா மென்பதும் சிதை மேனியைப்
புல்லா மென்பது போலு மாலைய!

4 "தையலை விட்டவன் சரணந் தாழ்ந்துநின்
மையறு தம்பியோ டளவ ளாவுதல்
உய்திறம் ; அன்றெனில், உளது வேறுமோர்
செய்திற முண்டது தெளிந்து கோடியால்."

இராவணன் சினம்

5 "உறுவது தெரியவன்(று) உன்னைக் கூயது ;
சிறுதொழில் மனிசரைக் கோறி சென்(று) ; எனக்(கு)

அறிவுடை அமைச்சனீ அல்லை ; அஞ்சினை ;
வெறுவிதுன் வீரம்,"என் (று) இவைவி ளம்பினன் :

6 "மானுடர் இருவரை வணங்கி, மற்றுமக்
கூனுடைக் குரங்கையும் கும்பிட் (டு) உய்தொழில்
ஊனுடை உம்பிக்கும் உனக்கு மேகடன் ;
யானது முடிக்கிலேன் ; எழுதி, போதியால்."

(இங்ஙனம் சினந்து கூறிய இராவணன் தானே போர் செய்யப் புறப் பட்டான்.)

7 அன்னது கண்டவன் தம்பி யானவன்
பொன்னடி வணங்கி,"நீ, பொறுத்தி யால்,"என
வன்னெடுஞ் சூலத்தை வலத்து வாங்கினன் ;
"இன்னுமொன் றுரையுள (து) :" என்னக் கூறினன்.

கும்பகர்ணன் இறுதி மொழி

8 "வென்றிவண் வருவனென் (று) உரைக்கி னென்விதி
நின்றது ; பிடர்பிடித் துந்த நின்றது ;
பொன்றுவன் ; பொன்றினுற் பொலன்கொள் தோளியை
நன்றென நாயக ! விடுதி நன்றரோ.

9 "இந்திரன் பகைஞனு மிராமன் தம்பிகை
மந்திர வலியினுல் மடிதல் வாய்மையால் ;
தந்திரங் காற்றுறு சாம்பர் ; பின்னரும்
மந்திர முணர்ந்தனக் குறுவ தாற்றுவாய்.

10 "என்னெவென் றுளரெனின், இலங்கை காவல !
உன்னெவென் றுயருத லுண்மை ; ஆதலால்,
பின்னெநின் றெண்ணுதல் பிழை ; அப் பெய்வளை
தன்னெநன் களிப்பது தவத்தின் பாலதே.

கும்பகர்ணன் விடை பெறல்

11 "இற்றைநாள் வரைமுதல் யான்முன் செய்தன
குற்றமு முளவெனிற் பொறுத்தி ; கொற்றவ !
அற்றதால் முகத்தினில் விழித்தல் ; ஆரிய !
பெற்றனென் விடை," எனப் பெயர்ந்து போயினன்.

காவலன் கலக்கம்

12 அவ்வழி இராவண னனைத்து நாட்டமும்
செவ்வழி நீரொடுங் குருதி தேக்கின ;
எவ்வழி யோர்களு மிரங்கி யேங்கினர் ;
இவ்வழி அவனும்போய் வாயி லெய்தினன்.

—இராமாயணம் - கம்பர்

---

3. சிவபிரான் தருமிக்குப் பொற்கிழி அளித்தது

(வங்கிய சூடாமணி, செண்பக மாறன் என்ற பெயர்களை உடைய ஒரு பாண்டியன் சோமசுந்தரக் கடவுளைப் பக்தியுடன் நாள்தோறும் வழி பட்டு வந்தான். அவன் சிவபெருமானுக்குப் பணி செய்து வரும் நாளில் இளவேனிற்காலம் வந்தது.)

1 இவ்விள வேனிற் காலத் தின்னுயிர்த் துணைவி யோடும்
செவ்விய செங்கோல் நேமிச் செண்பக மாறன் ஓர்நாள்
கைவ்வினை வல்லோன் செய்த கதிர்விடு காந்தக் குன்றில்
வெவ்விய வேடை நீப்பா னிருந்தனன் வேறு வைகி.

2 வெவ்விய வேலான் வீசும் வாசமோந்(து),"ஈது, வேறு
திவ்விய வாச மாக விருந்தது ! தென்றல் காவில்
வவ்விய வாச மன்று ! காலுக்கும் வாச மில்லை !
எவ்வியல் வாச மேயோ இது!"என எண்ணங் கொள்வான்.

3 திரும்பித்தன் தேவி தன்னை நோக்கினன் ; தேவி ஐம்பால்
இரும்பித்தை வாச மாகி இருந்தது கண்(டு),"இவ் வாசம்
சுரும்பிற்குந் தெரியா(து)!"என்னுச் சூழ்ந்திறும் பூது கொண்(டு),"ஈ(து)
அரும்பித்தைக் கியல்போ செய்கை யோ!"என ஐயங் கொண்டான்.

4 "ஐயுறு கருத்தை யாவ ராயினு மறிந்து பாடல்
செய்யுந ரவர்க்கே இன்ன ஆயிரஞ் செம்பொன்," என்(று)அக்
கையுறை வேலா னீந்த பொற்கிழி கைக்கொண் டேகி
மெய்யுறு புலவர் முன்னுத் தூக்கினர் வினைசெய் மாக்கள்.

(சிவபெருமான் மாயையினுல் பாண்டியன் உள்ளக் கருத்து, சங்கத்தார்க் குத் தெரியாமற் போயிற்று.)

5 அந்த வேலியி லாதி சைவரில்
வந்த மாணவன், மணஞ்செய் வேட்கையான்;
முந்தை ஆச்சிமம் முயலும் பெற்றியான்,
தந்தை தாயிலான், தருமி என்றுளான்.

6 "தந்தை தாயிலேன்; தனிய னாகிய
மைந்த னேன்;புது வதுவை வேட்கையேன்;
சிந்தை நோய்செயுஞ் செல்லல் தீர்ப்பதற்(கு)
எந்தை யே!இது பதம்,"என் றேத்தியே.

7 "ஐய! யாவையு மறிதி யேகொலோ!
வையை நாடவன் மனக்க ருத்துணர்ந்(து)
உய்ய ஓர்கவி உரைத்தெ னக்கருள்
செய்ய வேண்டும்,"என் றிரந்து செப்பினன்.

8 தென்ன வன்குலத் தெய்வ மாகிய
மன்னர், கொங்குதேர் வாழ்க்கை இன்றமிழ்
சொன்ன லம்பெறச் சொல்லி நல்கினர்.
இன்னல் தீர்ந்தவ னிறைஞ்சி வாங்கினன்.

(தருமி அப்பாடலைக் கைக்கொண்டு நாவலர் கழகம் நண்ணினான்.)

9 கல்வி யாளர்தம் கையில் நீட்டினன்.
வல்லை யாவரும் வாங்கி வாசியாச்
சொல்லின் செல்வமும் பொருளுந் தூக்கியே,
'நல்ல நல்ல!'என் றுவகை நண்ணினர்.

10 அளக்கில் கேள்வியா ரரசன் முன்புபோய்
விளக்கி அக்கவி விளம்பி னர்கள்;தன்
உளக்க ருத்துநேர் ஒத்த லாற்சிரம்
துளக்கி மீனவன் மகிழ்ச்சி தூங்கினன்.

11 வேந்த னேவலால் விபுதர் தம்மொடும்
போந்து மீண்டவைப் புறம்பு தூங்கிய
ஆய்ந்த பொற்கிழி அறுக்கும் நம்பியை
நேர்ந்து கீரன்'நில்!' எனவி லக்கினன்.

12 "குற்ற மிக்கவிக்(கு)" என்று கூறலும்,
கற்றி லாதெடுங் காலம் வெம்பசி
உற்ற வன்கலத் துண்ணு மெல்லைகைப்
பற்ற வாடினன் பண்பு பற்றினன்.

13 செய்யுள் கொண்டுபோய்த் திருமுன் வைத்துளப்
பையுள் கொண்டவப் பனவன், "என்னைநீ
மையுள் கண்ட!இவ் வழுவு பாடலைக்
கையுள் நல்கினுய் கதியி லேற்(கு?)"எனு.

14 " வறுமைநோய் பிணிப்பப் பன்னுள் வழிபடு மடியே னின்பாற்
பெறுபொரு ளிழந்தே னென்று பேசிலேன் ; யார்க்கு மேலாங்
கறைகெழு மிடற்றுேய்! நின்றன் கவிக்குற்றஞ் சில்வாழ் நாட்சிற்
றறிவுடைப் புலவர் சொன்னு லாருணை மதிக்க வல்லார்?

15 "எந்தைஇவ் விகழ்ச்சி நின்ன தல்லதை யெனக்கி யா(து?)"என்னுச்
சிந்தைநோ யுழந்து சைவச் சிறுவனின் றிரங்க, யார்க்கும்
பந்தமும் வீடும் வேதப் பனுவலும் பயனு மான
சுந்தர விடங்க னங்கோர் புலவனுய்த் தோற்றஞ் செய்தான்.

16 ஆரவை குறுகி நேர்நின் றங்கிருந் தவரை நோக்கி,
" யாரைநங் கவிக்குக் குற்ற மியம்பினுர்?" என்னு முன்னம்
கீரனுஞ் சாது, "நானே கிளத்தினேன்," என்றுன் ; நின்ற
சிரணி புலவன், "குற்றம் யா(து)?"எனத் தேராக் கீரன்

17 " சொற்குற்ற மின்று ; வேறு பொருட்குற்றம்," என்றுன் ; தூய
பொற்குற்ற வேணி அண்ணல், "பொருட்குற்ற மென்னை?" என்றுன்;
தற்குற்றம் வருவ தோரான், "புனைமலர்ச் சார்பா லன்றி
அற்குற்ற குழற்கு நாற்ற மில்லையே!" என்றுன் ; ஐயன்,

18 " பங்கய முகமென் சாயற் பதுமினி குழலோ?" என்ன,
" அங்கது மனைத்தே," என்றுன் ; ஆலவா யுடையான், "தெய்வ
மங்கையர் குழலோ?" என்ன, "அன்னதும் மந்தா ரத்தின்
கொங்கலரனைந்து நாறுங்கொள்கையாற் செய்கைத்(து)"என்றுன்.

19 "பரவிநீ வழிபட் டேத்தும் பாஞ்சுடர் திருக்கா ளத்தி
அரவுநீர்ச் சடையார் பாகத் தமர்ந்தஞா னப்பூங் கோதை

இரவினீர்ங் குழலு மற்றே?" என,"அஃது மற்றே,"என்னு
வெருவிலான் சலமே முற்றச் சாதித்தான் விளவு நோக்கான்.

20 கற்றைவார் சடையான் நெற்றிக் கண்ணினைச் சிறிதே காட்டப்
பற்றுவா னின்னு மஞ்சான், "உம்பரார் பதியோ லாகம்
முற்றுநீர் கண்ணு ளுலும் மொழிந்ததும் பாடல் குற்றம்
குற்றமே," என்றுன் தன்பா லாகிய குற்றம் தேரான்.

21 தேய்ந்த நாண்மதிக் கண்ணியான் நுதல்விழிச் செந்தீப்
பாய்ந்த வெம்மையிற் பொறுதுபொற் பங்கயத் தடத்துள்
ஆய்ந்த நாவலன் போய்விழுந் தாழ்ந்தனன் ; அவனைக்
காய்ந்த நாவலன் இம்மெனத் திருவுருக் கரந்தான்.

(பாவலனுய் வந்தவர் பரமசிவனே என்பதை அறிந்த சங்கப் புலவர்கள் நக்கீரரது பிழையினைப் பொறுத்தருளுமாறு அக்கடவுளே வேண்டினுர்கள். அவரும் கீரரைக் கரையேற்றிவிட்டார். பின்னர்,)

22 கற்ற கீரனுங் கலைஞரும் கழகமண் டபத்தில்
உற்ற ஆடகக் கிழியறுத் தந்தணற் குதவிக்
கொற்ற வேந்தனும் வரிசைகள் சிலசெயக் கொடுப்பித்(து)
அற்றம் நீங்கிய கல்வியின் செல்வரா யமர்ந்தார்.

—திருவிளையாடற் புராணம் - பரஞ்சோதி முனிவர்

———

4. அருச்சுனன் சோகமும் சபதமும்

(பதின்மூன்றும் நாட் போரில் அருச்சுனன் மைந்தனுகிய அபிமன்னு இறந்தானுக, அதனையறியாது அன்று போர் முடிந்ததும் அருச்சுன னும் கண்ணனும் பாசறை நோக்கி வந்துகொண்டிருந்தனர். அது காலை, கண்ணன் ஏவலால் இந்திரன் அந்தணன் வேடம் பூண்டு மகன் பிரிவாற்றுது தீக்குளிப்பான் போலத் தீயை வலம் வந்துகொண்டிருந் தான். அவனைத் தடுக்குமாறு கண்ணன் கூற, அருச்சுனன் போலி அந்தணனை இறுகத் தழுவிக்கொண்டு,)

1 "வீதலும் பிழைத்தல் தானும் விதிவழி அன்றி நம்மால்
ஆதலு மழிவு முண்டோ ? நின்னில்வே றறிஞ ருண்டோ ?
பூதலந் தன்னில் யாவர் புதல்வரோ டிறந்தா ரையா ?
சாதலிங் கியற்கை யன்(று)"என் றருளுடன் தடுத்த காலை.

2 தன்மக வுடன்தீ மூழ்கத் தவிர்ந்தநற் றவனு மீள
வின்மக ஞகி நின்ற விசயனை வெகுண்டு நோக்கி,
" என்மக னிறக்க என்னை இருத்தினை யாயின் அம்ம!
நின்மக னிறந்தா லென்சொல் மறுதொழி நீயும்," என்றான்.

(இந்நிகழ்ச்சிக்குப் பின்னர்க் கண்ணனுடு பாசறையை அணுகிய அருச்சுனன், யாவரும் புலம்புமோசையைக் கேட்டுக் கண்ணனைக் காரணம் யாதென வினவ, அவன் பேசாதிருந்தனன். உடனே,)

3 வன்கண னிளகிச் செங்கண் மாலடி வீழ்ந்து, "மேன்மேல்
என்கணுந் தோளு மார்பு மிடனுறத் துடிக்கை மாறு,
நின்கணு மருவி சோர நின்றனை ; இன்று போரிற்
புன்கணுற் றவர்கள் மற்றென் புதல்வரோ, துணைவர் தாமோ ?

4 " திருவுளத் துணரா தில்லை செப்பு(க)"என் றயர்வான் தன்னை,
மருவுறத் தழுவி, "திங்கள் மரபினுக் குரிய செல்வா!
வெருவுறப் பகையை வென்ற வீரனென் மருகன்," என்றென்(று)
அருவரைத் தோளி னனுக் குற்றவா றனைத்துஞ் சொன்னான்.

5 மைத்துன னுரைத்த மாற்ற மைத்துனன் செவிக்குத் தீக்கோல்
ஒத்திரு புறனும் வேவ உள்ளுறச் சுட்ட போது
புத்திர சோக மென்னு நஞ்சினுற் பொன்றி னன்போல்
அத்தடந் தேரி னின்று மவனிமே லயர்ந்து வீழ்ந்தான்.

(வீழ்ந்த அருச்சுனனைக் கண்ணன் எடுத்துச் சோகந் தீர்க்க, அவன் அபிமனை நோக்கிப் புலம்பலுற்றான் :)

6 " போரினில் துணைவ ரோடும் புயங்களே தனனை வென்று
பாரெனக் களித்தி நீயே யென்றுளம் பரிவு கூர்ந்தேன் ;
நேருனக் கொருவ ரில்லாய்! நீகளம் பட்டா யாகில்,
ஆரினிச் செகுக்க வல்லார்? ஐவருக் குரிய கோவே!

7 " சக்கரம் பிளந்த வாறும், தரியல ருடைந்த வாறும்,
துக்கர மான கொன்றைத் தொடையலால் வளைத்த வாறும்,
மெய்க்கரந் துணிந்த வாறும், மீண்டுருத் தடர்த்த வாறும்,
உக்கிர முடனென் முன்னே ஓடிவந் துரைசெய் யாயோ!

8 " பன்னக வரசன் பெற்ற பாவைமா மதலை தன்னை
முன்னுற முனையில் தோற்றேன்! மூர்க்கனேன் முடியா துண்டோ?

உன்னையு மின்று தோற்றேன்! உன்னுடன் தொடர்ந்து வாரா(து)
இன்னமு மிருக்கின் றேன்யான்! என்னுயிர்க் கிறுதி யுண்டோ?

9 "கதிரவ னுதிக்கு முன்னே கண்டுயி லுணர்த்தி யென்னை
அதிரமர்க் கோலங் கொள்வா னறிவுறுத் தூரைக்க வல்லாய்;
முதிரமர் முறுக்கி மீண்டே னித்தனைப் போதும்; முன்போல்
எதிர்வரக் காண்கி லேன்;இங் கில்லையோ! என்செய் தாயோ!

10 "தந்திர மியாவு மின்றித் தனித்துநீ தானே போர்செய்(து)
அந்தர மமையு மென்றிவ் வகலிடந் துறந்த ஐயா!
மைந்துட னம்மைக் காண மகன்மகன் வருகின் றனென்(று)
இந்திர னேவ வுன்னை இமையவ ரெதிர்கொண் டாரோ?

11 "தேரழிந் தெடுத்த வில்லுஞ் செங்கதிர் வாளு மின்றி
ஓருத வியும்பெ றாம லொழிந்துயி ரழிந்த மைந்தா!
போரம ருடற்றி நீயப் பொன்னக ரடைந்த போதுன்
பேரம ராண்மை கேட்டுப் பிதாமக னென்சொன் னானே!

12 "மற்புயக் குன்றி லொன்று வாளுடன் வீழ்ந்த பின்னும்
பொற்புறப் பொருத நீ,அப் பொன்னுல கடைந்த காலை
அற்புதப் படைகள் வல்லாய்! அபிமனே! அமரர் ஊரும்
கற்பகக் காவும் வானிற் கங்கையும் காட்டி னாரோ!

13 "வளைத்தவில் நிமிரா வண்ணம் வாளியான் மாவுந் தேருந்
துளைத்துமுன் காலா ளாகத் துரோணனைத் துரந்த வீரா!
திளைத்தவெஞ் சமரி னெந்து தனஞ்சயன் சிறுவன் மேனி
இளைத்ததென் றிந்தி ராணி இன்னமு தூட்டி னாளோ!"

(என்று அருச்சுனன் அரற்றியபோது வியாச முனிவன் அங்குத் தோன்றி அருச்சுனனைத் தேற்றிச் சென்றான்.)

14 தேற்றினு மகப்பரிவு தேறலரி தன்றே?
ஆற்றவரி தாதலி னருச்சுன னரற்றி,
"மாற்றரிய பேரழல்வ ளர்த்தி,"என வல்லே
ஏற்றதுண ராததன திளவலொ டுரைத்தான்.

15 மத்திரை மகன்கனல் வளர்க்க,அத னூடே
மித்திரரும் யாவரும் விலக்கவும் விலங்கான்,

"சித்திரவில் லோடுயிர்செ குப்பன்!"என நின்றான்.
புத்திரரி லாவிடர்பொ றுத்திடலு மாமோ!

16 அன்பொடு தழாய்முதல்வ னப்பொழு தழைக்க,
முன்புதழல் மூழ்கலொழி முனிவிரைவின் வாரா,
"நின்புதல்வ னெடெரியி னீபுகுத னெறியோ?
என்புதல்வ னெடெனையி றப்பதுத விர்த்தோய்!

17 "வழிப்படவ ழக்கின்வழி வருக,"என, முனிவன்
மொழிப்படிபொ றுத்தழலின் மூழ்குதொழில் மாறி,
விழிப்புனலின் மூழ்கிமனம் வெந்துதளர் வுறுவோன்
பழிப்படுசு ரத்தின்முளி பாதவம தானான்.

—பாரதம் - வில்லிபுத்தூரர்

---

5. குசேலர் சரிதை

1 பாயும் வல்லிருள் பருகுமொண் கதிர்மணிச் செஞ்சுட்(டு)
ஆயி ரந்தலை யலர்த்துபாம் பணைத்துயி லகற்றிக்
காயும் வெஞ்சினக் கட்செவித் தலையில்நின் றுமிழ்
மாய னன்பினன் குசேலன்என் றுளனொரு மறையோன்.

2 எனைத்தொன் றுயினு மெதிர்ந்தது மிசைந்துவண் டிரைக்கு'ம்
புனத்து ழாய்முகில் பொன்னடி கருதுமம் மறையோன்
மனைக்கி முத்தி,வெம் பசியினல் வாடிய முகத்தாள்,
பனித்த கண்ணினள், பவளவாய் திறந்தனள் பகர்வாள்:

3 "பொன்பி றங்கிய பூணணி திருமகள் கொழுநற்(கு)
அன்ப னுகியு மகன்றிலை வறுமை;மற் றன்னை!
மின்பி றங்கிய விழுமணி மார்பினுற் கண்டு
மன்பெ ரும்பொருள் வாரினை வரு(க)"என வகுத்தாள்.

4 வடித்த நான்மறை யந்தணன், "மாயனைக் காணின்
கொடுப்ப தென்?"எனக் குறுதுதல், அறவர்பாற் கொடுவந்(து)
இடித்த பாசவ லிரந்தவெண் துகில்பொதிந் தீந்து,
"நடத்தி," என்னலும் நசையிலன் மென்மெல நடந்தான்.

5 தெரியு நான்மறை இன்னமுந் தெரிவுறக் காண்டற்(கு)
அரிய னுகிய அரக்கிதழ் மூளரியஞ் செங்கண்
கரிய வன்தனைக் காணுறக் கடுகுபே ரன்பு
விரிய வெகினன்; விழுப்பெருங் கோயின்மே யினனால்.

6 மன்னர் மன்னவர் மணிமுடித் திரள்பொரு துக்க
பொன்நி வந்தொளிர் பொற்கடை முன்னிறந் தேகிக்
கன்னி யந்துழாய்க் கருமுகி லொருகனித் துவர்வாய்
அன்ன மென்னடை அரிவையோ டிருந்துழி அடைந்தான்.

7 உருகு காதலன் பைபைய வொல்கினன் வருதல்
மூருகு விம்முசெம் மூளரியஞ் செங்கணன் நோக்கி,
எரிபொன் சேக்கைநின் றெழுந்தெதிர் சென்(று),"இவண் வருக
வருக!" என்றுபொன் மார்புறத் தழீ இயினன், மகிழ்ந்தான்.

8 களித்த செங்கயல் கருங்கண்மா மாது,வெண் கவரி
வளைத்த ளிர்க்கையா லிரட்ட,மா மணியணை இருத்தி,
"இளைத்தி சால!"என் றிளநிலா ஒழுகுதூல் மார்பின்
அளிக்கு லஞ்செறி செய்யதா ணிந்து,பா களித்தான்.

9 "பயிற்று நான்மறைக் குரவன்அம் மனையவள் பணியால்
வெயிற்கு வெம்பிய கானிடை விராய்தரற் கேகிப்
புயற்க சைந்தொரு பொதும்பரி னிரவுநா மிருந்த(து)
அயர்த்தி போலும்!"என் றளவளாய் உசாவின னன்றே.

10 மூளைத்த வெண்ணிலா முறுவல்வாள் முகத்தின னுகி,
"அளிப்ப மற்றெனக் கென்கொடு வந்தனை? அன்ப!
ஒளிப்ப தென்னைநீ? உதவு(க)"என் றெள்ளரக் கூட்டும்
தளிர்க்கை யால்துகில் வாங்கினன் தனிமறை முதலி.

11 "பொருள்வி ழைந்திவன் போற்றலன் நமையொரு பொழுதும்;
திருவி ழைந்திவன் திருமனைக் கிழத்தி,'செல்(க)' என்ன,
வரவு வந்தனன்; மற்றிவற் களித்தும்,"என் றள்ளி
விரைக மழ்ந்தபூந் துளவினன் பாசவல் மிசைந்தான்.

12 "ஊர்ந்த காதலி னொருமுறை அருந்திய திறத்தால்
ஏந்த லிந்திர னெனக்கருஞ் செல்வமெய் தினனால்;
மாந்தல் மற்றினி," என்றுசெம் மலர்க்கரம் பிடித்தாள்
பூந்து ழாய்வரை மார்பக மகன்றிலாப் பூவை.

13 தடநெ கிழ்ந்தசெந் தாமரை யவள்குறிப் பறிந்து
விடுசு டர்ப்பனி வெண்ணகை முகிழ்த்தருள் சுரந்து,
மடைதி றந்தசெங் கண்ணினன், மறையவன் தனக்கு
விடைபு ரிந்தனன் ; வீறுசால் வேதிய னெழுந்தான்.

14 "அம்ம வுய்ந்தன முய்ந்தனம்! 'அரும்பொரு ளெய்தின்
மம்மர் கூர்தர மறக்குவன் நமை,'என மதித்தே
மும்மை சாலுல களித்தருள் முளரியஞ் செங்கண்
செம்மல் நல்கலன் செல்வம்,"என் றுவந்தனன் சென்றான்.

15 களித்த வண்டினங் களுலவாய் விரிந்ததண் தேறல்
துளித்த நாண்மலர்ச் சோலையுஞ் சுடர்மணித் தொழுதி
தெளித்தெ னத்திகழ் தீம்புனல் வாவியுஞ் செறிந்து
பளிக்கு மண்டபம் பல்குதன் மனையகம் படர்ந்தான்.

16 தெளிநி லாக்கதிர் சிந்திய வெள்ளிவெண் மாடம்
முளையி ளம்பிறை தவழ்விண் முகடுகீண் டோங்கி
அளகை காவல னருநிதி அறைதிறந் தென்ன
வளம லிந்தஅம் மனையகம் நோக்கினன் மயர்ந்தான்.

17 விலகி வில்லுமிழ் மீன்குழாத் தொள்ளொளி விரிக்கும்
கலைநி றைந்தவெண் மதியெனக் கவின்வழிந் தொழுகு
திலக வாள்நுதல் சிற்றிடைத் தெரிவையர் செறிய
இலகு பூணணிந் தில்லவள் வருதல்கண் டயிர்த்தான்.

18 பதியை நோக்கினன் ; பதிதொறும் பதிதொறுங் கிடந்த
நிதியை நோக்கினன் ; நேரிழை மடப்பிணை மருட்டும்
புதிய நோக்கொடு போதரு மனையவள் வதன
மதியை நோக்கினன் ; "மால்செய லி(து)!"என வலித்தான்.

19 பெறல ருந்திருப் பெற்றும்வெண் பிறைமருப் பொசித்த
இறைக ருங்கட லிருநிலம் பொதிந்ததாட் கமலம்
மறவி லன்றிலன், மாட்சிசால் பெருநல மாந்தி,
அறநி ரப்பிநின் றளவிலாத் தனிநெறி அடைந்தான்.

—பாகவத புராணம்—செவ்வைச் சூடுவார்

6. மெய்ப்பொருள் நாயனார்

1 சேதிநன் னாட்டு நீடு திருக்கோவ லூரில் மன்னி
மாதொரு பாக ரன்பின் வழிவரு மலாடர் கோமான்
வேதநன் னெறியின் வாய்மை விளங்கிட மேன்மை பூண்டு
காதலால் ஈசர்க் கன்பர் கருத்தறிந் தேவல் செய்வார்.

2 அரசியல் நெறியின் வந்த அறநெறி வழாமற் காத்து,
வரைநெடுந் தோளால் வென்று, மாற்றலர் மூனைகள் மாற்றி,
உரைதிறம் பாத நீதி ஓங்குநீர் மையினின் மிக்கார்;
திரைசெய்நீர்ச் சடையான் அன்பர் வேடமே கிந்தை செய்வார்.

3 இன்னவா றெழுகு நாளில் இகல்திறம் புரிந்தோர் மன்னன்
அன்னவர் தம்மை வெல்லும் ஆசையால் அமர்மேற் கொண்டு,
பொன்னணி ஓடை யானை பொருபரி காலாள் மற்றும்
பன்முறை இழந்து தோற்றுப் பரிபவப் பட்டுப் போனான்.

4 இப்படி இழந்த மாற்றான் இகலினால் வெல்ல மாட்டான்,
மெய்ப்பொருள் வேந்தன் சீலம் அறிந்துவெண் ணீறு சாத்தும்
அப்பெரு வேடங் கொண்டே அற்றத்தில் வெல்வா னுகச்
செப்பரு நிலைமை எண்ணித் திருக்கோவ லூரிற் சேர்வான்.

5 மெய்யெலாம் நீறு பூசி வேணிகள் முடித்துக் கட்டிக்
கையினிற் படைக ரந்த புத்தகக் கவளி ஏந்தி,
மைபொதி விளக்கே என்ன மனத்தினுட் கறுப்பு வைத்துப்
பொய்தவ வேடங் கொண்டு புகுந்தனன் முத்த நாதன்.

6 மாதவ வேடங் கொண்ட வன்கணான் மாடந் தோறும்
கோதைசூழ் அளக பாரக் குழைக்கொடி யாட மீது
சோதிவெண் கொடிக ளாடுஞ் சுடர்நெடு மறுகிற் போகிச்
சேதியர் பெருமான் கோயில் திருமணி வாயில் சேர்ந்தான்.

7 கடையுடைக் காவ லாளர் கைதொழு தேற நின்றே,
" உடையவர் தாமே வந்தார் உள்ளெழுந் தருளும்," என்னத்
தடைபல புக்க பின்பு தனித்தடை நின்ற தத்தன்,
" இடைதெரிந் தருள வேண்டும்; துயில்கொளு மிறைவன்,"
என்றான்.

8 என்றவன் கூறக் கேட்டே, "யான்அவற் குறுதி கூற
நின்றிடு நீயும்," என்றே, அவணையும் நீக்கிப் புக்குப்
பொன்திகழ் பள்ளிக் கட்டிற் புரவலர் துயில, மாடே
மன்றலங் குழல்மென் சாயல் மாதேவி இருப்பக் கண்டான்.

9 கண்டுசென் றணையும் போது கதுமென இழிந்து தேவி
வண்டலர் மாலை யாரை எழுப்பிட உணர்ந்து மன்னர்,
"அண்டர்நா யகனூர் தொண்ட ராம்!"எனக் குவித்த செங்கை
கொண்டிழிந் தெதிரே சென்று, கொள்கையின் வணங்கி நின்று,

10 "மங்கலம் பெருக மற்றென் வாழ்வுவந் தணைந்த தென்ன
இங்கெழுந் தருளப் பெற்ற தென்கொலோ?" என்று கூற,
"உங்கள்நா யகனூர் முன்னம் உரைத்தஆ கமநூல் மண்மேல்
எங்குமில் லாத தொன்று கொடுவந்தேன் இயம்ப," என்றான்.

11 "பேறெனக் கிதன்மே லுண்டோ! பிரானருள் செய்த இந்த
மாறிலா கமத்தை வாசித் தருள்செய வேண்டும்!" என்ன,
"நாறுபூங் கோதை மாதுந் தவிரவே நானும் நீயும்
வேறிடத் திருக்க வேண்டும்," என்றவன் விளம்ப, வேந்தர்,

12 திருமக ளென்ன நின்ற தேவியார் தம்மை நோக்கிப்
புரிவுடன் விரைய அந்தப் புரத்திடைப் போக ஏவித்
தருதவ வேடத் தானைத் தவிசின்மே லிருத்தித் தாமும்
இருநிலத் திருந்து போற்றி, " இனியருள் செய்யும்," என்றார்.

13 கைத்தலத் திருந்த வஞ்சக் கவளிகை மடிமேல் வைத்துப்
புத்தக மவிழ்ப்பான் போன்று புரிந்(து), அவர் வணங்கும் போதில்
பத்திரம் வாங்கித் தான்முன் நிணைந்தஅப் பரிசே செய்ய,
"மெய்த்தவ வேட மேமெய்ப் பொருள்!"எனத் தொழுது நின்றார்.

14 மறைத்தவன் புகுந்த போதே மனம்அங்கு வைத்த தத்தன்
இறைப்பொழு தின்கண் கூடி வாளினுல் எறிய வுற்றான்;
நிறைத்தசெங் குருதி சோர வீழ்கின்றார் நீண்ட கையால்
தறைப்படு மளவில், "தத்தா! நமர்!"எனத் தடுத்து வீழ்ந்தார்.

15 வேதணை எய்தி வீழ்ந்த வேந்தரால் விலக்கப் பட்ட
தாதனுந் தத்தன் தானுந் தலையினுல் வணங்கித் தாங்கி

"யாதுநான் செய்கேன்?" என்ன, "எம்பிரான் அடியார் போக
மீதிடை விலக்கா வண்ணங் கொண்டுபோய் விடுநீ," என்றார்.

16 அத்திறம் அறிந்தா ரெல்லாம், "அரசனைத் தீங்கு செய்த
பொய்த்தவன் தன்னைக்கொல்வோம்!"எனப்புடை சூழ்ந்தபோது
தத்தனும் அவரை எல்லாந் தடுத்துடன் கொண்டு போவான்,
"இத்தவன் போகப் பெற்ற திறைவர தாணை,"என்றான்.

17 அவ்வழி யவர்க ளெல்லாம் அஞ்சியே அகன்று நீங்கச்
செவ்விய நெறியில் தத்தன் திருநகர் கடந்து போந்து,
கைவ்வடி நெடுவா ளேந்தி ஆளுருக் கானஞ் சேர
வெவ்வினைக் கொடியோன் தன்னை விட்டபின் மீண்டு வந்தான்.

18 மற்றவன் கொண்டு போன வஞ்சனை வேடத் தான்மேற்
செற்றவர் தம்மை நீக்கித் தீதிலா நெறியில் விட்ட
சொற்றிறங் கேட்க வேண்டிச் சோர்கின்ற ஆவி தாங்கும்
கொற்றவர் முன்பு சென்றான் கோமகர் குறிப்பில் நின்றான்

19 சென்றடி வணங்கி நின்று, "செய்தவ வேடங் கொண்டு
வென்றவற் கிடையூ றின்றி விட்டனன்," என்று கூற,
"இன்றெனக் கையன் செய்த தியார்செய வல்லார்!" என்று
நின்றவன் தன்னை நோக்கி நிறைபெருங் கருணை கூர்ந்தார்.

20 அரசிய லாயத் தார்க்கும் அழிவுறுங் காத லார்க்கும்
விரவிய செய்கை யெல்லாம் விளம்புவார், "விதியி னாலே
பரவிய திருநீற் றன்பு பாதுகாத் துய்ப்பீர்," என்று
புரவலர் மன்று ளாடும் பூங்கழல் சிந்தை செய்தார்.

21 தொண்டனார்க் கிமயப் பாவை தூணைவனு ரவர்மூன் தம்மைக்
கண்டவா றெதிரே நின்று காட்சிதந் தருளி, மிக்க
அண்டவா னவர்கட் கெட்டா அருட்கழல் நீழல் சேரக்
கொண்டவா இடைய ருமற் கும்பிடுங் கொள்கை ஈந்தார்.

—பெரிய புராணம் - சேக்கிழார்

IV. பல் சுவை

1. மீனாட்சியம்மை குறம்

குறி கூறும் குறத்தி, தன் மலை இன்னதெனக் கூறல்

1 திங்கள்முடி சூடுமலை, தென்றல்விளை யாடுமலை,
தங்குபுயல் சூழுமலை, தமிழ்முனிவன் வாழுமலை,
அங்கயற்கண் ணம்மைதிரு வருள்சுரந்து பொழிவதெனப்
பொங்கருவி தூங்குமலை, போதியமலை என்மலையே.

2 கன்ன மதம்பெய் துறங்குகொலைக் களிறு கிடந்து பிளிறுமலை,
தென்னந் தமிழும் பசுங்குழவித் தென்றற் கொழுந்தும் திளைக்குமலை,
அன்னம் பயிலும் பொழிற்கூடல் அறலங் கூந்தற் பிடியாண்ட
பொன்னங் குடுமித் தடஞ்சாரற் பொதிய மலையென் மலையம்மே.

3 சிங்கமும்வெங் களிறும்உடன் விளையாடும் ஒருபால்;
கினப்புலியும் மடப்பிணையும் திளைத்திடமங் கொருபால்;
வெங்கரடி மரையினொடும் விளையாடும் ஒருபால்;
விடஅரவும் மடமயிலும் விருந்தயரும் ஒருபால்!
அங்கணமர் நிலங்கவிக்கும் வெண்கவிகை நிழற்கீழ்
அம்பொன்முடி சூடும்எங்கள் அபிடேக வல்லி
செங்கமலப் பதம்பரவும் கும்பமுனி பயிலும்
தென்பொதிய மலைகாண்மற் றெங்கள்மலை அம்மே.

குறக் குடியின் இயல் கூறல்

4 கொழுங்கொடியின் விழுந்தவள்ளிக் கிழங்குகல்லி யெடுப்போம்;
குறிஞ்சிமலர் தெரிந்துமுல்லைக் கொடியில்வைத்துத் தொடுப்போம்;
பழம்பிழிந்த கொழுஞ்சாறுந் தேறலும்வாய் மடுப்போம்;
பசுந்தழையும் மரவுரியும் இசைந்திடவே உடுப்போம்;
செழுந்தினையும் நறுந்தேனும் விருந்தருந்தக் கொடுப்போம்;
கினவேங்கைப் புலித்தோலின் பாயலிற்கண் படுப்போம்;
எழுந்துகயற் கணிகாலில் விழுந்துவினை கெடுப்போம்;
எங்கள்குறக் குடிக்கடுத்த இயல்பிதுகாண் அம்மே!

5 புல்வாயின் பார்வையைவெம் புலிப்பார்வை இணங்கும் ;
புதுத்தினைகல் லுரற்பாறை முன்றில்தொறும் உணங்கும் ;
கல்விடரில் வரிவேங்கை கடமாலே டுறங்கும் ;
கருமலையில் வெள்ளருவி கறங்கிவழிந் திறங்கும் ;
சில்வலையும் பல்வாரும் முன்னிறப்பில் தூங்கும் ;
சிறுதுடியும் பெருமுரசும் திசைதொறுநின் றேங்கும் ;
கொல்லையில்மான் பிணையும்இளம் பிடியும்விளை யாடும் ;
குறிச்சிளங்கள் குறச்சாதி குடியிருப்ப தம்மே !

வேண்டுவன செய்து, குறி கூறத் தொடங்கல்

6 குங்குமஞ்சந் தனக்குழம்பிற் குழைத்துத்தரை மெழுகி,
கோலமிட்டுக் குங்கிலியக் கொழும்புகையும் காட்டி,
செங்கனக நவமணிகள் திசைநான்கும் பரப்பி,
தென்மேலை மூலதனில் பிள்ளையாரும் வைத்து,
பொங்குநறு மலர் அறுகோ டைங்கரர்க்குச் சாத்தி,
புழுகுநெய்வார்த் திடுவிளக்கு நிறைநாழி வைத்து,
மங்கையருக் கரசியெங்கள் அங்கயற்கண் ணழுதை
மனத்துள்வைத்து நினைத்தகுறி இனிச்சொலக்கேள் அம்மே !

இதுவும் அது

7 மூந்நாழி முச்சிறங்கை நெல்லளந்து கொடுவா !
முறத்திலொரு படிநெல்லென் முன்னேவை அப்மே !
இந்நாழி நெல்லையுமுக் கூறுசெய்தோர் கூற்றை
இரட்டைபட எண்ணினபோ தொற்றைபட்ட தம்மே !
உன்னுமுன் வேள்விமலைப் பிள்ளையார்வந் துதித்தார் !
உனக்கினிஎண் ணியகருமம் இமைப்பினிற்கை கூடும் !
என்னணை ! எங்கள்குலக் கன்னிமார் அறிய
எக்குறிதப் பினும்தப்பா திக்குறிகாண் அம்மே !

கையைப் பார்த்து வியத்தல்

8 கொண்டுவா, அம்மே!கை கொண்டுவா அம்மே !
கொழுங்கனக நவமணிகள் அளைந்திடும்உன் கையே!
வண்டுசுலாம் மலர்கொய்ய வருந்திடும்உன் கைய !
வருந்தினர்க்கு நவநிதியம் சொரிந்திடும்உன் கையே !

புண்டரிகம் பூத்தழகு பொலிந்திடும்உன் கையே !
புழுகுறுநெய்ச் சொக்கர்புயம் தழுவிடும்உன் கையே !
அண்டர்நா யகிஎங்கள் மதுரைநா யகியை
அங்கயற்கண் ணுயகியைக் கும்பிடும்உன் கையே !

கையின் செயல்களைக் கண்டு குறி சொல்லல்

9 அம்மே !நின் செங்கையைநின் மார்பினில்வைத் ததுதான்
அபிடேகச் சொக்கர்உனை அணைவரென்ற குறிகாண் !
இம்மேலைத் திசையினிற்கை எடுத்ததுவும் அவர்தாம்
இன்றந்திப் பொழுதினில்வந் தெய்துவரென் றதுகாண் !
கைம்மேற்கை கட்டியதும் தப்பாமல் உனக்குக்
கைகூடும் நீநினைத்த காரியம்என் றதுகாண் !
செம்மேனி மணிவயிற்றில் கைவைத்த தினிநீ
சிறுவர்பதி னறுவரையும் பெறுவைஎன்ற தம்மே !

—குமரகுருபரர்

———

2. தனிச் செய்யுட்கள்

1 தண்ணீருங் காவிரியே ; தார்வேந்தன் சோழனே ;
மண்ணுவ துஞ்சோழ மண்டலமே ;—பெண்ணுவாள்
அம்பர்ச் சிலம்பி அரவிந்தத் தாளணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு.

—பேய்யா மொழியார்

2 பாரி பறித்த பறியும், பழையனூர்க்
காரிஅன் றீந்த களைக்கொட்டும்,—சேரமான்
'வாராய்' எனவழைத்த வாய்மையும் இம்மூன்றும்
நீலச்சிற் றுடைக்கு நேர்.

3 ஈதலறம், தீவினைவிட் டீட்டல்பொருள், எஞ்ஞான்றும்
காத லிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே இன்பம், பரனினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

4 தாயோ டறுசுவைபோம் ; தந்தையொடு கல்விபோம் ;
சேயோடு தான்பெற்ற செல்வம்போம் ;—ஆயவாழ்(வு)
உற்ரு ருடன்போம் ; உடன்பிறப்பால் தோள்வலிபோம் ;
பொற்ருலி யோடெவையும் போம். —ஔவையார்

5 கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில் அரிசிவரும் ;—குற்றி
உலையிலிட ஊரடங்கும் ; ஓரகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி எழும்.

6 நாணென்ரூல் நஞ்சிருக்கும் ! நற்சாபம் கற்சாபம் !
பாணந்தான் மண்தின்ற பாணமே ; —காளமேகப் புலவர்

—தாணுவே !
சீராரூர் மேவும் சிவனேநீ எப்படியோ
நேரார் புரமெரித்த நேர் ? —இரட்டையர்

7 ஆசு கவியால் அகில உலகெங்கும்
வீசு புகழ்க்காள மேகமே !—பூசுரா !
விண்கொண்ட செந்தழலாய் வேகுதே ; ஐயையோ !
மண்தின்ற பாணமென்ற வாய் ! —இரட்டையர்

8 நாராய் ! நாராய் ! செங்கால் நாராய் !
பழம்படு பணையின் கிழங்குபிளந் தன்ன
பவழக் கூர்வாய்ச் செங்கால் நாராய் !
நீயும்நின் மனையும் தென்றிசைக் குமரி
ஆடி வடதிசைக் கேகுவி ராயின்,
எம்மூர்ச் சத்திமுற்ற வாவியுள் தங்கி
நனைசுவர்க் கூரை கனைகுரல் பல்லி
பாடுபார்த் திருக்குமென் மனைவியைக் கண்டே,
'எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடையின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇப்

பேழையு ளிருக்கும் பாம்பென வுயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டனம்,' எனுமே.

—சத்திமுற்றப் புலவர்

9 கோரத்துக் கொப்போ கனவட்டம் அம்மானை !
கூறுவதுங் காவிரிக்கு வையையோ அம்மானை !
ஆருக்கு வேம்புநிகர் ஆகுமோ அம்மானை !
ஆதித்த னுக்குநிகர் அம்புலியோ அம்மானை !
வீரர்க்குள் வீரனொரு மீனவனே அம்மானை !
வெற்றிப்பு லிக்கொடிக்கு மீன்கொடியோ அம்மானை !
ஊருக்கு றந்தைநிகர் கொற்கையோ அம்மானை !
ஒக்குமோ சோணட்டைப் பாண்டிநா டம்மானை !

—ஓட்டக் கூத்தர்

10 திருநெடுமால் அவதாரம் சிறுபுலியோ அம்மானை !
சிவன்முடியி லேறுவதும் செங்கதிரோ அம்மானை !
ஒருமுனிவன் நேரியிலோ உரைதெளித்த தம்மானை !
ஒப்பரிய திருவிளையாட் டிறந்தையிலோ அம்மானை !
கரையெதிரே டேறியது காவிரியோ அம்மானை !
கடிப்பகைக்குத் தாதகியங் கண்ணியோ அம்மானை !
பரவைபணிந் ததுஞ்சோழன் பதந்தனிலோ அம்மானை !
பாண்டியனூர் பராக்கிரமம் பகரெளிதோ அம்மானை !

—புகழேந்திப் புலவர்

---

3. சிவபிரான் திருமணச் சிறப்பு

அகத்தியர் இரங்குதல்

1 "தூணெவிய ரொடுவானத் தொல்லுல(கு) உடையாரும்
பணமணி மணிநாகர் பாரிடர் முனிவோரும்,
மணவணி தொழுதுய்வான் இன்னமும் வருகின்றார் ;
அணைவுற தமியேனைத் தள்ளுவ தழகேயோ ?

2 "விரைசெலல் முனிவோர்கள் விரைகெழு சுனைதோய்வார்,
அரசிலை குசைமற்றம் அன்புடன் எதிர்உய்ப்பார்,
கரகமும் இசைசூழ்வார், அவரொடு களியாமே,
தெருமர அடியேனைத் தள்ளுதல் சீரேயோ ?

3 "பாடுவர் சிலரன்பர் ; பரவுவர் சிலரன்பர் ;
ஆடுவர் சிலரன்பர் ; அழுகுவர் சிலரன்பர் ;
ஓடுவர் சிலரன்பர் ; உவரொடு மகிழாமே,
வாடுற அடியேனைத் தள்ளுதல் மரபேயோ ?

4 "ஒளிமணி மழைதூர்ப்பார் ; ஒண்மலர் மழைதூர்ப்பார் ;
புளகமும் உடல்போர்ப்பார் ; புகழ்பல திசைபோர்ப்பார் ;
அளவறு மகிழ்கூர்ப்பார் ; அவரொடு கலவாமே,
தளர்வுற அடியேனைத் தள்ளுவ தருளேயோ ?

5 "'கண்டனம் மண இன்பம் ; காழுறு வினையெல்லாம்
விண்டனம ; உலவாத மேதகு சிவபோகம்
கொண்டனம்,' எனஆர்ப்பார் அவரொடு குலவாமே,
தொண்டுற அடியேனைத் தள்ளுதல் சூழேயோ ?

6 "சூழலவிழ் வதும்ஓரார் ; குழைவிழு வதும்ஓரார் ;
இழைசரி வதும்ஓரார் ; எதிரெதிர் மடமாதர்
மொழியுமங் கலஓதை இருசெவி முகவாமே,
கழிவுற அடியேனைத் தள்ளுதல் கடனேயோ ?

7 "முனிவரர் கணநாதர் அயன்அரி முதலானோர்
பனியறு கணிகாலைப் பேரிசை படமுன்பின்
எனஎழு நிறைபூசல் கண்டினி(து) உவவாமே,
மனமடி வுறஎன்னைத் தள்ளுதல் மாண்பேயோ ?

8 "மண்டிலம் மணிவேதி குண்டமும் மலிவித்திங்(கு)
எண்டிசை புகைவிம்ம எரியிடை இழுதூற்றித்
தண்டிரள் பொரிஅட்டும் தகவது காணுமே,
விண்டிட அடியேனைத் தள்ளுதல் விழைவேயோ ?

9 "ஒழுகொளி மணிவேய்ந்த கரகம துறுபான்மை
விழிமனை யவள்வார்ப்ப வெற்பிறை நினதாள்கள்
கழுவினன் மலர்தூவி வழிபடல் காணுமே,
அழிவுற அடியேனைத் தள்ளுதல் அறனேயோ ?

10 "காரொடு நிகர்கூந்தல் கன்னியை மலைவேந்தன்
நீரொடு நின்கையின் உதவிடும் நிறைகோலம்

ஆரொடு மதிவேய்ந்த அங்கண! காணுமே,
பேரிடர் உறஎன்னைத் தள்ளுதல் பெட்பேயோ ?

11 "ஒருவர்முன் அணிசாந்தம் ஒருவர்தம் முது(கு)அப்ப,
பருவிலை மணியாரம் பட்டுடல் வடுஆக,
நிரல்பட மிடைகுற்றூர் தொழுநிலை காணுமே,
பருவர அடியேனைத் தள்ளுதல் பண்பேயோ ?

12 "குடையொடு குடைதாக்க, கொடியொடு கொடிதாக்க,
படையொடு படைதாக்க, பண்ணவர் குழுவோடும்
விடைமிசை வருகோலம் விழிஎதிர் காணுமே,
கடைபட அடியேனைத் தள்ளுதல் கவினேயோ ?

13 "வாரண நிரைசூழ, வாம்பரி நிரைசூழ,
தேரணி நிரைசூழ, தேவர்கள் புடைசூழ,
ஏரணி நகர்சூழும் நினதெழில் காணுமே,
ஆரஞர் உறஎன்னைத் தள்ளுதல் அமைவேயோ ?

14 "மரகத வடிவாளும் மழவிடை அணையாயும்
ஒருமணி யணையும்பர் இனிதுறை உயர்கோலம்
இருவிழி களிகூரப் பருகுவ தில்லாமே,
பரிவுற அடியேனைத் தள்ளுதல் பாங்கேயோ ?"

—காஞ்சிப் புராணம் - சிவஞான முனிவர்

---

4. புற நானூறு

வீரத் தாய்

1 சிற்றில் நற்றூண் பற்றி, "நின்மகன்
யாண்டுளை னோ ?"என வினவுதி ; "என்மகன்
யாண்டுளை னெயினு மறியே னோரும் ;
புலிசேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறே இதுவே ;
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே."

—கோவற்பெண்டு

அறத்தின் சிறப்பு

2 இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிகன் ஆயலன் ; பிறரும்

சான்றோர் சென்றநெறியென
ஆங்குப் பட்டன்(று) அவன்கை வண்மையே.

வியப்பால் கூறியவை

3 விளங்குமணிக் கொடும்பூண் ஆஅய்! நின்னுட்(டு)
இளம்பிடி ஒருசூல் பத்தீ னும்மோ!
நின்னும்நின் மலையும் பாடி வருநர்க்(கு)
இன்முகங் காவா துவந்துநீ அளித்த
அண்ணல் யானை எண்ணில், கொங்கர்க்
குடகடல் ஓட்டிய ஞான்றைத்
தலைப்பெயர்த் திட்ட வேலினும் பலவே!

4 மழைக்கணஞ் சேக்கும் மாமலைக் கிழவன்
வழைப்பூங் கண்ணி வாய்வாள் அண்டிரன்
குன்றம் பாடின கொல்லோ?
களிறுமிக உடையஇக் கவின்பெறு காடே!

ஆய் இறந்த போது பாடியது

5 திண்டேர் இரவலர்க் கீத்த தண்தார்
அண்டிரன் வரூஉம் என்ன, ஒண்டொடி
வச்சிரத் தடக்கை நெடியோன் கோயிலுள்
போர்ப்புறு முரசங் கறங்க
ஆர்ப்பெழுந் தன்றால் விசும்பி னூனே!

—முடமோசியார்

கடன்

6 ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே;
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே;
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே;
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே;
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களி(று)எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.

—பொன்முடியார்

இனம் இனத்தோடு சேர்தல்

7 பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய ஆயினும், தொடைபுணர்ந்(து)
அருவிலை நன்கலம் அமைக்கும் காலை
ஒருவழித் தோன்றியாங்(கு), என்றும் சான்றோர்
சான்றோர் பாலர் ஆப;
சாலார் சாலார் பாலர் ஆ குபவே!

—கண்ணகனார்

கோடைத் திறம்

8 அறுகுளத் துகுத்தும் அகல்வயற் பொழிந்தும்
உறுமிடத் துதவா துவர்நில மூட்டியும்
வரையா மரபின் மாரி போல்க்
கடாஅ யானைக் கழற்காற் பேகன்
கொடைமடம் படுத லல்லது
படைமடம் படான்பிறர் படைமயக் குறினே.

—பரணர்

---

5. இயற்கை இன்பம்

1. காலை மாலைக் காட்சி

சேங்கதிர் வனப்பு

1 அடியவர் மனத்தி லுள்ள ஆரிருள் கங்குல் தீர்க்கும்
கெடியவ னிருக்க வென்று நிலவறை விரகிற் செய்த
கடியவ னியற்கை யஞ்சிக் கங்குலுங் கடிதிற் போகப்
படியவர் துயிலும் போகப் பரிதியும் உதயஞ் செய்தான்.

2 சிரந்தரு சுடிகை நாகத் திரள்மணி பலவுஞ் சிந்தி
நிரந்தர மருவி வீழும் நிறந்திக ழுதயக் குன்றில்
பரந்தெழு மருக்கன் சூழ்ந்த படரிருட் கங்குல் கண்டு
புரந்தரன் கோரயி லிட்ட பொங்கொளித் தீபம் போன்றான்.

—பாரதம் - வில்லிபுத்தூரார்

பண்டுவருங் குறிபகர்ந்து பாசறையின்
பொருள்வயினிற் பிரிந்து போன
வண்டுதொடர் நறுந்தெரிய லுயிரனைய
கொழுநர்வர மணித்தே ரோடும்
கண்டுமனங் களிசிறப்ப வொளிசிறந்து
மெலிவகலுங் கற்பி னுர்போல்,
புண்டரிகம் முகமலர, அகமலர்ந்து
பொலிந்தனபூம் பொய்கை யெல்லாம்.

—இராமாயணம் - கம்பர்

அந்தி மாலைச் சிறப்பு

4 நாற்றிசை உலகு தன்னில் நான்மறை உணர்ந்தோர் தாமும்
போற்றிசை மாலை என்னும் பொற்புடை அணங்கு வைக
மாற்றிசை விலாத செம்பொன் மண்டபந் தன்னி லாதி
மேற்றிசைக் கடவு ளிட்ட வெயின்மணிப் பீடம் போன்றுன்.

—பாரதம் - வில்லிபுத்தூரார்

நாள் மீன்களின் விளக்கம்

5 அங்கண் வானக முழுவது மவிரொளி பரப்பிக்
கங்குல் வாயடர் தாரகை எழுந்தன, கடலுள்
பொங்கு வெங்கதிர் மணிவிழுந் தெனத்திசை புரப்போர்
எங்கு நாடுதற் கெடுத்தவஞ் சுடரென இயையும்.

—நைடதம் - அதிவீரராம பாண்டியர்

தண்மதிப் பொலிவு

6 கானெலா மலர்ந்த முல்லை ககனமீ தெழுந்த தென்ன
வானெலாம் வயங்கு தாரை நிறைநிறை மலர்ந்து தோன்ற,
வேனிலான் விழுவின் வைத்த வெள்ளிவெண் கும்ப மென்னத்
தூநிலா மதியம் வந்து குணதிசைத் தோன்றிற் றம்மா.

—பாரதம் - வில்லிபுத்தூரார்

2. ஆற்று வெள்ளம்

1 கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்,
எல்லையில் மறைக ளாலும் இயம்பரும் பொருளீ தென்னத்
தொல்லையி லொன்றே யாகித் துறைதொறும் பரந்த சூழ்ச்சி
பல்பெருஞ் சமயஞ் சொல்லும் பொருளும்போற் பரந்த தன்றே.

2 தாதகு சோலை தோறும், சண்பகக் காடு தோறும்,
போதவிழ் பொய்கை தோறும், புதுமணல் தடங்கள் தோறும்,
மாதவி வேலிப் பூக வனந்தொறும், வயல்கள் தோறும்,
ஓதிய உடம்பு தோறும் உயிரென உலாய தன்றே.

—இராமாயணம்-கம்பர்

3. சோலைக் காட்சி

1 குயிலினம் வதுவை செய்யக் கொம்பிடை குனிக்கு மஞ்ஞை
அயில்விழி மகளி ராடும் அரங்கினுக் கழகு செய்யப்
பயில்சிறை அரச அன்னம் பனிமலர்ப் பள்ளி நின்றும்
துயிலெழத் தும்பி காலைச் செவ்வழி முரல்வ சோலை.

2 வரம்பின் வான்சிறை மதகுகள் முழவொலி வழங்க,
அரும்பு நாண்மலர் அசோகங்கள் அலர்விளக் கெடுப்ப,
நரம்பி னன்றதேன் தாரைகொள் நறுமலர் யாழின்
சுரும்பு பாண்செய, தோகைகின் றாடுவ சோலை.

—இராமாயணம்-கம்பர்

செவியறிவுறூஉ

உலகத் தீரே ! உலகத் தீரே !
நலந்தரு சின்மொழி நவிலுவன் நுமக்கே :
கேண்மின் நன்றுய் ; கேண்மின் நன்றுய் ;
காண்தகு நன்னெறி கடைப்பிடித் தொழுகல்,
எண்ணிய எல்லாம் இயம்பா திருத்தல்,
பண்புடை யனவெனப் பகரல் மிகையோ ?
எத்தொழில் செய்யினும், எண்ணிச் செய்மின் ;
இத்தலந் தன்னில் இருப்போர் பலரும்
அன்புடன் நும்மை அறிய வாழ்மின் ;
எனினும், ஏற்றம் இழப்பதை ஒழிமின் ;
அருங்குண முடையரை ஆய்ந்து பலகால்
இருதய மதனில் இருத்திக் கொண்மின் ;
வாக்கின் வாதம் வழங்குநர் தம்மொடு
தாக்கித் தருக்கம் செய்தல் ஒழிமின் ;
ஒருகால் நுழைய நேரின், நுந்தம்
அருமதி காட்டுமின் அவர்தம் மதிக்கே ;
உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்றே உன்னும்
இயல்பின் நீங்கி எல்லோர் உரைக்கும்
அருஞ்செவி கொடுமின் ; அருகிப் பேசுமின் ;
வருவாய்க் கேற்ப வாழ்க்கை செய்மின் ;
உடையே மாந்தர் உள்நிலை விளக்கும் ;
அதனால்,
தகைமைக் கமைந்த தகுமுடை தரிமின் ;
பொறுமின் போற்றுர் வன்மொழி பலவும் ;
அறுமின் நண்பீர் ! அறுமின் நண்பீர் !
கடனே கோடலும் கொடுத்தலு மிகவே ;
கடனுக் கொடுக்கும் கருந்தனம் பெரிதும்
தானும் சென்று தகுநட் புடைக்கும் ;
வானும் வையமும் வருவதே யாயினும்,
நீக்குமின் வஞ்சம் ; போக்குமின் பொய்யே
ஊக்கம் மிகுந்த உலகத் தீரே !

—தமிழாசிரியர், தை. ஆ. கனகசபாபதி முதலியார்

உரை நடை

1. கல்வியும் கைத்தொழிலும்

(சுவாமி வேதாசலம்[1] அவர்கள்)

இவ்வுலகத்திலுள்ள எல்லா மக்களும், தம்முயிரையும் உடம்பையும் பாதுகாத்து இனிது வாழ்வதற்கு இன்றியமையாத கருவிகள் இரண்டு; அவை, கல்வியும் கைத்தொழிலுமாகும். பெரும்பாலும் உலகத்தின்கண் நடக்கும் எல்லா முயற்சிகட்கும், கல்வியானது முதன்மையாக வேண்டப்பட்டு உடம்பைப் பாதுகாப்பதேயாயினும், சிறப்பாக நோக்குங்கால், கல்வி உயிரைப் பாதுகாத்து வளர்ப்பதற்கே கருவியாயிருக்கின்றது. கைத்தொழிலோ, எவ்வளவு நுட்பமாகச் செய்யப்படினும், அஃது உடம்பைப் பாதுகாக்கு முகத்தால், உயிர்க்குச் சிறிது பயன்படுமேயல்லாது, அது கல்விபோல உயிர்க்கு நேரே பயன்படுவதன்றும். ஆகவே, கல்வி ஒன்றே உயிர்க்கு நேரே பயன்படுவதாமென்பதும், கைத்தொழிலே உடம்பிற்கு நேரே பயன்படுவதாமென்பதும் அறிதல் வேண்டும். எத்தொழிலைச் செய்வதாயிருந்தாலும், அதற்கு அறிவு வேண்டியிருக்கின்றது. அறிவில்லாமல் எவரும் எதனையுஞ் செய்தலியலாது. அறிவுடையவன் தானெடுத்த ஒரு தொழிலைச் செவ்வையாய்ச் செய்து முடித்தலும், அறிவில்லாதவன் தான் தொடங்கியதொன்றை ஒழுங்காகச் செய்யமாட்டாமல் பிழைபட்டு வருந்துதலும், நாம் நாடோறுங் காண்கின்றேமல்லேமோ? அறிவில்லான் பிழைபட்டன்றிச் செய்யமாட்டாத ஒரு தொழிலை அறிவுடையான் திருத்தமாக விரைவிற்செய்து முடிப்பதனைக் கண்டு நாம் எவ்வளவு மகிழ்கின்றேம்! அப்போது அவன அறிவின் திறத்தைக் கண்டு எவ்வளவு வியப்படைகின்றேம்! அறிவின் இன்றியமையாமையை எவ்வளவு மிகுதியாய் உணர்கின்றேம்!

இத்துணைச் சிறந்த அறிவை எவரும் இயற்கையாகவே பெற்றுக் கொள்ள இயலாது; ஏனென்றால், எல்லா உயிர்களின் அறிவையும் அறியாமை என்னும் ஒரு பேரிருள் மறைத்துக்கொண்டிருக்கின்றது. இருளைப் போக்குதற்கு ஒளியினுதவி கட்டாயமாகவேண்டப்படுதல் போல, நமதறிவை மறைக்கும் அறியாமையாகிய இருளைப் போக்குதற்கும் கல்வியாகிய விளக்கம் இன்றியமையாது வேண்டப்படுகின்றது. 'கல்வியில்லாதாரிற் சிலரும் அறிவுடையோராக இருக்கக் காண்கின்றேமே!' என்றால், அவர் அறிவுடையார் செய்யும் சில அறிவுச்

செயல்களைப் பார்த்தும் பழகியும் சிறிது அறிவுடையாராகக் காணப் படினும், அவர் போலியாகப் பெற்ற அச்சிற்றறிவை மேன்மேற் பெருகச் செய்தற்குக் கல்வியில்லாமையால், அவர் அறிவு பயனின்றுய்க் கழியும். ஆகையால், கல்வியறிவு இல்லாதவர் அதிற் சிறந்து விளங்குவதும், அறிவிற் சிறந்த தொழில்களைச் செய்து முடிப்பதும் இயலா. உடற்பாதுகாப்பின் பொருட்டு எத்தொழிலைச் செய்தாலும், கல்வியின்றி அதனைச் செய்தலாகாது. நம் நாட்டவர்களோ, வயிறு வளர்ப்பதற்குச் சோறுகிடைத்தாற் போதுமென்றும், இப்பிறப்பில் அடைய வேண்டிய இன்பங்களைப் பெறுதற்கு ஏராளமான பொருளைத் தொகுத்துக்கொண்டாற் போதுமென்றுஞ் சொல்லிக் கல்வி கல்லாமல், அறியாமையிலேயே தமது காலத்தைக் கழித்து மாண்டு போகின்றார்கள். எல்லா அருளும் இரக்கமுமுடைய இறைவன் நமக்கு இந்தப் பிறவியைக் கொடுத்தது வெறுஞ்சோறு தின்பதற்கும், பொருள் சேர்ப்பதற்கும்மட்டும் அன்று; மற்று இந்த உடம்பைப் பாதுகாக்கு முகத்தால் அறிவை வளர்த்து, அறியாமையைத் தொலைத்து, அவனது பேரின்பத்தைப் பெறுதற்கேயாம். இம்மை யின்பங்களைச் செவ்வையாயடைந்து மகிழ்ந்திருத்தற்கும் கல்வியறிவு கட்டாயம் வேண்டப்படுவதாகும்.

உயர்ந்த கல்வியறிவில்லாதவன் எவ்வளவு பொருளைச் சேர்த்து வைத்தாலும், எவ்வளவு உணவுப் பண்டங்களைத் தொகுத்துக்கொண்டாலும் அவற்றை நுட்பமாகத் துய்த்து மகிழும்வழி அறியாமையால் துன்பத்திலேயே கிடந்துழன்று மாய்ந்துபோவான். ஆகவே, இம்மை யின்பத்தைப் பெற வேண்டுவார்க்கும் கல்வியறிவு முதன்மையாகு மென்பதை எல்லாருங் கருத்திற் பதித்தல் வேண்டும்; ஆகவே, கைத் தொழிலையே பெரிதாக எண்ணி அதிற் புகுந்தவர்களும் கல்வியறிவைப் பெறுதற்கு இடையறாது முயலல் வேண்டும். ஐரோப்பா முதலான அயல் நாடுகளிலுள்ள மேன்மக்களோ, கல்வியறிவில்லாமல் எத்தகைய தொழிலுஞ் செய்ய மாட்டார்கள். அவர்களில் எந்தத் தொழிலைச் செய்கின்றவரும் கல்வியறிவிற் சிறந்தவராகவே காணப் படுகின்றனர். அதனால், அவர்கள் நம் முன்னோர்க்கு நீண்ட காலம் பிடிக்கும் ஒரு கைத்தொழிலை மிகச் சுருங்கிய காலத்தில் சுருங்கிய செலவில் நேர்த்தியாகவும் திறமையாகவும் செய்து முடிக்கின்றனர். கல்வியறிவில்லா நம்மனோர் தம்மை வருத்தியும், வாயற்ற மாடு குதிரை முதலியவைகளை வருத்தியும் செய்யும் ஒரு கைத்தொழிலை

ஐரோப்பிய நன்மக்கள் தமக்குள்ள கல்வியறிவால் அருமையான இயந்திரங்களை (பொறிகளை) அமைத்து அவற்றினுதவியால், தமக்கும் பிற உயிர்க்கும் துன்பமின்றி இனிது முடிக்கின்றனர். இன்னும் இவர்கள் தங்களுக்குள்ள கல்வியறிவின் மேன்மையால் நாளுக்கு நாள் எல்லா முயற்சியிலும் பிறைமதிபோல வளர்ந்தோங்கி வருதலையும், அஃதில்லா நம்மனோர் அம்முயற்சிகளில் குறைமதிபோலத் தேய்ந்து போதலையும் அறியாதார் யார்?

ஆகையால், எத்தகைய முயற்சிகளிற் புகுவோரும் முதலிற் கல்வியறிவைப் பெறுதலிற் கருத்தூன்றக் கடவராக. இனிக் கல்வியறிவின் உதவிகொண்டு செய்யப்படும் எல்லாக் கைதொழில் முயற்சிகளும் உழவு, நெசவு, வாணிகம் என்னும் மூன்று பகுதியிலே அடங்கும். அவற்றுள் உழவுத் தொழில் உடம்பைப் பாதுகாத்தற்கு முதன்மையான உணவுப் பொருள்களைத் தருவதொன்றுகையால், அது மற்றையிரண்டினும் சிறந்ததென்று ஆன்றோரால் உயர்த்து வைக்கப் படுவதாயிற்று. அவ்வுண்மையை,

> "ஆற்றங் கரையின் மரமும், அரசறிய
> வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே?—எற்றம்
> உழுதுண்டு வாழ்வதற்(கு) ஒப்பில்லை கண்டீர்
> பழுதுண்டு வேறூர் பணிக்கு."

என்று ஔவையார் அருளிச்செய்த மெய்ம்மொழிகளால் அறிந்து கொள்க. இவ்வளவு சிறந்த தொழிலை, நம் நாட்டவர்கள் சிறிதுந் தாழ்வாக நினையாமல், அதனைப் பல வகையாலும் பயன் மிகத் தருப்படி மேன்மேற் பெருகச் செய்தல் வேண்டும். அமெரிக்கா, ஐரோப்பா முதலான நாடுகளிலுள்ள மேலோர்கள் நிலத்தை வளப்படுத்துதற்குரிய புதிய புதிய முறைகளைக் கையாண்டு, காலத்திற்கேற்ற பயிர்களை விளைவித்து ஏராளமான தானியங்களையும், மற்றப் பண்டங்களையும், உணவுப் பொருள்களையும் பெறுகின்றார்கள். மழை பெய்ய வேண்டுங் காலத்து மழை பெய்யாவிட்டாலும், அதனால் அவர்கள் கேடுறாமல் மின் விளக்குகளின் உதவியினாலும் வேறு சில முறைகளினாலும் பயிர் பச்சைகளை விளைவித்துக்கொள்கின்றார்கள். நம் நாட்டவர்களோ என்றால், ஒரு மழை தவறினாலும், பயிர் பச்சைகளை வளர்க்கும் வழி தெரியாது, கொடும்பஞ்சத்திற்கு உள்ளாகி, மிகவுந் துன்புறுகின்றார்கள். மேலும், பல பல பயிர்களின் தன்மைகட்கு இசையப் பல திறப்பட்ட எருக்களை அவர்கள் திறமையாகச் சேர்ப்பது

போல, நம்மவர்க்குச் சேர்க்கத் தெரியாது. பயிர்கட்குத் தக்கவாறு செவ்வையான எருச்சேர்க்க நம்மவர்களும் கற்றுக்கொள்வார்களாயின் இப்போது அடையும் ஊதியத்தினும் பதின்மடங்கு மிகுதியான ஊதியத்தைப் பெறுவார்களென்பதில் எட்டுணையும் ஐயமின்று. இங்ஙனமே பயிர்த் தொழிலில் அறியற்பாலனவாய் உள்ள நுட்பங்கள் எண்ணிறந்தன. இவையெல்லாம் கல்வியறிவின்றி வரமாட்டா; ஆகையால், இவற்றைக் கல்வியறிவால் ஆராய்ந்தறிந்து உழவுத் தொழிலைச் சிறக்கச் செய்வார்களாயின், நம்மவர்களும் நம் நாடும், மற்ற எல்லாரையும் எல்லா நாடுகளையும்விட மிகச் சிறந்து விளங்கலாமென்பது திண்ணம்.

இனி, உழவுத் தொழிலிற்கு அடுத்த நிலையில் அகத்தியமாகச் செயற்பாலது நெய்தற்றொழிலேயாகும். நாகரிக வாழ்க்கையுள்ள எத்திறத்தவரும் தமது உடம்பை மறைத்தற்கு ஆடைகளை வேண்டி நின்கின்றனரன்றே! 'ஆடையில்லா மனிதன் அரை மனிதன்,' என்ற பழமொழிப்படி, மேலே துணியில்லாதவர் விலங்குகளினுந் தாழ்ந்தவராகக் கருதப்படுவர். மக்கள் தங்களறிவுகொண்டு ஆடைகளை நெய்து உடுக்க வேண்டியவர்களாயிருக்கின்றார்கள்; உடம்பைப் பாதுகாத்தற்கு இன்றியமையாச் சிறப்பினதான உணவைத் தருதல் பற்றி உழவுத்தொழில் எல்லாத் தொழிலிலும் மேலானதென்று சொல்லப்படினும், தீவினை ஒரு சிறிதுமில்லாத தொழில் எதுவென்று ஆராயுமிடத்து, அது நெய்தற்றொழிலாகவேயிருத்தலால், அவ்வகையில் அஃது உழவுத் தொழிலிலும் மேலானதென்றே கொள்ளப்படும். இதுபற்றியன்றே தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் உழவுத் தொழிலையே சிறப்பித்துக் கூறினராயினும், தாம் நெய்தற்றொழிலையே செய்துகொண்டு உயிர் வாழ்ந்தனர்? உழவு செய்யுங்கால் சிற்றுயிர்கள் சில மாளுதலின், அதிற் சிறிது தீவினை உண்டென்றும், நெய்தற் றொழிலில் ஒருயிர்க்குந் தீங்கின்மையின் அதிற் சிறிதும் தீவினையில்லையென்றும் அறிதல் வேண்டும். இத்துணைச் சிறந்த நெய்தற்றொழிலை அயல் நாட்டவர்கள் வியப்பான பல பொறிகளமைத்து நிரம்பத் திறமாக நடத்தி, அளவிறந்த ஊதியத்தை எய்த, நம் நாட்டவர்களோ, கல்வியறிவின்மையால் இதில் மிகவும் பிற்பட்ட நிலைமையினையடைந்து ஏழைகளாயிருக்கின்றார்கள். இனியாயினும், அவர் இங்ஙனம் கல்வியை இகழ்ந்திராது, அதனைத் தாமுங் கற்றுத் தம்மக்கட்குங் நன்கு கற்பித்து நெய்தற்றொழிலைச் செவ்வையாய் நடத்தி வாழ்வாராக.

இனி உழவுத் தொழிலானும், நெய்தற்றொழிலானும் உண்டாக்கிய பொருள்களை ஒன்றற்கொன்று தொலைவாகவுள்ள பற்பல நாடுகளிலும் உள்ள மக்கட்குப் பயன்படும்படி சேர்ப்பித்தற்கு வாணிகமானது மிக உதவியான தொழிலாகும். இத்தொழில் நடைபெறுதலால், எல்லாரும் எல்லாப் பொருள்களையும் பெற்று இன்புற்று வாழ்தல் முடியாது. எந்தெந்த நாட்டில் எந்தெந்தப் பொருள்கள் நயமாய்க் கிடைக்குமென்பதை ஆராய்ந்தறிந்து, அவற்றை ஓரிடத்தில் தொகுத்துப் பலர்க்கும் பயன்படுத்தித் தாமும் அடைதற்குக் கல்வியறிவு கட்டாயம் வேண்டப்படும். வாணிகம் நடத்துவார்க்குக் கல்வியறிவு அகத்தியமாய் வேண்டப்படுமென்பதை உணர்ந்த அயல்நாட்டவர்கள் கல்வியறிவிற் சிறந்தவர்களாயிருக்கின்றார்கள். நம் நாட்டில் வாணிகம் நடாத்துகின்றவர்களோ, எழுதப் படிக்கச் சிறிது தெரித்தாற் போதுமென்று மனப்பால் குடித்துக் கல்வியில்லாதவர்களாய்க் காலங் கழிக்கின்றார்கள். இவர்களில் எவ்வளவு பணம் படைத்தவர்களாயிருந்தாலும் இவர்களைக் கல்வி யறிவிற் சிறந்த அயல்நாட்டு வாணிகர்கள் பொருட்படுத்துவதேயில்லை. இங்ஙனம் தாம் கல்வியறிவுடைய பிறரால் இகழப்படுதல் உணர்ந்தாயினும், இனிமேல், தாமும், தம் மக்களும், தம்மினத்தவரும் கல்வியில் மேம்பட்டு விளங்க முயன்று, அதனால் வாணிக வாழ்க்கையை எல்லாரும் புகழும்படி நடத்திச் சிறப்பெய்துவாராக.

2. சீவ காருணியம்

(சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள்)

பசியில்லாவிடில் சீவர்கள் ஆகாரங் குறித்து ஒருவரை யொருவர் எதிர் பார்க்கமாட்டார்கள்; எதிர் பாராத பக்ஷத்தில் உப காரச் செய்கை தோன்றுது. அது தோன்றுதபோது சீவ காருணியம் விளங்காது. அது விளங்காதபோது கடவுள் அருள் கிடைக்க மாட் டாது. ஆதலால், பசியும் கடவுளாற் கொடுக்கப்பட்ட ஓர் உபகாரக் கருவியென்றே அறிய வேண்டும். பசியினால் துன்பப்படுகின்றவர் ஆகாரத்தைக் கண்ட காலத்தில் அடைகின்ற சந்தோஷம், தாய் பிதா பெண்டு பிள்ளை காணி பூமி பொன் மணி முதலானவைகளைக் கண்ட காலத்திலும் அடையார்களாயின், ஆகாரம் உண்ட காலத்தில் உண்டாகுஞ் சந்தோஷம் எப்படிப்பட்டதாக இருக்கும்! பசியென்கிற நெருப்பானது, ஏழைகள் தேகத்தினுள் பற்றி எரிகின்றபோது ஆகாரத்தால் அவிக்கின்றதுதான் சீவ காருணியம்; பசியென்கிற விஷக் காற்றானது ஏழைகளின் அறிவாகிய விளக்கை அவிக்கின்ற தருணத்தில் ஆகாரங் கொடுத்து அவியாமல் ஏற்றுகின்றதே சீவ காருணியம்; கடவுளியற்கை விளக்கத்திற்கு இடமாகிய சீவ தேகங்களென்கிற ஆலயங்கள் பசியினால் பாழாகுந் தருணத்தில் ஆகா ரங் கொடுத்து அவ்வாலயங்களை விளக்கஞ் செய்விப்பதே சீவ காருணி யம்; கடவுளின்பத்தைப் பெறுகின்ற நிமித்தம் தேகங்களிலிருந்து குடித்தனஞ் செய்கின்ற சீவரது தத்துவக் குடும்பமுழுவதும், பசி யினால் நிலை தடுமாறி அழியுந் தருணத்தில் ஆகாரங் கொடுத்து, அக் குடும்ப முழுதும் நிலைபெறச் செய்வதே சீவ காருணியம்; பசியென் கிற புலியானது, ஏழை உயிர்களைப் பாய்ந்து கொல்லத் தொடங்குந் தருணத்தில் அப்புலியைக் கொன்று, அவ்வுயிர்களை இரட்சிப்பதே சீவ காருணியம். பசியென்கிற விஷந் தலைக்கேறிச் சீவர்கள் மயங்குந் தருணத்தில் ஆகாரத்தால் அவ்விஷத்தை இறக்கி, மயக்கந் தெளியச் செய்வதே சீவ காருணியம். பசியென்கிற கொடுமையாகிய தேள், வயிற்றிற் புகுந்து கொட்டுகின்றபோது கடுப்பேறிக் கலங்குகின்ற ஏழைகளுக்கு ஆகாரத்தால் அக்கடுப்பை மாற்றிக் கலக்கத்தைத் தீர்ப்பதே சீவ காருணியம். 'நேற்று இராப்பகல் முழுதும் நம்மை அரைப்பங்கு கொன்று தின்ற பசியென்கிற பாவி இன்றும் வருமே! இதற்கு என்ன செய்வோம்!' என்று ஏக்கங் கொள்கின்ற ஏழைச் சீவர்களது ஏக்கத்தை நீக்குவதுதான் சீவ காருணியம். 'வெயிலேறப்

போகின்றதே! இனிப் பசியென்கிற வேதனை வந்து சம்பவிக்குமே! இந்த விதி வசத்திற்கு என்ன செய்வது!' என்று தேனில் விழுந்த ஈயைப்போலத் திகைக்கின்ற ஏழைச் சீவர்களுடைய திகைப்பை நீக்குவதுதான் சிவ காருணியம். 'இருட்டிப் போகின்றதே! இனி ஆகாரங் குறித்து எங்கே போவோம்! யாரைக் கேட்போம்! என்ன செய்வோம்!' என்று விசாரத்தில் அழுந்திய ஏழைச் சீவர்களது விசாரத்தை மாற்றுவதே சிவ காருணியம். 'நடந்து நடந்து காலுஞ் சோர்ந்தது; கேட்டுக் கேட்டு வாயும் நொந்தது; நினைந்து நினைந்து மனமும் சலித்தது; இனி இப்பாழ் வயிற்றுக்கு என்ன செய்வோம்!' என்று கண்ணீர் வடிக்கின்ற ஏழைகளுக்கு ஆகாரங் கொடுத்துக் கண்ணீரை மாற்றுவதே சிவ காருணியம். 'பகற்போதும் போய்விட்டது; பசியும் வருத்துகின்றது; வேறிடங்களிற் போக வெட்கந் தடுக்கின்றது; வாய் திறந்து கேட்க மானம் வலிக்கின்றது; வயிறு எரிகின்றது; உயிரை விடுதவற்கும் உபாயந் தெரியவில்லை; இவ்வுடம்பை ஏன் எடுத்தோம்!' என்று மனமும் முகமும் சோர்ந்து சொல்வதற்கும் நாவெழாமல், உற்பாத சொப்பனங் கண்ட ஊமையைப்போல, மனமுருகுகின்ற மானிகளாகிய சீவர்களுக்கு ஆகாரங் கொடுத்து மானத்தைக் காப்பதுவே சிவ காருணியம். 'நாம் முற்பிறப்பில் பசித்தவர்கள் பசிக் குறிப்பு அறிந்து பசியை நீக்கியிருந்தால், இப்பிறப்பில் நமது பசிக் குறிப்பு அறிந்து பசியை நீக்குவதற்குப் பிறரொருவர் நேர்வார்; அப்போது அப்படி நாம் செய்ததில்லை; இப்போது நமக்கு இப்படிச் செய்வாருமில்லை,' என்று விவகரித்துக்கொண்டு தூக்கம் பிடியாமல் துக்கப்படுகின்ற ஏழைச் சீவர்களுக்கு ஆகாரங் கொடுத்துத் துக்கத்தை நீக்கித் தூக்கம் பிடிக்க வைப்பதே சிவ காருணியம். தேகமுழுதும் நரம்புகள் தோன்றப் பசியினால் இளைத்து உயிர் ஒடுங்கி மூர்ச்சை மூடிய காலத்து, அயலாரைக் கேட்கத் துணியாமற் கடவுளை நினைந்து நினைந்து, நெருப்பிற் படுத்து நித்திரை செய்யத் தொடங்குவாரைப்போல அடிவயிற்றிற் கொடிய பசி நெருப்பை வைத்துப் படுக்கத் தொடங்குகின்ற விவேகிகளுக்கு ஆகாரங் கொடுத்து அந்தப் பசி நெருப்பை ஆற்றுவிப்பதே சிவ காருணியம். 'நேற்றுப் பட்டினி கிடந்ததுபோல இன்றும் பட்டினி கிடப்பது எப்படி! நாம் வாலிப வலிவால் இன்றும் பட்டினி கிடக்கத் துணிவோமாயினும், பட்டினிக்குச் சகியாத நமது ஏழை மனைவி வயிற்றுக்கு யாது செய்வோம்! இவள் பசியைக் குறிப்பது பெரி

தன்று ; வயோதிக தசையால் மிகவுஞ் சோர்ந்த நம் தாய் தந்தை யர் இன்றும் பட்டினி கிடந்தால் இறந்துவிடுவார்களே ! இதற்கு என்ன செய்வோம் ! பசியினுல் அழுதழுது களைத்த நமது புத்திர் களது சோர்ந்த முகத்தை எப்படிப் பார்ப்போம் !' என்று எண்ணி யெண்ணிக் கொல்லன் உலையில் ஊத மூண்ட நெருப்பைப்போலப் பசி நெருப்பும், பய நெருப்பும், விசார நெருப்பும் உள்ளே மூண்டபடி யிருக்கக் கன்னப் புடையில் கைகளை வைத்துக்கொண்டு, கண்களில் நீர் கலங்க வருந்துகின்ற ஏழைகளுக்கு ஆகாரங் கொடுத்து, வருத் தத்தை மாற்றுவதே சீவ காருணியம். 'கண், கை, கால் முதலிய உறுப்புக்களிற் குறைவில்லாதவர்களாகி, ஆகாரஞ் சம்பாதிக்கத் தக்க சக்தியுள்ளவர்களும் பசியால் வருந்தி இதோ படுத்திருக்கின்றார்கள் ; குருடும், செவிடும், ஊமையும், முடமுமாக இருக்கின்ற நமக்கு ஆகாரம் எந்த வழியாற் கிடைக்கும் ! பசி எப்படி நீங்கும் !' என்று தனித்தனி நினைந்து நினைந்து துக்கப்படுகின்ற ஏழைகளுக்கு ஆகாரங் கொடுத்துத் துக்கத்தை நீக்குவதே சீவ காருணியம். பசி யினுல் வருந்துகின்றவர்கள் எந்தத் தேசத்தாராயினும், எந்தச் சமயத் தாராயினும், எந்தச் சாதியாராயினும், எந்தச் செய்கைய ராயி னும், அவர்கள் தேச ஒழுக்கம், சமய ஒழுக்கம், சாதி ஒழுக்கம், செய்கை ஒழுக்கம் முதலானவைகளைப் பேதித்து விசாரியாமல், எல்லாச் சீவர்களிடத்தும் கடவுள் விளக்கம் பொதுவாய் விளங்கு வதை அறிந்து, பொதுவாகப் பார்த்து, அவரவர் ஒழுக்கத்திற்குத் தக்கபடி அவர்கள் பசியை நிவர்த்தி செய்விப்பதே சீவ காருணியம். சன்மார்க்க ஒழுக்கத்திற்கு ஒத்த சத்துவ ஆகாரத்தால் பசி நிவர்த்தி செய்துகொள்ளத் தக்க மிருகம், பறவை, ஊர்வன, தாவரம் என் கின்ற உயிர்களுக்குப் பசி வந்தபோது அதை நிவர்த்தி செய்விப்பதே சீவ காருணியம்.

3. கன்னனும் கும்பகர்ணனும்

(சி. வ. தணிகாசலம் பிள்ளை அவர்கள், தலைமைத் தமிழாசிரியர்,
முத்தியாலுப்பேட்டை உயர் கலாசாலை, சென்னை)

கன்னன், கும்பகர்ணன் என்ற இருவரும் பிறர் செய்த நன்றியை மறவாது உளங் கொண்டு, தம் ஆருயிரைச் செய்ந்நன்றிக்கு அறிகுறியாக அளித்த பெரியோராவர்; ஆதலின், ஈண்டு அவ்விருவரின் குணாதிசயங்களையும், செய்ந்நன்றியறிதலில் தலைசிறந்து விளங்கிய தன்மையையும் காண்பாம்:

கன்னனைப் பெற்றதும் பாண்டவர் தாயான குந்தியம்மை அவனைப் பேழையில் வைத்துக் கங்கையாற்றில் விடுத்தனள். அப் பேழையையெடுத்து, அதனுள்ளிருந்த கன்னனைக் கனிவோடு திருத ராட்டிரன் தேர்ப்பாகன் வளர்த்து வந்தான். கன்னன், இளமை முதலே துரியோதனனுடன் நகமுஞ் சதையும் போல நட்புக் கொண்டான். கன்னனது குல நலமறியாதிருந்தும் அரவக் கொடியோன், தன் உயிர்க்குயிராக நேசித்துப் பூசித்து, அவனை அங்க நாட்டுக்கு அதிபனாக்கினன். இது நிற்க.

பாரதப் போர் நிகழ்வதற்கு முன்னரே கன்னன் தன் மைந்தன் என்பதைக் கண்ணனாலறிந்த குந்தியம்மை மனமாழ்கினள். அவள் கண்ணனால் ஏவப்பெற்றுக் கன்னன் வாயிலை அடைந்தாள். கன்னன் பெருவிருப்போடு அவளை எதிர்கொண்டழைத்து ஆதனத்து இருத்தினன். குந்தி, தான் அவன் தாய் என்பதை மெய்ப்பித்து, அவனை இளையோரான பாண்டவருடன் சேருமாறு வேண்டினள்.

உண்மைக்கும் உறவுக்கும் வண்மைக்கும் திண்மைக்கும் உறைவிடமான அங்கநாட்டதிபன், அது கேட்டு வருந்தினன்; பராக்கிரமம் வாய்ந்த பாண்டவர் தன் தம்பியர் என்பதையறிந்தும், அவர்களைச் சார்வதால் தான் புவியரசாகலாம் என்பதையுணர்ந்தும், அவ்வற்ப ஆசையைச் சிறிதுங் கொள்ளாது, அரவக் கொடியோன் ஆற்றிய ஆருதவியையே பெரிதெனக் கருதினன்; அவன் செய்த நன்றிக்குப் பிரதி நன்றி செய்தலையே கடனாகக் கொண்டான். எனவே, அவன் தன்னையின்றளை நோக்கி, "அம்மையே, ஈன்றோர் இன்னரென்றறியாதிருந்த என்னைத் தன் ஆருயிர்த் துணைவனாகக் கொண்டுளன் அரவக் கொடியோன்; சீரும் சிறப்பும் தனது பெருவாழ்வும் எனக்கே அளித்துளன்; ஒரு கலத்தில் என்னையுண்டனன்; என்னை அங்க

நாட்டுக்கு அரசனுக்கினன்; தன் தம்பியரையும் கிளைஞரையும் என் னடி வணங்குமாறு செய்வித்தனன். வேறு செய்தியொன்றும் கூறு வன்; கேண்மின்: ஒரு நாள் அந்தப்புரத்தில் யானும் அவன் மனைவி பானுமதியும் தனித்திருந்து சொக்கட்டானுடினேம். அவ்வமயம் அர வக் கொடியோன் என் பின்னே வந்து நின்றனன். அதைக் கண்ணுற்ற பானுமதி எழுந்தாள். அவள் எழுந்த காரணத்தையுணராத யான், அவளை அமரச் செய்ய விழைந்து, அவளது ஆடையைப் பற்றினேன்; அவ்வளவில் இடையிலணிந்திருந்த மணி மாலை இற்று விழுந்தது; மணிகள் நாநா பக்கமுஞ் சிந்தின. அந்நிலையில் துரியோதனன் என் கண்முன் புன்முறுவலோடு நின்றான். அவனைக் கண்டதும் என் மனம் நெருப்பிற்பட்ட புழுப்போலத் துடித்தது. ஆயினும், என் கண்பன் என்னை நோக்கி, 'அண்ணா, சிந்தியுள்ள இம்மணிகளையெடுக்கவோ? கோக்கவோ?' என்றான். யான் அச்செய்கையிலிருந்து என்மீது எள்ளளவு ஐயமுஞ் சிற்றமுங் கொள்ளாத அவனது பெருந்தன் மையை எண்ணியெண்ணிக் களிக்கின்றேன்.

'மைத்தடங்கண் மாதேவி வார்துகிலை யான்பிடிக்க,
அற்று விழுந்த அருமணிகள்;—மற்றவற்றைக்
'கோக்கேனை?' என்றுரைத்த கொற்றவற்கென் னுருயிரைப்
போக்கேனை வெஞ்சமத்துப் புக்கு!' —பெருந்தேவனார் பாரதம்

'மடந்தைபொற் றிருமே கலைமணி யுகவே
மாசறத் திகழுமே காந்த
இடந்தனிற் புரிந்தே யானயர்ந் திருப்ப,
'எடுக்கவோ? கோக்கவோ?' என்றான்;

திடம்படத் திடுவே லிராசரா சனுக்குச்
செருமுனைச் சென்றுசெஞ் சோற்றுக்
கடன்கழிப் பதுவே யெனக்கினிப் புகழுங்
கருமமும் தருமமும்,' என்றான். —வில்லி பாரதம்

இத்தகைப் பெருமை வாய்ந்த கன்னன், போரில் அர்ச்சுனன் அம்புக்கு இலக்காகி ஆவி துறக்குஞ் சமயம், கண்ணனது மெய்யுரு வினைக் கண்டு மகிழ்ந்து, தன் வாணாட்களில் தான் நடத்திய நற் செயல்களைக் கூறி மகிழ்கையில் இறுதியாகச் 'செஞ்சோற்றுக் கடன் கழித்தேன்!' என்று கூறி, மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தான். என்னே கன்னனது உயர் குணம்! இது நிற்க.

இலங்கை வேந்தனது தம்பியாய்ப் பிறந்த கும்பகர்ணன், வலிமை சான்ற பெருவீரனுய் விளங்கினன். குரை கழலணிந்த அவனைக் கண்டு கூற்றுவனும் கலங்கினன். அமரர் அஞ்சி அயர்ந்தனர். இத்தகைய பெருவீரன் சீதையைச் சிறை வைத்த அண்ணனது அடாச் செயலை அறவே வெறுத்தான். அதைப்பற்றி அவன் தன் முன்னோனுக்குப் பல அறிவு மொழிகளைப் புகன்றான். கன்னெஞ் சுடைய காவலன், கும்பகர்ணனைச் சினந்து போருக்கு ஏகுமாறு பணித்தான். தன் நல்லுரை புல்லுரையானதைக் கண்ட கும்பகர்ணன் வாளேந்தி அமர்க்களம் புக்கான். தன்னை அன்றளவும் காத்த அண்ணன் பொருட்டுப் போர் செய்து ஆவி துறத்தலே தன் கடமையாகும் என மானமுள்ள அவ்வீரன் கருதினன்.

அவன் போர்க்களம் புகுந்ததும் இராமனையடுத்திருந்த வீடணன் அவன் தோன்றி, இராமனுடன் சேருமாறு வேண்டி நின்றான்; இலங்கைக்கு அவனை முடியரசனுக்குவதாகவும் வாக்களித்தான். எவ்வளவு கூறியும் என்? செஞ்சோற்றுக் கடன் கழிக்க விழைந்து ஆவி துறக்க அமர்க்களம் புகுந்த கும்பகர்ணன் தம்பியின் கூற்றைக் கேட்டு நகைத்தான். அவன் வீடணனை மார்புறத் தழுவி, "எம்பி, நீரில் தோன்றி மறையும் குமிழியையொத்த வாழ்வைப் பெரிதென்றெண்ணி, என்னைத் தன் ஆருயிர்த் துணையெனக் கருதி நெடிதுநாள் வளர்த்து இவ்வமயம் போருக்கு அனுப்பியுள்ள அண்ணனுக்குத் துரோகஞ் செய்யேன்; யான் உயிர் துறக்கத் துணிந்துளேன்; ஆனல், செய்ந்நன்றியறிதலைத் துறவேன்," என்று பெருமிதம் தோன்றக் கூறினன்.

பின்னும் அவன் இளவலை நோக்கி, "தம்பி, அரையன் தீமை செய்தால் அறிவுறுத்த வேண்டுவது நமது கடமை; அதனை அவன் கொள்ளானுயின், அவனது சோற்றையுண்ட நாம் அவன்பொருட்டுப் போர் செய்து ஆவி துறப்பதே சிறந்தது; அதுவே உண்டவர்க்கு உரியது. மேலும், அண்ணன் பகைவன் நம் பகைவனல்லனே? அவனிடம் அடைக்கலம் புகுந்து புண்பட்ட நெஞ்சோடு உயிர் வாழ, உயிரினும் மானமே பெரிதெனக் கொண்ட யான் இசையேன். யான் கூற்றையும் ஆடல் கொண்டவன்.

"செம்பிட்டுச் செய்த இஞ்சித்
திருநகர்ச் செல்வந் தேறி
வம்பிட்ட தெரிய லெம்மூன்
உயிர்கொண்ட பகையை வாழ்த்தி,
அம்பிட்டுத் துன்னங் கொண்ட
புண்ணுடை நெஞ்சோ(டு) ஐய!
கும்பிட்டு வாழ்கி லேன்யான்
கூற்றையும் ஆடல் கொண்டேன்."

என்று கூறி மகிழ்ந்தான். இன்னணம் கூறிய கும்பகர்ணன் தன்னு லியன்றவரை பகைவரோடு அமர் செய்து ஆவி துறந்தான். செய்ந் நன்றி மறவாச் செம்மல் அன்றே கும்பகர்ணன்!

---

4. நூல் நிலைய இயக்கம்

(கா. மு. சின்னப்பா பிள்ளை அவர்கள், தலைமைத் தமிழாசிரியர், சிந்தாதிரிப்பேட்டை உயர் கலாசாலை, சென்னை)

ஒரு நாட்டின் சீரும், செல்வமும், அறிவும், ஆரோக்கியமும் அந்நாட்டினர் பெற்றுள்ள கல்வியையே பொறுத்துள்ளன. ஒரு நாட்டு மக்களிற் பெரும்பாலோர் கல்வியறிவு பெற்றிலராயின், அந் நாட்டில் வறுமையும் பிணியும் நிலைபெறும். மேலும், அவர்கள் அறிவும் ஆற்றலும் மிகுந்த பிற நாட்டினர் வயப்பட்டுப் பல வழிகளில் அவர்கட்குக் கீழடங்கி அடிமைகளாக வாழ நேரும்.

இவ்வாறின்றி, ஒரு நாட்டில் எங்கும் கல்வி மிகுந்து, அறிவு நிரம்பியிருந்தால், அந்நாட்டினர் செல்வமும் சிறப்பும் பெற்று வாழ இடமுண்டாகும். எனவே, ஒரு நாடு உயர்நிலையடைய வேண்டு மாயின், அந்நாட்டு மக்கள் கல்வியறிவு வாய்ந்தவர்களாயிருத்தல் வேண்டும் என்பது வெளிப்படை. ஆதலின், உயிர்க்கு உறுதியைத் தரும் கல்வியை—சீருஞ் செல்வமும் நாகரிகமும் அளிக்கும் கல்வியை —நாடு முழுவதும் பரப்புதல் வேண்டும். எழுதப் படிக்கத் தெரி யாதவர் ஒருவரும் இல்லாதவாறு நாடெங்கும் அறிவு வெள்ளம் பாய்ந் தோடச் செய்தல் வேண்டும்.

கல்வியின் உயர்வை நன்குணர்ந்தே நம் முன்னோர், மிக வருந்தி உழைத்துக் கல்வி பயின்றனர். நூல்கள் இப்பொழுது கிடைப்

பனபோல, அக்காலத்தில் எளிதிற் கிடைத்திரா ; நூல்கள் பனை யோலைகளில் எழுத்தாணிகொண்டு எழுதப்பட்டு வந்தன. அவற்றை யுடைய கற்றோரிடம் சென்று அக்கால மாணவர் பயில்வது வழக்கம். அங்ஙனம் அரும்பாடு பட்டுக் கல்வி கற்றுப் புலவர் பெருமக்களாக விளங்கியவர்களே நக்கீரர், சாத்தனர், ஔவையார், புகழேந்தி, ஒட்டக் கூத்தர், கம்பர் முதலியவர்கள்.

உலகில், நம் பாரத நாட்டைத் தவிர்த்து ஏனைய நாடுகள் இப் பொழுது கல்வியில் சிறப்புற்றிருக்கின்றன. சென்ற நூற்றாண்டில் ஜப்பான் நாட்டு மன்னர், " இன்று முதல் நமது நாட்டில் அறிவற்ற குடும்பம் ஒன்றுகூட இருக்கலாகாது. இந்நோக்கத்துடன் கல்வியை நாடெங்கும் பரப்புவோம், " என்று வீர முழக்கஞ் செய்தார். அதன் பயனாக, இன்று ஜப்பானில் ஆடவர் பெண்டிர் அனைவரும் கல்வி கற்று வருகின்றனர். எழுதப் படிக்கத் தெரியாதவர்களே ஜப்பானில் இல்லையெனலாம்.

ஜெர்மனியில் எழுதப் படிக்கத் தெரியாதாரே இலர். பிரான்ஸில் நூற்றுக்கு நான்கு பேரே எழுத்து வாசனை அறியாதார். அமெரிக்கா வில் அனைவர்க்கும் எழுதப் படிக்கத் தெரியும். ஆனால், நம் தாய் நாட்டில் நூற்றுக்கு எட்டுப்பேரே எழுதப் படிக்கத் தெரிந்தவர். என்ன கொடுமை !

மேல் நாட்டார் கல்வியின் அவசியத்தை நன்குணர்ந்து கற்கின் றனர் ; ஆரம்பக் கல்வியை இலவசமாக்கி மக்களைக் கற்கச் செய்திருக் கின்றனர் ; அதன் வழியாக அறிவைப் புகட்டி அறியாமையை நீக்கி வருகின்றனர் ; இராப் பள்ளிக்கூடங்களும் பகற் பள்ளிக்கூடங்களும் ஆங்காங்கு அமைத்து மக்களுக்குக் கல்வி கற்பிக்கின்றனர். இவற்றிற் கென அரசாங்கத்தாரும், ஜில்லா பரிபாலன சபை, தாலூக்கா பரி பாலன சபை, நகர பரிபாலன சபை போன்ற ஸ்தல ஸ்தாபன நிர் வாகிகளும், அறம் வளர்க்கும் அண்ணல்களும் பெருவாரியாகப் பணவுதவி புரிகின்றார்கள்.

இச்சாதனங்களைத் தவிர, மேனாடுகளில் எண்ணிறந்த புத்தக நிலையங்களும் நிறுவப்பட்டுள்ளன. ஒவ்வொரு புத்தக நிலையத் திலும் ஆயிரக் கணக்கான செல்வரும் ஏழைகளும் குடியானவரும் தொழிலாளரும் படிக்கத் தக்க நூல்கள் நிறைந்துள்ளன. எழுதப் படிக்கத் தெரிந்த மக்கள், புத்தக நிலையங்களிலிருந்து தங்கள் தொழிலுக்கேற்ற நூல்களைப் பெற்றுப் படித்து, அறிவுப் பெருக்கம்

அடைகின்றார்கள். அது பெருகப் பெருக, தொழிலும் உழவும் வர்த்தகமும் முன்னேற்றமடைகின்றன. அவற்றால் செல்வமும் நாகரிகமும் செழிக்க, மக்கள் வாழ்வில் இன்பம் நுகர்கின்றார்கள்.

இங்கிலாந்தில் ஆயிரக் கணக்கான புத்தக நிலையங்கள் இருக்கின்றன. அமெரிக்காவில் சுமார் 7000 புத்தக நிலையங்களும், மெக்ஸிகோவில் 3000 புத்தக நிலையங்களும், இங்ஙனமே ஒவ்வொரு நாட்டிலும் ஆயிரக் கணக்கான புத்தக நிலையங்களும் இருத்தலால், அவ்வந் நாட்டு மக்கள் கல்வியறிவிற் சிறந்து விளங்குகின்றார்கள்.

குடியாட்சி பெற்றுள்ள ரஷியாவில் எழுதப்படிக்கத் தெரியாதவர்களுக்கென 46,759 பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஊர் ஊராகச் சென்று ஆங்காங்கு உள்ள மக்களுக்குப் புத்தகங்களைப் படிக்கக் கொடுத்து வாங்குவதற்கென யாத்திரை செல்லும் புத்தக நிலையங்கள் 50,000 ஏற்படுத்தப்பெற்றுள்ளன. இவற்றால், ரஷியக் குடிகள் பெற்றுள்ள கல்வியறிவை என்னென்று வியப்பது!

நமது நாட்டிலோ, அதிலும் தமிழ் நாட்டிலோ, இத்தகைய நூல் நிலையங்கள் பெரும்பாலும் இல்லை என்றே கூறலாம். பள்ளிக்கூடங்களிற் புத்தக நிலையங்கள் சில இருக்கின்றன. கிராம வாசிகளுக்கெனப் புத்தக நிலையங்கள் நமது தமிழ் நாட்டில் ஏற்பட்டில. ஆரம்பக் கல்விகூட ஆயிரக்கணக்கான கிராமங்களிற் பரவவில்லை. இக்காரணங்களால் நம் தாய் நாட்டுக் கிராம வாசிகள், பாவம்! நடைப்பிணங்களாக விலங்கினத்தையொப்ப இருக்கின்றார்களேயன்றி, மனித வாழ்வு வாழ அவர்களால் இயலவில்லை.

அன்புள்ள மாணவர்களே, நம் நாட்டு வீரமக்களாக - அறிவு வாய்ந்த மக்களாக - விளங்கவேண்டிய நீங்கள், இன்று முதலாயினும் உங்கள் பள்ளிக்கூடத்து நூல் நிலையத்தில் உள்ள நூல்களை நாள்தோறும் படிக்க முயலுங்கள்; தினசரிப் பத்திரிகைகளைப் படித்து உலகச் செய்திகளை அறிந்துகொள்ளுங்கள்; மேலுலகள் உயர்ந்த நிலையையடைந்து வருதலைக் கண்டும், நீங்கள் வாளா இருத்தல் அழகோ? அருமைப் பிள்ளைகளே, எழுங்கள்! எழுங்கள்!! நூல்களை எடுங்கள்; அறிவைப் பெருக்குங்கள்; நம் தாய் நாட்டு நிலையை உயர்த்துங்கள்.

5. அருச்சுனன் சுபத்திரையை மணத்தல்

(வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள், தலைமைத் தமிழாசிரியர், லுத்தரன் மிஷன் உயர் கலாசாலை, சென்னை)

ஒரு நாள் யாழ் முனிவர் பாண்டவரையணுகி, அவர்கள் வழிபாடியற்ற மகிழ்ந்து, அவர்களை வாழ்த்தி, "அன்புடையீர், நீவிர் ஐவீரும் கற்பரசியாம் பாஞ்சாலியை மணந்தனிரன்றே ? ஆகலின், உமக்குள் மன மாறுபாடு நேராவண்ணம் இல்லற மினிது நடாத்த ஒரு முறை யேற்படுத்திக்கோடல் நேரிதாம் : நும்மில் ஒருவர் திரௌபதியுடன் உரையாடுங்கால் மற்றொருவர் அவ்விடமணுகாதிருத்தலே அம்முறை யாம். முறை பிறழின், பிறழ்பவர்* பன்னீராண்டு நாட்டினைத் துறந்து, நில வலம் செய்தல் வேண்டும்," எனக் கூறினர். பாண்டவர் ஐவரும் அதற்குடன்படலும், முனிவர் அவர்தமை வாழ்த்தி, விடை கொண்டு அகன்றனர்.

சில பல நாட்கள் முறைப்படி கழிந்தன ; பின்னொரு நாள் மறையவரொருவர் அருச்சுனனையணுகி, "வில்லாளரே, என்றன் பசுக்களைக் கள்வர் கவர்ந்து செல்லாநின்றனர் ; அவற்றை அவரிடமிருந்து மீட்குந் திறனிலேன் ; ஆகலின், துணை நாடி உம்மையடுத்தேன்," எனக் கூறினர்.

அது கேட்ட இந்திரன் மதலை, தன் வெற்றிச் சிலையினையெடுக்க வீட்டுட் புக்கனன். ஆண்டு அக்காலை, தருமரும் திரௌபதியும் அமர்ந்து, இன்னுரையாடிக்கொண்டிருந்தனர். அருச்சுனன் சிலை கொண்டு பொள்ளெனவெளிப்போந்து, அக்கள்வரை மடக்கியடித்துத் துரத்தி, ஆனிரை மீட்டு அந்தணருக்குதவி, அவர் ஆசிபெற்று இல்லந் திரும்பி, முனிவர் வகுத்த முறை பிறழ்ந்தமை கருதி விடைபெற்றுத் துறவிக் கோலம் பூண்டு, பன்னீராண்டு நில வலம் புரிவான் புறப் பட்டனன்.

அவன் பற்பல தெய்வ நீர்த்துறைகளிற் படிந்து, ஆங்காங்கெழுந் தருளியுள்ள கடவுளரை வணங்கியும், சீரியோர் பலரிடம் நல்லுரை வினவியும் கடவ நாள்கழித்து, இறுதியில் துவரையம்பதியை நண்ணி, இரைவத மலைச்சாரலில் முனிவர் பலருடன் தங்கி இருந்தனன்.

ஒரு நாள் கண்ணபிரானுர் பலராமருடனும் சுபத்திரையுடனும் இரைவத மலைச்சாரலையடைந்து, இயற்கை அரசியின் எழில் நலந்

* ஓராண்டு எனக் கூறுவாருமுளர்.

கண்டு களிப்புற்றிருப்புழி, ஏனையோரை ஒரு புறம் விடுத்து, தாம் தனித்து அருச்சுனனை அணுகினர். அருச்சுனன் உடனே அவரை வணங்க, அண்ணலார் அவனை வாழ்த்தி, அவன் ஆண்டுப் போந்த காரணமறிந்து களித்தனர்.

அண்ணலார் பொதுப்படப் பாண்டவரிடத்து அன்புடையராயினும், அருச்சுனனிடத்து அவர் கொண்ட அன்பு எல்லையற்றதாகும். அவர் அருச்சுனனைக் கொண்டே துரியோதனன் முதலிய கொடியரை அழிக்கக் கருதினர்; ஆதலின், அவனுக்கும் தமக்குமிடையிலேற் பட்ட நட்பை உறுதிப்படுத்தக் கருதி, அண்ணலார் அவனுக்குத் தம் நற்றங்கையாம் சுபத்திரையை மண முடிப்பிக்க விரும்பினர்; ஆயினும், அம்மணவினைக்குத் தம் தமையனார் தந்தையார் முதலியோர் ஒருவகையில் இயையார் என்பதுணர்ந்து, சுபத்திரையை அந்நாள் அரசர் மண முறைப்படி அருச்சுனன் வலுவிற் கவர்ந்து சென்று மணக்குமாறு செய்யத் திருவுளங் கொண்டனர். இறைவர்தங் கருத்துக்கு இடையூறுமுண்டோ!

அண்ணலார் அருச்சுனனை நோக்கி, "என் ஆருயிர் மைத்துன, சில பல நன்மைகளை முன்னிட்டு நீ நின்னுண்மை வரலாற்றை இங்குள்ளாருக்கு உணர்த்தாதிருக்க விரும்புகின்றேன்," எனக் கூறு நிற்கையில், பொன்னம்பூங்கொடி புவிமிசை நடை பயில்வதே போல நடந்து, சுபத்திரை அங்குற்றனள். அண்ணலார் அந்நங்கையை நோக்கி, "தங்காய், இத்துறவியர் பெருமானை வணங்குவோர் தூய்மையுற்று எந்நலமும் இனிதினடைவர்; ஆதலின், நீயும் இவர் பூங்கழல் வணங்குதி," எனலும், அவள் அங்ஙனமே புரிந்தனள்.

அதற்குள் பலராமரும் ஆண்டடைந்து, அருச்சுனத் துறவியை அன்புடன் வணங்கினர். பின்னர், பலராமர், "துறவியர் பெருமை, அடிகள் எம்மரண்மனைக்கு எழுந்தருளல் வேண்டும். தாங்கள், அடியேம் ஒரு சிறு முயற்சியுமின்றி வணங்க ஈண்டெழுந்தருளற்கு என்ன மாதவம் செய்தது இத்துவாரகை!" எனக் கூறலும், துறவிக் கோலம் புனைந்த தோன்றல், அவர் வேண்டுகோளைத் தடுக்க முடியாமல் இணங்குவான்போல நடித்து, அவர்களுடன் துவாரகையிலுள்ள அரண்மனையை அடைந்தனன். அடைதலும், பலராமர் அவற்கு அரண்மனையின் புறத்தேயுள்ள பூஞ்சோலையில் ஒரு கொடி வீட்டில் இருக்க இடமளித்துத் தம் தங்கையை நோக்கி, "தங்காய்,

நீ இத்துறவியருக்குக் குற்றேவல் புரிதி," எனப் பணித்துச் சென்றனர்.

அன்று மாலை இரைவத மலையில் விழாவொன்று நடைபெற, நம் அண்ணலார் பலராமர் முதலியவர்களுடன் அங்குச் சென்றனர். சுபத்திரை, 'துறவிக்குக் குற்றேவல் புரிதலை விடுத்துச் செல்லுதல் தகுதியன்று,' எனக் கருதிக் கொடிவீட்டிலேயே இருந்தனள். அவள் துறவியை நோக்கி, "பெரியீர், அடிகள் பிறக்கும் பெரும்பேறு பெற்ற நாடு எந்நாடோ!" எனக் கேட்க, துறவியாய் வந்த தோன்றல், "நங்காய், எம் பிறப்பிடம் அத்தினபுரம்," எனச் சாற்றினன். சுபத்திரை முன்னமே அருச்சுனன் புரிந்த அரும்பெருஞ்செயல்களைக் கேள்வியுற்று அவன்மீது காதலுற்றிருந்தனள். ஆதலின், அத்தின புரமெனுஞ் சொற்றொடர் கேட்டதும் அருச்சுனன் நினைவெழ, அவள் துறவியை நோக்கி, "அப்படியா! அதுவே எங்கள் நல்லத்தையும் அவள் புதல்வருமுறைதரு நன்னகர். அருச்சுனர் என்னும் வெற்றிச் சிங்கத்தை நீவிர் அறிவீர்கொல்? அவர் நில வலம் புரிதல் கருதிச் சென்றனரென உணர்ந்தேன். இக்காலை அவர் எங்குளரோ!" எனக் காதற்குறி தோன்றக் கூறினள். அருச்சுனன், "நங்காய், நானே அவ் வருச்சுனன்!" எனக் கூறி நகையாடினன். பின்னர், அவ்விருவரும் தத்தங் காதல் தோன்ற இன்னுரையாடினர். அருச்சுனன் அவளைப் பார்த்து, "நங்காய், நின்னுடன் பிறந்தோர் திரும்பிவரின், யானுன்னை மணக்கும் பேற்றை இழத்தலும் கூடும். ஆதலின், நாம் இன்னே தேரூர்ந்து நம் நாடு செல்லல் வேண்டும்," எனக் கூற, சுபத்திரை நாணத்தால் ஒன்றும் உரையாது, தன் உடன்பாட்டைக் குறிப்பாக உணர்த்தினள். அருச்சுனன் தன் கடவ நாள் முடிந்தமை கருதித் துறவுடை துறந்து, சுபத்திரையுடன் தேரிவர்ந்து, தன்னகர் நோக்கிப் புறப்பட்டனன்.

அதுகாலை விழாக்கண்டு மீண்ட பலராமர் முதலியோர்க்கு நகரக் காவலர் அச்செய்தியை உணர்த்த, அன்னர் யாதவ வீரருடன் விரைந்து போந்து, வில்லமர் வல்ல விசயனை எதிர்த்துப் போராடினர். வெற்றியிற் சிறந்த விசயன், பொருது அவர்களைப் புறங்காட்டச் செய்து, தன்னகர் சென்றனன். பின்னர்க் கண்ணபிரானர் கூறிய நல்லுரைகளால் பலராமர் முதலியோர், சுபத்திரையைக் கவர்ந்த செம்மலை முனியாது, அவனுக்கு அந்நங்கையை மண முடித்துச் செய்வன செய்து, துவரை மீண்டனர்.

6. ஜாம்ஷட்ஜி நசர்வான்ஜி டாட்டா

(1839-1904)

(அ. கி. பரந்தாம முதலியார் அவர்கள், தலைமைத் தமிழாசிரியர், திருப்பவுல் உயர் கலாசாலை, சென்னை)

முன்னுரை : 'மாந்தர்க்கு உரிய கல்வி, மானிடரைப்பற்றிக் கற்றலே,' என்று போப்பு என்னும் பெயர் பெற்ற ஆங்கிலக் கவிஞர் கூறியுள்ளார். ஒருவன் வாழ்வில் உயர்வுபெற வேண்டும் எனினும், நாட்டுக்கு நற்றொண்டு செய்ய வேண்டும் எனினும், அவன் சிறந்த பெரியோருடைய வாழ்க்கை வரலாறுகளை நன்கு அறிதல் வேண்டும். பெரியோருடைய வாழ்க்கைச் சரிதம் எல்லாம், தளர்ந்துழி ஊன்றுகோல்போல உதவி நம்மை ஊக்கி வரும். பெரியோருடைய வாழ்க்கை வரலாறுகளை அறிந்தால், நாம் அவர்கள் முன்னேறிய வழிகளைப் பின்பற்றி முன்னேற்றம் பெறலாம்; அல்லது அவர்கள் நாட்டுக்கும் மக்களுக்கும் தொண்டு செய்த முறைகளை உணர்ந்து அம் முறைகளைக் கைக்கொண்டு தொண்டு புரியலாம். ஆகையால் பெரியோர் வாழ்க்கை வரலாறுகளை அறிய வேண்டுவது மிகவும் இன்றியமையாதது. எனவே, தம்முடைய கூரிய மதியாலும் தேச பக்தியாலும் இந்நாட்டில் தொழில் ஸ்தாபனங்கள் பலவற்றை ஏற்படுத்தி, நாட்டின் வறுமை நீங்க நல்வழி காட்டிய பேரறிஞராகிய ஜாம்ஷட்ஜி நசர்வான்ஜி டாட்டா அவர்களைப்பற்றித் தெரிந்து கொள்வது சிறந்ததே.

இளமைப் பருவம்: ஜாம்ஷட்ஜி பரோடா ராஜ்யத்தில் உள்ள நவசாரி என்னும் ஊரில் 1839-ஆம் வருடம் பாரசிகக் குடும்பத்திற் பிறந்தார். இவருடைய முன்னோர், பார்சி மதக் குருக்கள் வகையைச் சேர்ந்தவர்கள். தெய்வ பக்தியிலும் இடைவிடா முயற்சியிலும் அவர்கள் தலைசிறந்திருந்தார்கள். இதனாலன்றே நமது ஜாம்ஷட்ஜியும் இளமை தொட்டே முயற்சியிற் சிறந்து விளங்கினார்? இவர் குல வழக்கப்படி முதன்முதலில் சமயக் கல்வி அளிக்கப்பெற்றார். எழுதவும் படிக்கவும் கணக்குப் போடவும் தெரிந்துகொண்ட பின்பு இப்பார்சி குலதிலகர், பம்பாய் நகரத்திலுள்ள 'எல்பின்ஸ்டன்' கலாசாலையிற் சேர்ந்து ஆறு வருட காலம் கல்வி பயின்றார். இவர் கல்வியை இவ்வளவோடு நிறுத்திக்கொண்டு, தம் தந்தையார் சைனு தேசத்தோடு செய்து வந்த வியாபாரத்திற்கு உதவ முன் வந்தார்;

அதனால் ஹாங்காங் சென்று அங்கே சில காலம் தங்கி வாணிபத்தைப் பற்றிய பல உண்மைகளைக் கற்றுக்கொண்டார்.

வாணிப முயற்சியும் முன்னேற்றமும் : அமெரிக்காவில் உள்நாட்டுப் போர் நடந்து வந்ததால் அந்நாட்டு மக்கள், வழக்கம்போல ஐரோப்பாவுக்குத் தம் நாட்டுப் பருத்தியை அனுப்ப முடியவில்லை ; அச்சமயம் இந்தியர்கள் ஐரோப்பாவுக்குப் பருத்தியை மிகுதியாக ஏற்றுமதி செய்துவந்தனர். ஜாம்ஷட்ஜியின் தந்தையாரும் இப்பருத்தி வியாபாரத்தை நடத்திவந்தார். இச்சமயத்தில் ஹாங்காங்கிலிருந்த ஜாம்ஷட்ஜி, பம்பாய்க்குத் திரும்பி வந்து பருத்தி வியாபாரத்தை மும்முரமாக நடத்தலாயினர். சில காலஞ் சென்றபின்பு அமெரிக்காவில் உள்நாட்டுக் கலகம் முடிவடைந்துவிட்டது. அமெரிக்கர், வழக்கம் போலப் பருத்தியை ஐரோப்பாவுக்கு அனுப்ப முயன்றனர் ; அதனால், இந்தியப் பருத்தி வியாபாரம், அச்சு முறிந்த தேர் போலத் திடீரென நின்றுவிட்டது. வியாபாரம் நின்றுவிட்டதால் இந்தியப் பருத்தி வியாபாரிகளுக்குப் பெருநஷ்டம் ஏற்பட்டது. ஆனால், டாட்டா குடும்பத்தார் மட்டும், திறமையால் தமக்கு நஷ்டம் நேராதபடி தடுத்துக்கொண்டனர். இதற்கு முதற்காரணராய் இருந்தவர் நமது இளைஞரே ஆவர்.

இந்த வியாபாரம் நின்றுவிட்டதால், ஜாம்ஷட்ஜி மற்றொரு வியாபாரத்திற் புகுந்தார். கிழக்காப்பிரிக்காவில் அபிசீனிய அரசனுக்கும் ஆங்கிலேயருக்கும் போர் நடந்தது. இவர் கிழக்காப்பிரிக்காவில் உள்ள ஆங்கிலச் சிப்பாய்களுக்கு உணவுப் பொருள் அனுப்பும் வியாபாரத்தில் தலையிட்டுப் பெரும்பொருளும் புகழும் தம் தந்தையாருக்குச் சம்பாதித்துக் கொடுத்தார்.

இந்த வியாபாரமும் முடிவடைந்துவிட, ஜாம்ஷட்ஜியின் மனம், 'எத்தறையில் நுழைவது?' என்று ஆராய்ந்துகொண்டிருந்தது. இச்சமயத்தில் பம்பாயில் நூல் நூற்குந் தொழில் ஆரம்பமாயிற்று. ஜாம்ஷட்ஜி, 'நம் நாடும் பருத்திக் கைத்தொழிலிற் சிறக்கக்கூடும்,' என்று உணர்ந்து, அத்தொழிலில் தம் முயற்சியைச் செலுத்த எண்ணினர் ; ஆகையால், இவர், 'மான்செஸ்டர்' என்னும் இடத்திற்குப் போய்ப் பருத்திக் கைத்தொழிலைப் பற்றிய பல விஷயங்களையும் கண்டுணர்ந்தார். இந்தியாவுக்குத் திரும்பி வந்ததும் பஞ்சாலைக்கு ஏற்ற இடத்தைத் தேடிக் கடைசியில் நாகபுரியைத் (Nagpur) தேர்ந்தெடுத்து, அங்கே 1833-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதியில் 'எம்பிரஸ்

மில்' என்ற பஞ்சாலையை ஆரம்பித்து நடத்தி வந்தார். இதற்காக இவர் பல முறை ஐரோப்பாவுக்கு யாத்திரை செய்ததும் உண்டு. பஞ்சாலையும் வளர்பிறைபோல வளர்ந்தோங்கிப் பெரும்பயனை அளித்தது. 'பாடு பட்டால் பலன் உண்டு,' என்பது உண்மை அன்றோ?

ஜாம்ஷட்ஜி டாட்டா, சில்முதலாளிகளைப்போலத்தம்இலாபத்தை மாத்திரம் கருதாமல், தொழிலாளருக்குப் பரிசளித்தும், இலாபத்திற் பங்கு கொடுத்தும், விடுமுறைகள் விடுத்தும் உற்சாகப்படுத்தி வந்தார்; அவர்கள் தங்களுடைய ஒழிவு நேரத்தைக் கல்வியிலும் களிப்பிலும் கழிப்பதற்கு ஏற்ற கருவிகளையும் தேடித் தந்தார். நாட்டில் பருத்திக் கைத்தொழில் ஊன்றி வளரும் பொருட்டுக் கல்வி அறிவுள்ள தக்க வாலிபருக்கு இப்பஞ்சாலையில் மூன்று வருட காலம் பயிற்சி அளிக்க ஏற்பாடும் செய்வித்தார். இவர் திறமையோடு நடத்தி வந்ததால், இஃது இந்திய நாட்டிலே ஒரு மாதிரிப் பஞ்சாலையாகவே (Model Mill) விளங்கிற்று.

தாம் எடுத்த வேலையில் வெற்றி பெறவே, டாட்டா, நாட்டின் வளத்தைப் பெருக்கும் வியாபாரத் துறையில் மேலும் அதிகமாக உழைக்கலானார். நாகபுரிப் பஞ்சாலையில் நெய்யும் நூலைவிட உயர்ந்த நூல் நூற்க இவர் மனம் விரும்பியது. இது நம் நாட்டாரால் செய்ய முடியாததன்று. ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன், கலிங்கநாட்டில் பாம்பு உரித்த தோல்போன்றும், நீராவியைப் போன்றும் துணி நெய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அப்படிச் செய்வதற்கு அந்நாட்டினர் எத்தகைய நுண்ணிய நூலை நூற்றிருக்க வேண்டும்? "பாம்புரி அன்ன வடிவின.....ஒண்பூங் கலிங்கம்" "பாம்புரித் தன்ன வான்பூங் கலிங்கம்" என்று புறநானூறும், "ஆவி அன்ன அவிர்நூற் கலிங்கம்" என்று பெரும்பாணாற்றுப் படையும் கூறுவதிலிருந்து இவ்வுண்மையை அறியலாம். இவ்வளவு ஏன்? சில ஆண்டுகளுக்கு முன்னும் நம் நாடு மிக நுண்ணிய நூலால் நெய்யப்பட்ட மசிலின் என்னும் துணிக்குப் புகழ் பெற்றிருந்ததை யாரே அறியார்? ஆகையால், நம்மவர் முயற்சி செய்தால், மிகச் சிறந்த நூலைப் புதிய முறையில் நூற்கலாம். இதை உணர்ந்துதான் டாட்டா, பழைய பஞ்சாலை ஒன்றை விலைக்கு வாங்கி, அல்லும் பகலும் உழைத்து, அதைப் புதுப்பித்துச் சுதேசிப் பஞ்சாலை என்ற பெயரோடு ஆரம்பித்தார். இதற்காக அளவற்ற பொருளும் காலமும் செலவழிந்தன. இடையூறுகளும் எதிர்பாராமல் தோன்றின. எவ்வு

ளவு கஷ்டங்கள் நேர்ந்தாலும் அவைகட்குத் தோலாமல் எடுத்த காரியத்தை முடித்துவிடுவதே இவருக்கு இருந்த இயற்கைக் குணம்: ஆகையால், இவர் அக்கஷ்டங்களை எல்லாம் ஒரு பொருட் படுத்தாமல் வேலை செய்துவந்தார். இவருடைய முயற்சி வீணாக வில்லை. சிறிது காலத்துக்குள் இப்பஞ்சாலை தலையெடுத்து நாகபுரிப் பஞ்சாலையோடு போட்டியிட ஆரம்பித்துவிட்டது. 'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?'

ஒரு நாட்டில் கைத்தொழில் சிறக்கவேண்டுமானால், அக்கைத் தொழிலுக்கு வேண்டிய விலைபொருள்களும் பிறவும் அந்நாட்டிலேயே அதிகமாகக் கிடைக்கவேண்டும். ஆகையால், நமது ஜாம்ஷட்ஜி பஞ் சாலையை வளர்க்குஞ் செவிலியாகிய பருத்தி விளைவை நம் நாட்டில் அதிகரிப்பிக்க எண்ணிப் பருத்தி பயிரிடும் முறையைப் பற்றிய நூல் ஒன்றை எழுதி வெளியிட்டார். பழைய முறையையே கையாளு வதில் பெருவிருப்புடைய நம்மவரிடத்தில் இவருடைய உழைப்பு அப்பொழுது விழலுக்கு இறைத்த நீராயிற்று. இப்போதுதான் அது பயனை அளிக்கிறது. இந்நாளில் இமயம் முதல் குமரிவரை யில் சிறந்த பருத்தி நல்ல முறையில் பயிரிடப்படுகிறது.

பருத்திக் கைத்தொழிலுக்குப் பருத்தி விளைவு மாத்திரம் போதாது. இந்தியாவில் நூற்கப்படும் நூல், சைனாவிலோ ஜப்பானிலோ குறைந்த விலைக்கு விற்கப்படவேண்டுமானால் நூலை ஏற்றிப் போக நேரும் கப்பற்கூலி குறைவாயிருத்தல் வேண்டும். அக்காலத்திற் சில கப்பற் கம்பெனிகளே இருந்தன; அவற்றின் முதலாளிகள் கப்பற்கூலியை உயர்த்திவிட்டார்கள். பருத்தி வியாபாரம் வளர் வதைக் கண்டதும் அவர்கள் மேலும் அதிகமாகக் கப்பற்கூலியை உயர்த்தினர்கள். ஜாம்ஷட்ஜி இக்குறையை நீக்குதற்குரிய வழியை ஆராய்ந்தார். ஓர் எண்ணம் அவர் மனத்தில் தோன்றியது. அது நம் மவர் கூட்டுறவினால் கப்பற்கூலியைக் குறைத்துவிடலாம் என்பதே; ஆகையால், இவர் குறைந்த கூலிக்குச் சாமான்களை ஏற்றிப் போக ஜப்பானியக் கப்பற் கம்பெனிகளோடு ஒப்பந்தம் செய்துகொண்டார்; மற்றப் பஞ்சாலை முதலாளிகளையும் தம்முடைய ஒப்பந்தத்தை ஒப்புக் கொள்ளச் செய்தார். அவர்களும் இணங்கினர்கள். ஜப்பான் கம்பெனி களும் குறைந்த கூலிக்கு நூலை வெளிநாடுகளுக்கு ஏற்றிச்சென்றன. இதைக் கண்ட ஐரோப்பியர், பிரமித்துத் தங்கள் கம்பெனிகளைப்பாது காத்துக்கொள்ளும் பொருட்டுக் கப்பற்கூலியை மிகவும் குறைத்து

விட்டனர். ஐயோ, பேராசை பெருநஷ்டமாயிற்று! பொது மக்கள், இதிலிருந்து, 'எதையும் ஒற்றுமையால் முடித்துவிடலாம்,' என்பதை உணர்ந்துகொண்டார்கள். 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு,' என்று நாம் சொல்லவும் வேண்டுமோ?

பருத்திக் கைத்தொழிலிற் கண்ட வெற்றி, இரும்புக் கைத் தொழிலை ஏற்படுத்த ஜாம்ஷட்ஜியைத் தூண்டியது. அதனால் இவர் இந்தியாவில் எங்கெங்கெல்லாம் இரும்பு கிடைக்குமோ அங்கங்கெல் லாம் சென்று தக்கவர்களைக்கொண்டு ஆராய்ச்சி செய்துவந்தார். நிலக் கரிக்கு அருகில் இரும்பு கிடைக்கக்கூடும் என்பது விளங்கியது. இவர் இரும்பைக்கொண்டு இந்தியாவுக்கு வேண்டிய சாமான்களையேனும் செய்யலாம் என்று எண்ணிக் கரக்பூர் என்னும் இடத்துக்கு அருகில் மிகுந்த பொருட் செலவில் இரும்புத் தொழிற்சாலை ஒன்றை ஆரம் பித்தார். இது டாட்டா இரும்புத் தொழிற்சாலை என்ற பெயரால் வழங் கப்படுகிறது. இஃது இருக்கும் இடத்திற்கு ஜாம்ஷட்பூர் என்பது பெயர். இந்த டாட்டா இரும்புத் தொழிற்சாலை ஆயிரக்கணக்கான இந்தியர் களுக்கு உணவளித்து வருகிறது. இத்தொழிற்சாலை, சென்ற ஐரோப் பியப் பெரும்போரில் மெஸபொட்டோமியாவிலும், எகிப்திலும், பாலஸ்தீனத்திலும் இருப்புப் பாதைகள் போடத் தண்டவாளங்களைச் செய்தளித்தது என்றால், இதனுடைய முன்னேற்றத்தைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ?

நாட்டின் இயற்கை வளங்களை நாட்டிற்கே பயன்படுத்த ஜாம்ஷட்ஜி எண்ணியதும் உண்டு. மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள நீர் வீழ்ச்சியை மின்சார உற்பத்திக்குப் பயன்படுத்த இவர் பாடு பட்டார். இப்போதுதான் இவருடைய எண்ணம் நிறை வேறி வருகிறது.

இவ்வாறுக நமது பெரியார் தமது அறிவாற்றலாலும், புத்தி சாமர்த்தியத்தாலும், இடைவிடா மெய்ம் முயற்சியாலும் பல தொழிற் சாலைகளை நிறுவித் தமக்குப் பெருஞ்செல்வம் தேடிக்கொண்ட தோடு நாட்டு மக்களுக்கும் நன்மை செய்தார்; இந்திய நாடு கைத் தொழிலால் செல்வம் மிகுந்து பெருமை அடையக் கூடும் என்பதை விளக்கிக் காட்டினர். இவர் செய்ததுதான் இக்காலத்துக்கு வேண்டிய சிறந்த தருமம். தகுதியற்றவர்களுக்கு எல்லாம் அன்னதானஞ் செய்து நாட்டில் சோம்பேறிக் கூட்டத்தைப் பெருக்கிவிடுவது தக்க தருமம் ஆகாது; விழாக்களுக்கு வீண் செலவு செய்வதும் அறம் ஆகாது. வேலை

கொடுத்து மக்களே மானமுடையவர்களாகச் செய்தலும் நாட்டின் வறுமை நீங்க வழி காட்டலுமே நாம் இக்காலத்திற் செய்யவேண்டிய தருமங்கள். எனவே, இப்படிப்பட்ட தொழிற்சாலைகளும் பஞ்சாலைகளும் தழைத்தோங்கினாற்றான் நம் தாய்நாடும் வறுமை நீங்கிச் செல்வத்திற் சிறந்தோங்கும்.

செய்த நன்மைகள்: நமது பெருந்தகையார், தக்க தருமம் யாது என்பதை நன்கு அறிந்த தேசாபிமானி; ஆகையால், இவருடைய மனம், நம் நாட்டை முந்துறச்செய்வதிலேயே நாடியிருந்தது. வறுமையில் ஆழ்ந்து கிடக்கும் நமது புண்ணிய நாட்டைப் பெருஞ்செல்வம் உள்ள நாடாக்கி, கைத்தொழிலிற் சிறந்த பிற நாடுகளோடு சமநிலை அடையச் செய்யவேண்டும் என்பதே இவர் இரவும் பகலும் கண்ட கனவு. அதற்காக இவர் விஞ்ஞான சாஸ்திர முறையிற் பயிலும் கைத்தொழிற் கல்வியை நம்மவர்க்கு அளிக்க எண்ணினார்; தக்க கல்வியறிவு உள்ள இந்திய மாணவர், வெளி நாடு சென்று விஞ்ஞான முறையில் கைத்தொழிற் பயிற்சி பெறுவதற்கு ஒரு நிதியை ஏற்படுத்தினார். இப்பண உதவிகொண்டு வெளிநாடு சென்று பயின்று வருபவர் இந்தியாவுக்கே தொண்டாற்றி வருகின்றனர்; இப்போது அவர்களால் நமது நாடு பெரிதும் பயன் அடைந்து வருகிறது.

இந்தியாவிலே அவ்விதப் பயிற்சியை நம்மாணவருக்கு அளிக்கவும் ஜாம்ஷட்ஜி வழி தேடினார். அதன் பயனாகப் பெங்களூரில் கலை ஆராய்ச்சிக் கழகம் நிறுவப்பட்டது. இது 1910-லிருந்துதான் மாணவர்களுக்குப் பயிற்சி அளித்து வருகிறது. நோபல் வெகுமதி பெற்று உலகப் புகழ் மாலை சூடிய பேராசிரியர் சர். C. V. இராமன் அவர்கள் இப்போது இக்கழகத் தலைவராய் அமர்ந்து தொண்டு ஆற்றி வருகின்றார்கள்.

இறுதிக் காலம்: ஜாம்ஷட்ஜி முதுமையில் சில காலம் இருதய நோயால் வருந்திக்கொண்டிருந்தனர். 'கடல் யாத்திரையினால் இந்நோய் நீங்கும்,' எனச் சில மருத்துவர் கூறியதால், இவர் 1904-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஐரோப்பாவுக்குப் புறப்பட்டார். அதே வருடம் மார்ச்சு மாதம் இவருடைய அருமை மனைவியார் விண்ணுலகிருந்தினராய்ச் சென்றனர். மனைவியாரை இழந்த துக்கம் ஒரு புறமும் இருதய நோய் மற்றொரு புறமும் தின்புறுத்த, இவருடைய தேகம் மிகவும் மெலிந்தது. கூரிய மதி, எதிர் நோக்கிப் பார்க்கும் ஆற்றல், வாணிபத் திறமை, இடைவிடா ஊக்கம் முதலிய

நற்குணங்கள் வாய்க்கப்பெற்றவரும், இந்திய நாட்டின் வறுமை யைக் களையப் பல தொழில் ஸ்தாபனங்களை ஏற்படுத்தி வழி காட்டிய நல்லறிஞரும், சிறந்த தேச பக்தரும் ஆகிய ஜாம்ஷட்ஜி நசர்வான்ஜி டாட்டா, அந்தோ! 1904-ஆம் ஆண்டு மே மாதம், இந்திய மக்கள் கண் ணீர் விட்டுக் கதற, மண்ணுலக வாழ்வை நீத்து விண்ணுலக வாழ்வை எய்தினர்.

---

7. சந்தோஷம்

(ச. கந்தசாமி முதலியாரவர்கள், தமிழாசிரியர்,
ஹிந்து தியலாஜிகல் உயர் கலாசாலை, சென்னை)

காரிய சித்தியால் ஒருவனுக்கு உண்டாகக் கூடியது சந்தோஷ மாயினும், அக்காரிய சித்தியும் சந்தோஷமுடையவனுக்குத்தான் உண்டாகின்றது. மூலையில் முக்காடிட்டு அழுதுகொண்டிருக்கும் மூதேவிக்கு எக்காலத்திலும் காரிய சித்தியும் உண்டாவதில்லை; சந்தோஷமும் உண்டாவதில்லை. நாமெல்லோரும் இயல்பாகவே சந்தோஷமுடையவர்களாக இருக்கின்றோம்; சந்தோஷ சொரூபமாக இருக்கின்றோம். நடுவில் துக்கம் உண்டாவானேன்? துக்கம் தூக்கத்தினால் உண்டாகின்றது. அஞ்ஞானத்தினால், அறிவின் மையாகிய தூக்கத்தினால், அஃது உண்டாகின்றது. இவ்வுடம்பை நானென நினைப்பதனாலேயே துக்கம் உண்டாகின்றது. இவ்வுலகம் ஒரு நாடக சாலை; நாமெல்லாம் அச்சாலையில் நடிப்பவர்கள்; இவ்வுடல் வேஷம். நாடக சாலையில் அரசனும் ஆண்டியும், சந்தோஷப்படுபவனும் துக்கியும், பணக்காரனும் ஏழையும் உண்டு. ஆனால், எல்லாம் வேஷமாத்திரமேயாதலின், மற்றொருவன் அரச னையிருப்பதைக் கண்டு பொறுமை கொள்ளுவானேன்? தான் ஆண்டியாயிருப்பதால் துக்கிப்பது ஏனோ? நீங்கள் உயர்ந்த அந்தஸ் துள்ள சரீரத்தை வேஷமாகக் கொண்டிருந்தாலும், தோட்டிக்கும் தாழ்வாய சரீரத்தை அடைந்திருந்தாலும், அவற்றால் முறையே பெருமையாவது சிறுமையாவது உங்கட்கில்லை. உங்கள் ஆட்டத் தைச் சரியாக ஆடுங்கள்; நீதிபதியாக நீங்களிருந்தால், அந்த வேலை யைச் சரியாய்ச் செய்யுங்கள்; தெருக் கூட்டும் வேலை உங்களதானால், அதனையுஞ் சரியாகச் செய்யுங்கள். இதில் துக்கம் ஏன்? நாடகத்தில் அழும் காட்சிகளும் வருகின்றன. அழுகின்றவர் உண்மையாகவே அழுகின்றனரா? சந்திரமதி அழுகின்றாள்; ஆனால், சந்திரமதி வேஷத்

தைத் தரித்துள்ளவன், அழும்போதே, "நான் சந்திரமதி என்னும் பெண்ணல்லேன்; என் வேஷம் அவளது; நான் ஆண் மகன்; நான் எந்தக் குழந்தையையும் இழந்துவிடவில்லை; நான் துக்கிக்கவுமில்லை; நூறு ரூபாய் வருமானத்திற்காக நான் இப்போது இப்படி நடிக்கின்றேன்;" என்னும் ஞாபகம் அவன் மனத்திலுண்டு. ஆஹா மாயா நாடகமாகிய இவ்வுலக வியவகாரத்தில் நீங்கள் யாது செய்கின்றீர்கள்? நாடகத்தை நடியுங்கள்; மனத்தில் துக்கம் வேண்டா; சற்றே நிதானியுங்கள். நீங்கள் யார்? நீங்கள் இவ்வுடலங்களேயோ? இவ்வுடலங்க ளொழிந்தால் நீங்களுமொழிந்து போவீர்களோ? இல்லை, இல்லை! இவ்வுடல் தரித்துக்கொண்ட ஒரு சட்டை. 'ஆன்மா அழியாதது,' என்னும் வசனத்தைக் கேட்டிருக்கின்றீர்களா? அழிவுடைய இவ்வுடல் ஆன்மாவாமோ? அல்லவெனின், அழிவிலாத ஆன்மாவன்றே நீங்கள்? உள்ளே பாருங்கள். உற்பத்தி நாசமில்லாததும், சுக துக்கமில்லாததும், அறிவாநந்த வடிவமுமான ஆன்மாவன்றே நீங்கள்? அந்த ஆன்மாவுக்கு யாராவது துன்பம் செய்தல் முடியுமா? துன்பம் அதனை யணுகுமா? அணுகாதன்றே? இதனை யறியுங்கள்; கைகொட்டுங்கள்; எப்போதும் சந்தோஷியுங்கள். "சந்தோஷமாகவும், சாந்தமாகவும், புத்திப் பிரசன்னமாகவும் இருத்தல் வேண்டும்," என்று சொல்வதெளிது. அனுசரிப்பதரிதன்றே? இன்று இதனைப் படித்தீர்கள். நன்றாய்த்தானிருக்கின்றது. இதனையறிவதும் அதிக கஷ்டமன்று; கொஞ்சம் அமைதியும் யோசனையுமே வேண்டும்.

போனதைப்பற்றி வருந்தியும், இனி வருவதைப்பற்றி ஏங்கியும் வீண் காலம் போக்குவோ ரநேகர். நடந்த காரியத்தைப்பற்றி இப்போது நினைப்பானேன்? நிகழ்காலத்தைப் பயன்படுத்திக்கொள்பவனுக்கு எதிர் காலம் திருந்தியதாகவும் சந்தோஷம் கொடுக்கக் கூடியதாகவுமே யிருக்கும். நள்ளிருளில் ஒருவன் வழி நடக்க வேண்டுமாயின், தான் செல்ல வேண்டிய இருபது மைல் தூரமும் இருட்டாயிருப்பதபற்றி அவன் வருந்துவதில்லை; பத்தடியளவு வெளிச்சம் கொடுக்கக்கூடிய ஒரு விளக்கை எடுத்துக்கொண்டு, வெளிச்சமாயிருக்கின்ற பத்தடியளவைக் கடந்து செல்லின், இன்னும் பத்தடியளவுள்ள வழி வெளிச்சமாக்கப்படும். இவ்விதம் அவன் நடக்கும் இருபது மைல் தூரமும் வெளிச்சமுள்ளதாகவே யாகின்றது. எவ்வளவு தூரம் வெளிச்சமிருக்கின்றதோ, அவ்வளவு தூரம் நடந்து சென்றால், மேலும் மேலும் வழி வெளிச்சமாய்க்கொண்டே போகின்றது.

கொஞ்சங்கூட இருட்டுத் தோன்றாது. ஆகையால், ஏன் நிற்க வேண்டும்? நிகழ் காலத்தை வீணுக்காது வேலை செய்துகொண்டே யிருங்கள்; அதனைச் சந்தோஷத்துடன் செய்யுங்கள். உண்மையான ஆர்வத்துடன் வேலை செய்பவனுக்குத் தடையே நேராது. ஆதலின், நாமேன் சந்தோஷத்தையும் அமைதியையும் கைவிடல் வேண்டும்? நீந்தத் தெரியாதவர் தவறிக் குளத்தில் விழுந்துவிட்டால், அமைதியா யிருப்பதனாலேயும் தம்மைக் காத்துக்கொள்ளல் கூடும். தண்ணீரினிடத்திருப்பதைக் காட்டிலும் மனிதனிடத்துப் பூமிக்கு ஆகர்ஷண சக்தி குறைவா யிருப்பதால், அம்மனிதன் தண்ணீரில் மிதப்பன். ஆனால், பெரும்பாலும் மனிதர் தண்ணீரில் விழுந்ததும் மன அமைதியை இழந்துவிடுவதால், மிதக்கக் கருதித்தாம் செய்யும் முயற்சிகளாலேயே அமிழ்ந்துவிடுகின்றனர். அதுபோலவே, எதிர் காலத்தில் காரிய சித்தியை யடைய விரும்பி நாம் கொள்ளும் பதட்டமும் அமைதியின்மையுமே நமது காரியத்தைக் கைகூடாதபடி செய்து விடுகின்றன.

எதிர்காலத்திலுண்டாகப் போகும் நன்மைகளையே உறுதியாக நம்பிக் காரிய சித்தி பெற விரும்பி அலைபவனது கதி, தன்னிழலைப் பிடிக்க எண்ணி ஓடி யலுத்தவனது கதையாம். ஆண்டாண்டு தோறும் ஓடி யலுத்தாலும், ஒருவன் தனது நிழலைப் பிடித்த லியலாது. நல்லது; அம்மனிதனே தனது நிழலின் பின்னோடுவ தொழிந்து, நிழலுக்கு முதுகு காட்டிச் சூரியனை நோக்கி யோடினால், அந்நிழல் அவன் பின்னே நாய்போ லோடிவரும். ஒருவன் ஜயத்தை விரும்பி யலையும்வரை அவனுக்கு அது சித்திப்ப தில்லை. ஜயத்தை விரும்பி யலைவதும், சந்தர்ப்பங்களை நினைந்து சங்கடப்படுவதும் ஒழிந்து, நிகழ்காலத்தில் தான் செய்ய வேண்டிய காரியங்களில் தனது சக்தியையும் புத்திபையும் செலுத்துபவனுக்கு ஜயமுண்டாகும். ஜயத்தின் பின்னே நீங்களோட வேண்டா; உங்கள் வேலையை நீங்கள் சரியாகச் செய்தால், ஜயம் உங்களைப் பின் தொடரும். நியாயாதிபதி, நியாயவாதி(வக்கீல்) களையும் கட்சிக்காரரையும் சேவகரையும் எதிர் பார்ப்பதுமில்லை; கூப்பிடுவதுமில்லை. நியாயாதிபதி வந்ததமது ஆசனத்தமருவாரானால், எல்லோரும் தாமே அவ்விடம் வருகின்றனர். சூரிய சன்னிதானத்தில் உயிர்களெல்லாம் தாமே தொழிற்படுகின்றன. நீங்கள் உடலே ஆத்துமா என்ற புத்தியொழிந்து, உங்கள் ஆத்துமாவை யறிந்து,

அதன் சச்சிதானந்தத் தன்மையினை யுணர்ந்து, எந்நாளும எந்நேரமும் இனிய புன்னகையுடன் விளங்குவீர்களாயின், உங்கள் சன்னிதானத்தில் எக்காரியமும் ஏதுங் குறைவின்றி நன்மையாகவே நடந்து வரும். அநேகர் பொற்பணிகளையும் இரத்தினங்களையும் காதுகளில் மாட்டிக்கொள்கின்றனர். அவற்றைவிடக் கடவுள் நமக்கு உதவிய அணிகலன்களாகிய நல்லெண்ணம், புன்னகை முதலிய அன்பினுலாம் பணிகளை அகத்திலும் முகத்திலும் மாட்டிக்கொண்டால், எவ்வளவு அழகாயிருக்கும்! அவற்றைக் கொள்வதற்கு நாம் பணம் செலவழிக்க வேண்டுவதில்லையே! அவை நமக்குப் பணத்தைச் சாம்பாதித்துத் தருமே!! விருப்பு வெறுப்பின்றி விளங்குவோர்க்கு விண்ணுலகோரும் தொண்டு புரிவரன்றே?

அநேகர் கடமைக்கு அடிமைப்பட்டு, "நான் இதனை முடிக்கவில்லையே! அதனை யாரம்பிக்க வில்லையே!" என வருந்துவர். அவர்கள் அடைவது அலைச்சலே; அவர்களுக்கு ஓய்வு கிடையாது. கடமை என்பது, உங்களுடைய நன்மைகளையும் மேன்மைகளையும் கெடுத்துவிடாதபடி பார்த்துக்கொள்ளுங்கள். நீங்களை உங்களுக்கு எஜமானர்கள். பெரியவர்களையும் சிறியவர்களையும்உண்டாக்கினவர்கள் நீங்களை. உங்களுக்குப் பணம் எவ்வளவு அவசியமோ, அவ்வளவு உங்கள் வேலைகள் உங்கள் எஜமானர்களுக்கு இன்றியமையாதன.

"எஜமானர்களிடம் பணிவுடன் நடந்துகொள்ள வேண்டா," என்று நான் கூறுவதாகத் தப்பபிப்பிராயங் கொள்ளாதீர்கள். பணிவு என்பது உலகத்தார்க்கு இருக்க வேண்டிய உயர்ந்த நற்குணங்களிலொன்று. அக்காரணம் பற்றியே ஔவையார், 'ஓம்போராயினுந்தாழ்வுரை,' எனக் கூறிப் போந்தனர். ஈண்டுச் சொல்லப்படுவதெல்லாம், "கடமை, பொறுப்பு, பயம் முதலியவற்றுல் நீங்கள் உங்களைச் சஞ்சலப்படுத்திக்கொள்ள வேண்டா; சாந்தமாக, சந்தோஷத்துடனிருந்து உங்கள் வேலையைச் செய்யுங்கள்; நீங்கள் உங்களை வேலைக்காரராகவும்,கஷ்டமான வேலைகளைச் செய்பவராவும் நினைக்கவேண்டா; நீங்கள் உங்களை அரசர்களாகவும், பொழுது போக்கும் உற்சாகமும் வேண்டிச் சில விளையாட்டுக்களை ஆடுபவராகவும் நினைத்துக் கொள்ளுங்கள். அரசர்களும், மந்திரிகளும், அக்கிராசனாதிபதிகளும் (உங்களைச் சந்தோஷிப்பிக்க ஏற்பட்ட) உங்களுடைய வேலைக்காரர்களை," என்பதேயாம்.

8. செஞ்சிக் கோட்டை

(தை. ஆ. கனகசபாபதி முதலியார் அவர்கள், தமிழாசிரியர்,
ஹிந்து தியலாஜிகல் உயர் கலாசாலை, சென்னை)

நந்தமிழ் நாட்டிற் பண்டைநாளிற் பல்வளங்களோங்கித் திகழ்ந்த நகரங்கள் பலவற்றுள்ளும் செஞ்சி நகருமொன்றென்பதை யறியாதார் ஒருவருமிலர். அந்நகர், ஒருகால் ஜய சிங்கு மன்னர் முதலியோர் ஆட்சிக்குட்பட்டு விளங்கிற்று. அதன் எல்லைக்குள் வடக்குத் தெற்காகத் தெளிந்த நீருடைய ஆறொன்று எருமையன்ன கருங்கற் கள் இடையிடையே அமையப் பெற்று அழகிய தோற்றத்தோடு பாய் கின்றது. அதனைக் கடந்து சிறிது தூரம் செல்லின், பல கட்டடங் களைத் தங்கள் உச்சியிற் கொண்ட இரண்டு மலைகள் தோன்றுகின் றன. அம்மலைகளை நோக்கிச் செல்லும் வழியில் இடையிடையே அழகிய வீடுகளையும் பச்சைப்பசேரென்ற வயல்களையும் பார்த்துக் கொண்டே போவோமானால், பெரிதும் தூர்ந்து, உடைந்த கரைகளை இருமருங்கும் பெற்று, அற்பப் பிராணிகளும் அசட்டை செய்யும் ஆழமுடைத்தாய்ப் பாழே உருவெடுத்தாற் போன்றதோ ரகழியைக் காணலாம். அதனைச் சார்ந்து அகன்றுயர்ந்து அழிவுற்ற உறுப்புக்கள் பல கொண்டு, வடக்குத் தெற்காகச் சென்று இரண்டு மலைச்சரிவு களைச் சேர்க்கின்ற கோட்டைச் சுவரொன்று, படுகாயப்பட்டும் வீரங் குன்று வீரனே போன்று நிற்கின்றது.

அச்சுவரின் அமைந்துள்ள வாயிலைக் கடந்து உட்சென்றதும் வலப்பக்கம் இராச கிரி என்று கூறப்பெறும் ஒரு சிறு மலை, மக்கள் தன் உச்சியை யடைதற் பொருட்டு அமைக்கப்பட்டுள்ள மூன்று வழிகளுடன் சற்றேறக்குறைய 370 அடி உயரமுடையதாய் விளங்கு கின்றது. அம்மலையின் படிகள் யாவும் செம்மையாக அமைந்துள வேனும், பெரிதும் மனிதர் போக்கின்மையால் போவார்க்குப் பெருந் துன்பத்தை விளைக்கின்றன. உச்சியிற் சபாமண்டபமொன்று, அரசர் அமர்வதற்கு ஓரழகிய மேடையையும் நான்கு பக்கங்களில் நான்கு திண்ணைகளையும் பெற்று ஓங்கியுயர்ந்து காண்பார் மனத்தைக் கவர்கின் றது. அவ்வழகிய மண்டபத்திற்கருகில் நாற்றிசையும் அழிவுற்று இருட் டிற்கிருப்பிடமாய், ஆந்தையும் கழுகும் அழுதற்கமைந்த வீடேயாய், கோ இன்றியுங் கோயிலெனப் பெயரளவிலிருக்கும் ஆலயமொன்

றைக் காணலாம். அதன் பக்லொரு நீர்ச்சுனை பண்டு மக்கட்குப் பெரும்பயன் அளித்து இன்று கருதுவாரின்றி யிருக்கின்றது.

ஒருபால் ஏறக்குறைய 70 அடி நீளமும் 37 அடி அகலமும் 30 அடி உயரமுமுள்ள ஒரு பெரிய கட்டடம், அங்குப் போவாரைத் தன்னிடம் வருகவென்றழைப்பது போன்று உயர்ந்திருக்கின்றது. அப் பெருங்கட்டடத்திற்கு அமைந்த சுவர்கள் நான்கோடு குறுக்குச் சுவரைச் சார்ந்து அதற்குட்பக்கத்தில் மேலேறுதற்கென்று கட்டப்பட்ட சுமார் 2 அடி நீளமுள்ள படிகள் உள்ளிருப்பார்க்குத் தோன்றுதவாறு எழுப்பப்பட்ட ஐந்தாஞ் சுவரொன்றுமுண்டு. அச்சுவர்களுக்குமேல் வானம் கவிந்தாற் போன்ற ஒரு பெரிய வளைவுப்பதுங்கு வேறுதரவின்றிப் பொருந்தி இருக்கின்றது. அக்கட்டடத்துள் பொருந்துதற்கு இருப்பும் மரமும் தவம் செய்தில. ஏறக்குறைய $2\frac{1}{2}$ அடி அகலமும் 6 அடி உயரமுமுள்ள ஒரு வாயிலும், உத்தேசம் 2 அடி அகலமும் 6 அடி உயரமுமுள்ள ஒரு படி வாயிலுமன்றி, சற்றேறக்குறைய 3 அடி அகலமும் 2 அடி உயரமுமுள்ள இரண்டு பல கணிகளும், மேற்பதுங்கில் சுமார் $1\frac{3}{4}$ அடி நடு அளவுள்ள ஒரு வட்டமான துவாரமும் அக்கட்டடத்தில் காணப்படுகின்றன. அதனருகில் கவனிப்பாரின்மையால் மேற்பதுங்கில் பெரும்பிளவுள்ள மேற்கூறிய அளவுள்ள கட்டடமொன்று இருக்கின்றது. அதனை ஒரு சுவர் இரண்டறைகளாகப் பிரிக்கின்றதெனினும், அது பதுங்களவு உயர்த்தப்படவில்லை. அச்சுவர் அரசாங்கத்தாரால் சில வருடங்களுக்குமுன் மேற்பதுங்கைத் தாங்குதற்கென்று எழுப்பப்பட்டதென்றும், யாதோ தடையால் அஃது இடையே நிறுத்தப்பட்டதென்றும் அந்நகர மக்கள் கூறுகின்றார்கள். இவைகளேயன்றிச் சில சிறு கட்டடங்களும் அழிவுற்றிருக்கின்றன.

மலையை விட்டுக் கீழிறங்கிச் சிறிது தூரம் செல்லின், இராணிகிரியை நோக்கிச் செல்லும் வழியில் அரசர் அந்தணர் வணிகர் வேளாளர் எனு நாற்பாற்பட்ட மக்கள் இருத்தற்கு இடமாய் நின்றழிந்த மாளிகைகளின் சின்னங்களைக் காணலாம். சில கஜங்களுக்கப்பால் மலைமீதேற முதலாக நடைதற்கென்று பொருந்திய வாயில்முன் ஓர் அகழி மலையைச் சார்ந்து செல்கின்றது. அவ்வாயிலுக்கெதிரில் நன்னிலையில் ஒரு மசூதி ஜய சிங்கு மன்னர்க்குப் பின்னிருந்த மகமதியர் காலத்தில் கட்டப்பட்டு, இன்றும் புதிய நிலைமையிலிருக்கின்றது. ஆயினும், அஃது உபயோகிப்பாரின்மையால் வெகு சீக்கிரத்தில் அழி

வுற்றுச் சிதைந்தழிந்த மற்றவைகளோடு ஒன்றுக வைத்தெண்ணும் தன்மையை அடையும் என்பதற்கோர் ஐயமில்லை. அதனருகில் ஆலயமொன்று பாழ்பட்டு மனிதர் போக்கின்றி, நாய்க்கும் நரிக்கும் அமைந்த வீடாய் இருக்கக் காணலாம். அதற்கு அரணாக நாற்றிசையும் நான்கு பெருமதில்கள் உயரமும் பலமும் பெற எழுப்பப்பட்டிருக் கின்றன. ஆயிரக்கால் மண்டபமொன்று, மேற் பாவியிருந்த கற்கள் பல கீழ்ச்சரிந்தும், கால்கள் பல பூமியிற் புதைந்தும், சீர் குலைந்திருக் கின்றது. அழகிய கிணறொன்று, சூரிய கிரணம் படா நிலைமையிலும் தெளிந்த நீருடன் அழிந்த ஆலயத்தின் அழகு அடியோடு கெட்டுப் போகாதவாறு காக்க நிற்பது போன்று அமைந்திருக்கக் காணலாம். மிகவும் விசாலமாகக் கட்டப்பட்ட அக்கோயில், ஒரு சமயம் நூற்றுக் கணக்கான மக்கட்கு இடம் கொடுத்து, இன்று பயமற்று ஒருவன் தங்க இயலாத நிலைமையிலிருப்பது என்னே! தூண்களிலும் சுவர் களிலும் அழகிய சிற்பங்கள் செதுக்கப்பட்டில்லை எனினும், அவ்வால யம் ஆதியில் சுத்தமான வேலைப்பாடமையக் கட்டப்பட்டதென்பதை எவரும் மறுத்தலியலாது. அதன் உள்ளும் புறமும் சுற்றிச்சுற்றிப் பார்ப்பினும், விக்கிரகம் ஒன்றையேனும் காண்பதரிது. அதற்கு எதி ரில் ஏறக்குறைய 17 அடி உயரமும் 1½ அடி சதுரமுமுள்ள கருங்கற் கம்பம் பல பட்டைகளுடன் விளங்குகின்றது. அதற்குக் கிழக்கில் ஒரு சிறு கட்டடமிருக்கின்றது. அதனை, மக்கள் ஆங்கிருந்த சிறைச் சாலை என்று கூறுகின்றார்கள். ஆனால், அஃது இப்பொழுதிருக்கும் நிலைமையால் உண்மையை அறிதற்கிடனில்லை.

இராணிகிரியின் வாயிலையடைந்து பல மதில்களைக் கடந்து உட் சென்றதும், ஒரு பெருவெளியை யடையலாம். ஆண்டுச் சற்றேறக் குறைய இருபதுக்கிருபதடி சதுரமுள்ள கலியாண மஹால் என்ற பெயர் பெற்ற ஒரு செங்கற் கட்டடம் ஏழு அடுக்குடன் புத்தம்புதிய தாக விளங்குகின்றது. அதன் அமைப்பும் வேலைப்பாடும் முற்கூறப் பட்ட மசூதியை யொத்திருப்பதால், அதுவும் மகமதியர் காலத்தில் கட்டப்பட்டதாகவே இருத்தல் வேண்டும். அக்கட்டடத்தில் ஒன் றின்மேலொன்றுகப் பொருந்திய அறைகள் ஏழும் தெற்குத் திசையை நோக்கியுள்ளன. கிழக்குப் பக்கமும் மேற்குப்பக்கமுமிருக் கும் சுவர்களில் இரண்டிரண்டு வாயில்கள் இருக்கின்றன. அவ்வாயில் களுக்கமைந்த படிகளின் சூழ்ச்சியை நேரிற்கண்டே அனுபவித்தல் வேண்டும். சில அடிகளுக்கப்பால் உத்தேசம் பதினேழுக்குப் பதி

னேழடிச் சதுரமும் 6 அங்குலம் கனமுமுள்ள சுத்தமாகத் தேய்க்கப் பட்ட ஒரு கருங்கல், ஏறக்குறைய 7 அடி நீளமுள்ள சுத்தமாகத் தேய்க்கப்பட்ட குழவியைப் பக்கலில் பெற்று விளங்குகின்றது. ஆனல், அச்சதுரக்கல் பல துண்டுகளாக உடைந்த நிலையில் இப்பொழு திருக்கின்றது. பின்னும் இராச கிரியிற் கூறிய பெரிய கட்டடத் தைப் போன்ற மூன்று கட்டடங்கள் ஒன்றுகச் சேர்த்துக் கட்டப் பட்டிருக்கின்றன. அந்நகர மக்கள் அக்கட்டடத்திலுள்ள மூன்று அறைகளும், நெல் கேழ்வரகு கம்பு முதலியன சேமித்து வைப் பதற்காகக் கட்டப்பட்டன என்று கூறுகின்றூர்கள். இவைகளே யன்றித் தொடர்ச்சியாகச் சில சிறு கட்டடங்களும், எண்ணெய் சேமித்து வைப்பதற்காகப் பூமியில் ஒரு சிறு கட்டடமும், கோட்டடி ஹால் என்கின்ற பெரியதொரு கட்டடமும் இருக்கின்றன.

பின்னர் ஏறக்குறைய 700 அடி உயரமுள்ள மலைமீதேறிப் பல நூற்றுக் கணக்கான படிகளையும் ஓரிருப்புப் பாலத்தையும் கடந்து மேற் சென்றல், மலையின் உச்சியை அடையலாம். மலைமீது சரிவான பாகங்களில் பகைவர் எளிதாக மேலேறுவண்ணம் பல சுவர்கள் எழுப் பப்பட்டிருக்கின்றன. ஆண்டு இராசகிரியின் கட்டடங்களைப் போன்ற மூன்று கட்டடங்கள் வெவ்வேறிடங்களில் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனல், அவைகளில் ஒன்று, பல *தூண்களையும் ஓரிரும்புக்கதவினையும் பெற்று அழகாக விளங்குகின்றது. அவ்விரும்புக்கதவு சில வருடங் களுக்குமுன் அரசாங்கத்தாரால் அக்கட்டடம் பழுது பார்க்கப்பட்ட பொழுது அமைக்கப்பட்டதென்று அங்கிருப்பவர்கள் கூறுகின்றூர் கள். மற்றொரு கட்டடம், இடிந்தழிந்து பாழாய்க் கிடக்கின்றது. வேறொன்று இன்னும் வசித்தற்கு யோக்கியமாயிருக்கின்றது. பின் னும் சுமார் $10\frac{1}{2}$ அடி நீளமுள்ள ஒரு பீரங்கியும், செங்கற்களால் கட்டப்பட்ட ஒரு மணிக்கூண்டும், பாழ்பட்ட ஒரு கோயிலும், சில கட்டடங்களும், நீருள்ள மூன்று சுனைகளும் காணப்படுகின்றன. அம்மூன்று சுனைகளில் ஒன்றிலுள்ள நீர் குடித்தற்குத் தகுதியுடைய தாய் இருக்கின்றது. ஒரு பள்ளத்தில் சுமார் 60 அடி நீளமும் 30 அடி அகலமுமுள்ள ஒரு செங்கற் கட்டடம், உட்சென்று பார்க்க இயலாத நிலைமையில் இருக்கின்றது.

தென்னாட்டின் அழகையும் பண்டைச் சிறப்பையும் தெளி வாக விளக்கும் கருவிகளில் பாழடைந்துள்ள செஞ்சி நகரும்

* கற்களால் சதுரமாகக் கட்டப்பட்ட கட்டைகள்

ஒன்று. ஆதலின், தமிழரும் பிறரும் இதன் பண்டைச் சிறப்பியல்களையும் இன்றுள்ள நிலைமையினையும் நேரிற் கண்டுணரல் வேண்டுமென்பதே இக்கட்டுரையின் நோக்கம். கற்றோர்க்கும் மற்றோர்க்கும் கண்ணுக்கும் மனத்திற்கும் விருந்தளிக்கும் செஞ்சிக் கோட்டையைக் காணுது கழியும் வாழ்க்கை, தென்னாட்டிற் பிறந்தும் அந்நாட்டின் பயன் நுகர்ந்தறியா வாழ்க்கையேயாகும் என்பது திண்ணம்.

---

9. வருணனை

(மயிலை. சிவ. முத்துக்குமாரசாமி முதலியார் அவர்கள், தமிழ்ப் புலவர், முத்தியாலுப்பேட்டை உயர் கலாசாலை, சென்னை)

வருணனை என்பது நேரில் கண்டு வியந்த ஒன்றினைக் குறித்து ஒருவன் பிறனொருவனிடம் அழகு பெற விளக்கிக் கூறுதல் ஆகும். இதனைத் தமிழர் அணி எனவும், வடமொழியாளர் அலங்காரம் எனவும் உரைப்பர்.

புலமை மிகுதியும் வாய்ந்த பெரியோர், தம் மனோபாவனா சத்தியினால், தாம் கனவினும் கண்டறியாத ஒன்றினைக் குறித்தும் சொல்லழகு பொருளழகு ததும்பப் புனைந்து கூறுவர். அவ்வருணனைகள் பல்வகைப்பட்டிருப்பினும், பொதுவாக உயர்வு நவிற்சி, இயல்பு (தன்மை) நவிற்சி என்னும் இரு வகைகளுள் அடங்கிவிடும்.

'மலைபோன்றுயர்ந்த தோள்கள்,' எனவும், 'கடல் போன்றகன்ற கண்கள்,' எனவும் கூறப்படுவன உபசார உரையேயன்றி உண்மையுரையல்லவாகலின், உயர்வு நவிற்சியேயாகும். 'மாந்தளிர் போன்ற மேனி,' எனவும், 'மாவடு வகிர்ந்தாலொத்த கண்கள்,' எனவும் வருவன பெரிதும் பொருத்தமுடைமையின், இயல்பு நவிற்சி (தன்மை)யுள் அடங்கும். அன்றியும் உவமை சிறிதும் இன்றி உள்ளன உள்ளவாறே கூறப்படுவனவும் இயல்பு நவிற்சியேயாகும்.

முற்காலத்தே நம் தமிழ் நாட்டிலே பெரும்புகழ் கொண்டு விளங்கிய புலவர் பலரும் இயற்கை வருணனையினையே பெரிதும் போற்றி வந்தனர். அத்தகைய பெரும்புலவருள் ஒருவராய நக்கீரனார் பாடிய நெடுநல்வாடை என்னும் பாட்டில் வரும் குளிர் கால வருணனையினை உரை நடையில் ஒருவாறு சுருக்கிக் கூறுகின்றேன்:

உலகமெல்லாம் குளிரும்படி மேகம் கார் காலத்து மழையினைப் பெய்தது. வளைந்த கோலினைத் தாங்கிய இடையர், அம்மழை வெள்

ளத்தின் மிகுதியைக் கண்டு வெறுத்துத் தம் ஆடுமாடுகளை மேட்டு நிலங்களிலே மேயவிட்டுத் தம் இருப்பிடம் நீத்து வேறிடம் தேடல் நேர்ந்தமைக்கு வருந்தலாயினர். அவர்கள் அணிந்திருந்த பூமாலைகள் மழையினால் நிலை குலைந்திருந்தன. அவர்தம் பற்கள், குளிர் தாங் காது பறை கொட்டலாயின. ஆதலின், அவர்கள் ஒன்று கூடித் தங்க ளிடமிருந்த நெருப்புச் சட்டியில் கையைக் காயவைத்துக் கன்னங் களில் ஒற்றிக்கொள்ளலானார்கள்.

குளிரின் மிகுதியால், ஆடுமாடுகள் மேய்தற்றொழிலையும் மறந்து ஏங்கி நின்றன. குரங்குகள் கூனிட்டுக் கிடந்தன. மரங்களில் தங்கி யிருந்த பறவைகள் வாடையின் கொடுமை பொறாது நிலத்தே விழுந்தன. பசுக்கள் குளிர் மிகுதியால் தங்கள் கன்றுகளுக்குப் பால் கொடாது அவைகளை உதைத்துத் தள்ளின.

மழை வெள்ளத்தின் வேகத்திற்கு ஆற்றாத கெண்டை மீன்கள் மெதுவாக நீர் வற்றிய மணற்றிட்டுகளின் அருகே வர, அவற்றின் வரவு நோக்கி வாடியிருந்த பைங்காற் கொக்குகளும், செவ்வரி நாரை களும் ஆங்காங்கேயிருந்து, அவைகளைப் பிடித்துத் தின்னலாயின.

நீர் நிறைந்த அகன்ற வயல்களில் செழுமையுடன் வளர்ந்திருந்த நெற்கதிர்கள் மழையினால் தலை வணங்கி நின்றன. பருத்துயர்ந்த கமுக மரங்களின் குலைகள் உருண்டு திரண்ட பசுங்காய்களுடன் கண் களுக்கு அழகு தந்து நின்றன. மணமிகுந்த மலர்களைக்கொண்டிருந்த அகன்ற சோலைகள், மழையின் மிகுதியால் பூக்கள் உதிரவும் நீர்த் துளிகள் துளிக்கவும் நின்றன.

இரு புறங்களிலும் மாட மாளிகைகள் ஓங்கி விளங்க, இடையே ஆறு போன்று அகன்றிருந்த நீண்ட வீதிகளில், இறகிய தோளும் முறுக்கேறிய உடலும் பெற்ற மிலேச்சர், கள்ளுண்டு மகிழ்ந்து, சிறு தூறலுக்கும் அஞ்சாராய்த் திரியலாயினர்.

மழையினால் பொழுதறியவியலாத மகளிர், தட்டில் இருந்த பிச்சிப் பூக்கள் மலர்ந்ததால் மாலைப் பொழுதாயினமையுணர்ந்து; நெல்லையும் மலரையும் தூவித் தம் இல்லுறை தெய்வம் வணங்கலாயி னர். வீட்டில் வளரும் புறுக்கள், மழையினால் இரவு பகல் அறியாது இரையுண்ணவும் விரும்பாது, பறத்தலும் தவிர்த்துக் கால் மாறி நின்று காலங் கழித்தன.

காவலோடு கூடிய பெரிய மாளிகைகளிற் குற்றேவல் புரியும் இளைஞர், கரிய சாந்தம்மியிலே கத்தூரி முதலிய வாசனைக் கலவை

யினை அரைக்க வடநாட்டினின்று கொணர்ந்த வெண்கல் தென்றிசைச் சந்தனக் கட்டையுடன் பயனின்றிக் கிடந்தது.

குளிரின் மிகுதியால், மகளிர் தம் கூந்தலினை மாலையிட்டு முடியாமல் மங்கலமாகச் சில மலரிட்டு முடிக்க விரும்பிச் சந்தன விறகிலே நெருப்பையுண்டாக்கி, அதிலே அகிற் கட்டையினையும், கண்ட சருக்கரையையும் கூட்டிப் புகைத்தனர்.

பல வேலைப்பாடுகளுடன் விளங்கிய சிவந்த ஆலவட்டம், உறையிடப் பெற்றுச் சிலந்தி வலை சூழ, வளைந்த மரச் சட்டத்திலே தொங்கிக்கொண்டிருந்தது. பெரிய மாளிகைகளில் தென்றலின் பொருட்டுத் தென்புறமாக அமைக்கப்பட்டிருந்த கதவுகள் அழுத்தமாகத் தாளிடப்பட்டுக் கிடந்தன. வாடையின் கொடுமையால், மக்கள் குவிந்த வாயினையுடைய குடத்தில் இருந்த தண்ணீரை உண்ணுதவர்களாய், அகன்ற வாயினையுடைய கல்யங்களில் இட்ட நெருப்பின் வெம்மையினை விரும்பினர்கள்.

மாணவர்களே, இப்புலவர் பெருமானர் குளிர் காலத்தின் இயல்பினைப் புனைந்துரை சிறிதும் இன்றி அழகு பெற விளக்கிக் கூறியிருத்தலைக் கூர்ந்து நோக்கி இன்புறுங்கள். சிறந்த ஓவியப் புலவனும் சித்திரித்துக் காட்டவியலாத சின்னஞ்சிறு நிகழ்ச்சிகளையும் இப்புலவர் தம் நுண்ணுணர்வால், கற்போர் உள்ளம் கவருமாறு எடுத்துரைக்குந் தன்மை பெரிதும் பாராட்டற்பாலது. பண்டைத் தமிழ் நூல்களில் இத்தகைய வர்ணனைகள் மலிந்திருத்தலை நாம் காணலாகும்.

---

10. சர்வ தேச சங்கம்

(ரா. அரங்கநாயகி அம்மையார் அவர்கள், தமிழாசிரியர்,
'வித்தியோதயா' பெண்கள் உயர் கலாசாலை, சென்னை)

அறத்தின் பேராலும், நாடு பிடிக்கும் சுயநல வேட்கையாலும் அரசர் ஒருவருக்கொருவர் போர் புரிதல் தொன்று தொட்ட வழக்கமாகும். பகுத்தறிவும், நாகரிகமும், குடியாட்சிக் கொள்கையும் வளர்ந்து விளங்குவதாகச் சொல்லப்படும் இக்காலத்திலும் போர்க் கோலங் கொள்ள முனைந்து நிற்கும் வல்லரசுகள் பல உண்டு என்பதில ஐயமில்லை. ஐரோப்பியப் பெரும்போருக்குப் பின்னர், இனி உலகில் போருக்குரிய முயற்சிகளெல்லாம் அடியோடு ஒழிதல் வேண்டும் என்ற உணர்வு எங்கும் பரவலாயிற்று ; எனவே,

1920ஆம் ஜனவரிமீ 1உயில் பாரிஸ் நகரில் ஜெர்மனியும் நேச தேசங்களும் சமாதான உடன்படிக்கை செய்துகொண்ட பொழுதி லேயே 'சர்வ தேச சங்கம்' (League of Nations) என்னும் பேரால் ஒரு கழகம் நிறுவப்பட்டது. இந்தச் சர்வ தேச சங்கத்தின் முக்கிய நோக்கம், வல்லரசுகளின் போர் முயற்சிகளைத் தடை செய்து சமாதான முறையில் உலக நலத்தை நாடுதலேயாகும்.

இப்பொழுது இச்சங்கத்தில் ஐம்பத்தேழு தேசங்கள் சேர்ந்திருக் கின்றன. இந்நாடுகளெல்லாம், சமாதான முறைகள் பயனின்றிக் கழிந்தாலொழியப் போருக்கு முனைவதில்லை என்றும், சங்கத்தின் முடிவுக்குக் கட்டுப்படுவதென்றும் ஒப்புக்கொண்டிருக்கின்றன. சங்க முடிவுக்குக் கட்டுப்படாத நாட்டைப் பொருளாதாரத் துறையிலும் வர்த்தகத் துறையிலும் பகிஷ்கரித்தல், அவசியமானால் தரைப்படை கடற்படை இவற்றின் துணைகொண்டு அடக்குதல், சங்கத்தினின் றும் நீக்கல் ஆகிய வழிகளில் தண்டிக்கலாம் என்னும் விதிகள் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. சர்வ தேச சங்கத்திற்சேர்ந்துள்ள நாடுகளெல்லாம் தங்களுக்குள் ஏதேனும் உடன்படிக்கை செய்து கொள்ள நேர்ந்தால், அதை அச்சங்கத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டும்; அங்ஙனம் பதிவு செய்யப்படாத உடன்படிக்கை செல்லு படியற்றதாக மதிக்கப்படும். இது சர்வ தேச சங்கத்தில் ஒரு முக் கிய விதி. இதுகாறும் இவ்விதிக்கு இணங்கச் சுமார் இரண்டாயிரத் தைந்நூறு உடன்படிக்கைகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

உலகத்திலுள்ள முக்கியமான தேசங்களில் ருஷியா, அமெரிக்க ஐக்கிய மாகாணங்கள் போன்றவை இன்னும் சர்வதேசசங்கத்தில் அங் கங்களாகச் சேரவில்லை; எனினும், அவை உலக நலத்தின் பொருட்டுச் சர்வதேசசங்கம் மேற்கொண்டு நடத்திவரும் காரியங்களில் அபிமானங் காட்டி வருகின்றன. போர்க்கருவி யொழிப்பு (ஆயுதப் பரிஹரணம்), பொருளாதாரம், சமூக முன்னேற்றம் முதலியவற்றைக் குறித்து நடைபெறும் மஹாநாடுகளில் ஒவ்வொரு தேசமும் கலந்து உழைக்க வேண்டும் என்ற உண்மை, எல்லா நாடுகளாலும் நன்கு உணரப் பட்டிருக்கின்றது. சர்வதேசசங்கம் தொடங்கிய காரியங்கள் நன்முறை யில் நடைபெற்று வருவதால், எந்த நாடும் அதனைவிட்டு சிறிதேனும் தொடர்பின்றி வாழ முடியாது; எனினும், சில குறிப்பிட்ட தேசங் கள் அதிற் சேராமையால், நிர்வாகத் துறைகளிலும் முடிவுகளிலும் சில குறைகள் நேர்தல் இயல்பே. சர்வ தேச சங்கத்தில் பிரிட்டிஷ்

ஏகாதிபத்தியத்திற்குட்பட்ட கானடா, ஆஸ்திரேலியா, நியூஜீலந்து, தென்னப்பிரிக்கா, இந்தியா ஆகிய நாடுகள் தனித்தனி உரிமையுடன் உறுப்புக்களாய் விளங்குவதால், மேற்படி சங்கத்தில் பிரிட்டன் மிகுந்த செல்வாக்கும் வலிமையும் பெற்று விளங்குகின்றது. சர்வதேச சங்கத்திற் சேர்ந்துள்ள தேசங்களின் ஜனத் தொகை, உலக ஜனத் தொகையில் மூன்றில் ஒரு பாகமாகும். இச்சங்கம் இதுகாறும் செய்திருக்கும் காரியங்கள் இன்னவை எனச் சுருக்கமாகக் கூறுவோம் :

சர்வதேசசங்கம், தன் முதற் பெருநோக்கமாகிய போரொழிக்கும் விஷயத்தில் அல்லும் பகலும் கருத்துச் செலுத்தி முயன்று வருகின்றது ; ஐரோப்பாக் கண்டத்திலேயே ஐந்து அல்லது ஆறு சந்தர்ப்பங்களில் இத்தகைய முயற்சியால் நன்முடிவு கண்டிருக்கின்றது. ஸ்வீடன், பின்லந்து, ஆலந்து நாடுகளுக்கிடையில் பெரும்போர் நேரக் கூடிய நிலைமையை ஒழுங்கு படுத்தி அமைதி உண்டாக்கியதும், ஜெக்கோஸ்லாவியா, ஆல்பீனியா நாடுகள் ஒன்றற் கொன்று போர் புரிய முனைந்து நின்றகாலை சர்வ தேச சங்கத்தின் கட்டளையால் அவை சமாதானம் செய்துகொண்டதும், எல்லை உரிமைபற்றிக் கிரீஸ் பல்கேரியா மீது போர் தொடுக்க அறை கூவிய சமயத்தில் சங்கக் கட்டளைக்கு இணங்க அவை சமரசம் செய்து கொண்டதும் முக்கியமாய்க் குறிப்பிடத் தக்க உதாரணங்களாகும். இவ்விதம் எத்தனையோ சிக்கல்கள் சர்வ தேச சங்கத்தால் தீர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன.

அங்கம் வகிக்கும் நாடுகளுக்கிடையே நிகழும் வழக்குகளைத் தீர்த்துவைக்கச் சர்வதேச சங்கம், ஒரு பெரிய நீதிமன்றத்தை நிறுவியிருக்கிறது. இதற்குச் சர்வ தேச சங்க சாசுவத நீதி மன்றம் என்று பெயர். இதில் பதினைந்து நீதிபதிகள் இருக்கின்றார்கள். இவர்கள் எல்லாரும் உலகம் புகழும் உத்தமர். இதுகாறும் இந்த நீதி மன்றம், பதினேழு தீர்ப்புகளையும் பதினெட்டு யோசனைகளையும் அளித்துள்ளது.

எந்த வல்லரசும் தற்காப்புக்கு இன்றியமையாத போர்க் கருவிகளை மாத்திரம் வைத்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்து நாளுக்கு நாள் வலிமை அடைந்து வருகிறது. அளவுக்கு மீறிப் போர்க் கருவிகளை உற்பத்திசெய்து வைத்துக்கொள்வதே, கடும்போர் நிகழ்வதற்கு முக்கிய காரணம் என்பது அறிஞர் அபிப்பிராயமாகும். பல்லாயிர ஆண்டுகளாக ஊறிக் கிடக்கும் போருணர்ச்சியை

நினைத்த மாத்திரத்தில் போக்கிவிடுதல் முடியாக் காரியமே ஆகும்; எனினும், போர்க்கருவியொழிப்பு விஷயத்தில் சர்வ தேச சங்கம் விடாமுயற்சியுடன் உழைத்து வருகிறது. நிபுணர்கள் அதற்குரிய வழிகளை ஆராய்ந்து வருகிறார்கள்.

சர்வதேச சங்கம், போர் முறைகளைத் தடைசெய்து உலக அமைதிக்கு வழி காண முயற்சி செய்வதுடன் மக்களின் நல் வாழ்க்கைக்குரிய தொண்டையும் ஆற்றி வருகிறது; அஃதாவது, எந்த நாடும் தனிப்பட்ட நிலைமையில் நிர்வகித்துக்கொள்ள முடியாத பல விஷயங்களைச் சர்வ தேச சங்கம் முடிவு காண முயன்றிருக்கிறது. அபினி வியாபாரத் தடை, தொத்து நோய்த் தடை, மலேரியா, ராஜபிளவை போன்ற பயங்கர நோய்களின் தடை முதலிய காரியங்களில் சங்கம் தக்க கவனம் செலுத்தி வருவதே உதாரணமாகும்.

சங்கத்தில் அங்கம் வகிக்கும் தேசங்களில் ஏதேனும் ஒன்று பொருளாதார துறையில் தாழ்வு பெற்றால், அதற்குரிய உதவி செய்யவும் சர்வ தேச சங்கம் முனைந்து நிற்கிறது. சில ஆண்டுகட்கு முன் பணக் கஷ்டத்தால் தத்தளித்த ஆஸ்திரியா, ஹங்கேரி முதலிய தேசங்கள் இச்சங்கத்தின் உதவி பெற்று இப்பொழுது நன்னிலைமையில் இருப்பதே போதிய சான்றாகும்.

சர்வதேச சங்கம், தொழிலாளர் முன்னேற்றத்திலும் தீவிரமாய்க் கருத்தைச் செலுத்தி வருகிறது. இதற்கென அச்சங்கத்தில் ஒரு தனிப்பிரிவு உண்டு. சர்வ தேச சங்கத்திற் சேர்ந்துள்ள ஒவ்வொரு தேசமும், தொழிலாளர்களுக்குள் அமைதியில்லாவிட்டால் உலக அமைதி உண்டாகாதென்றறிந்து, அவர்களுக்கு வேண்டிய நலங்களைச் செய்து கொடுக்க ஒப்புக்கொண்டிருக்கின்றது. சம்பந்தப்பட்ட எல்லா நாடுகளாலும், சம்பளம் வேலை நேரம் முதலிய விஷயங்களிலும் பல சௌகரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இதுகாறும் செய்யப்பட்ட தீர்மானங்களையொட்டி, எட்டு மணி நேரம் வேலை செய்தல், வேலையின்மைக்குப் பரிகாரம் தேடுதல், பெண்கள் சிறுவர் பாதுகாப்பு, சுகாதாரம் முதலியவற்றைக் கவனித்தல் ஆகிய இவற்றிற்காக அவ்வந்நாடுகள் சட்டங்களை இயற்றியிருக்கின்றன.

சர்வ தேச சங்கத்தின் அமைப்பு

1. மஹா சபை :—இஃது ஒவ்வோர் ஆண்டிலும் அங்கத்தினரான பிரதிநிதிகள் வந்து கூடும் கூட்டம். ஒவ்வொரு நாட்டுக்கும் தனித்தனியே வாக்குரிமை உண்டு.

2. சபை:—இஃது ஓர் ஆண்டில் மூன்று முறை கூடும். இதில் கிரேட் பிரிட்டன், பிரான்ஸ், இத்தலி, ஜப்பான், ஜெர்மனி ஆகிய தேசங்கள் சாசுவத உறுப்புகளாயிருக்கின்றன. இன்னும் இதற்கு ஒன்பது தேசங்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

3. காரிய நிர்வாக சபை :—இதில் எல்லா நாட்டவரும் இருக்கின்றனர். காரியாலயம் உள்ள இடம் ஜினிவா நகரம்.

4. நிபுணர் சங்கங்கள் :—மகா சபைக்கும், சபைக்கும் எல்லா விஷயங்களிலும் ஆலோசனை கூறும் கூட்டம்.

5. சர்வ தேச சாசுவத நீதி மன்றம் :—இது ஹேக்கு நகரத்தில் இருக்கிறது. பதினைந்து பேர் நீதிபதிகள் இருக்கின்றனர்; எல்லாரும் பேரும் புகழும் பெற்றவர்.

6. உலகத் தொழிலாளர் பிரிவு:—இது சாதாரணமாய் ஒவ்வோர் ஆண்டிலும் கூடும். ஒவ்வொரு தேசத்திலிருந்தும் அரசாங்கப் பிரதிநிதிகள் இரண்டு பேர், முதலாளிகள் பிரதிநிதி ஒருவர், தொழிலாளர் பிரதிநிதி ஒருவர் வருவார்கள். இங்கு ஒவ்வொருவருக்கும் தனித்தனியே வாக்குரிமை உண்டு.

உண்மையான அமைதி உலகத்தில் நிலவவேண்டுமானால், சர்வ தேச சங்க நடவடிக்கைகளில் எல்லாரும் ஒத்துழைக்க வேண்டும். ஒவ்வோர் இடத்திலும் சர்வ தேச சங்கத்தின் கிளைகள் நிறுவப் பட்டுப் பொது ஜனங்களின் கருத்து, சங்கத்தின்பால் திருப்பப்பட வேண்டும்.

———

11. கிராமச் சீர்திருத்தம்

(திருஞானசம்பந்தம் அவர்கள், தமிழ்ப் புலவர்,
பச்சையப்பன் உயர் கலாசாலை, சென்னை)

நமது இந்திய தேசம், பண்டைக் கால முதற்கொண்டே, மற்றத் தேசங்களைக்காட்டிலும், எல்லாத் துறைகளிலும் உயர்ந்ததாகும். உயர்ந்தது என்று கூறுதற்குக் காரணம், நமது தேச மக்கள் பழங்கால முதற்கொண்டு கல்வி, கைத்தொழில், விவசாயம், நாகரிகம் முதலியவற்றை வளர்த்து வந்ததேயாகும். இஃதன்றிக் கிராமப் பஞ்சாயத்துக்கள் மூலம், ஒவ்வொரு கிராமத்தில் உள்ளவரும் தத்தம் கிராம வேலைகளைச் செவ்வனே கவனித்து ஆற்றி வந்ததே முக்கிய காரணமாகும்.

ஒரு தேயமோ, நாடோ, சிறப்பும் செழிப்பும் அடைந்திருக்கின்றதா என்று அறியப் புகின், முதன்முதலில் அத்தேயத்திலுள்ள கிராமங்களிற் சென்று பார்த்து அறிய வேண்டும. எந்தத் தேசத்தில் கிராமங்கள் நன்னிலை பெறுது சீரற்றிருக்கின்றனவோ, அத்தேயத்தைப் பிற்போக்குள்ளதென்றே கூறலாம். நமது இந்திய தேசமானது பண்டைக்கால நிலைமையைக்காட்டிலும் இப்போது சில துறைகளில் நலமுற்று வருவதாகக் காணப்படினும், இன்னும் பல துறைகளில் சீர்திருத்தம் பெறவேண்டியிருக்கிறது. இன்றியமையாது திருந்தவேண்டியவை கிராமங்களே என்பதில் ஐயமில்லை. மக்களிற் பலர், தத்தம் கிராமங்களை விட்டுவிட்டு, பெரிய நகரங்களுக்கு வந்து வாழ்க்கை நடத்துகின்றனர். இம்முறை மிகவும் தவறுகும்.

உலகிற் பிறந்துள்ள ஒவ்வொரு மனிதனும் நல்ல காற்றுடனும், சுகாதாரத்துடனும், நிட சரீரத்துடனும், வாழ்வதற்குரிய இடம் கிராமங்களே யாகும். கல்வி, கைத்தொழில், சுகாதாரம், வேளாண்மை முதலியவற்றில் உழைத்து, தத்தம் கிராமங்களைச் சீர்திருத்தம் செய்து வாழ முடியாத சோம்பரே நகர வாழ்க்கையை விரும்புபவராவர்.

நமது நாடானது, பல மாகாணங்களையும், பல ஜில்லாக்களையும், பல தாலூகாக்களையும், சில பெரிய நகரங்களையும், பல முனிசிபல் நகரங்களையும் சுமார் 8 அல்லது 9 லட்சம் கிராமங்களையும் உடையது. இவைகளிற் பெரிய நகரங்களும், சிறிய நகரங்களும் சிற்சில துறைகளில் முன்னேற்றமடைந்தனவாக இருக்கலாம். அது வெளித் தோற்றமேயாகும். ஜன நாயக ஆட்சியில் நகர நாட்டாண்மைக் கழகங்கள் வந்தும் கல்வியிலும், கைத்தொழிலிலும், சுகாதாரத்திலும் பிற்போக்குடையனவாகவே இவைகள் இருக்கின்றன. இவைகளை இவ்வாறிருந்தால், நமது நாட்டிலுள்ள பல இலட்சக் கணக்கான கிராமங்களைப் பற்றி அதிகம் கூற வேண்டுவதில்லை.

நம் தேச மக்கள், கிராம வேலைகளில் ஈடுபடாது இருப்பதனாலேயே, 100-க்கு 94 பேர் கல்வியில்லாமலும், 36 கோடி மக்களில் 15 கோடி மக்கள் ஒரு வேளையுணவிற்கும் வழியில்லாமலும், உடுத்திய துகிற்கு மாற்றுடை யில்லாமலும் இருக்கின்றார்கள். பிற்போக்கான நிலைமையிலிருந்த ஜப்பான் முதலிய தேசங்கள் வெகு விரைவாக முன்னேறி வருவதற்குக் காரணமென்ன? அந்நாட்டு மக்கள் கிராம வேலைகளில் ஈடுபட்டு உழைத்தலேயாகும். நம்து

நாட்டிலுள்ள படித்தவரும், பணக்காரரும், சீர்திருத்தக்காரரும் கிராம வேலைகளில் முன் வந்து உழைத்தல் வேண்டும்.

நம் தேச மக்கள் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாகச் செய்து வரும் தொழில்கள் விவசாயமும் நெசவுமேயாகும். இவ்விரண்டு தொழில்களும் எவ்வளவு தூரம் வளர்ந்து வந்திருக்கின்றன என்று பார்த்தால், இவை இருந்தவிடத்திலிருந்து ஓரணுவும் அசைய வில்லை என்பது தெரியும்; பழமையான கருவிகளே இப்போதும் உபயோகப்படுத்தப்படுகின்றன. அவையாவன, உழு கலப்பை, பரம்பு அடிக்கும் பலகை, எருதுகள் முதலியனவாம். அக்கருவிகள் என்றும் ஒரு தன்மையனவாக இருக்கின்றனவேயன்றி ஒரு சிறிதும் மாறுபடவேயில்லை. அமெரிக்கா, ஜப்பான், ருஷியா முதலிய தேசங்களில், ஒவ்வொரு கிராமத்திலும் புதிய முறையில் கண்டுபிடிக்கப் பட்ட யந்திரக் கருவிகளால் நிலங்களை உழுது பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. அதனால் அதிகச் செலவும் கஷ்டமும் இல்லாமல் விரைவில் பயிரிடப்படுவதோடு, வருட முழுதும் நிலங்கள் பலன் தருகின்றன. மேலும், அந்த அந்த நிலங்களின் வளனுக்கேற்ப, மண் ணைப் பரிசோதித்து உரங்கள் போட்டுப் பயிரிடப்படுவதனால் மாவொன்றிற்குச் சாதாரணமாய்க் கிடைக்கும் தானிய அளவினைக் காட்டிலும் இரு மடங்கு பலன் கிடைக்கின்றதாம். இம்முறையில் நம் கிராமங்களில் உள்ள மக்கள், தங்கள் நிலங்களை உழுது பயிரிடக் கூடுமானால், நமது நாடு மிக்க மேன்மையடைந்துவிடும் என்பதில் ஐயமில்லை. இம்முறையைக் கிராம வாசிகள் தெரிந்து செய்யாம லிருப்பதற்குக் காரணம், அவர்களிடைப் போதிய கல்வியும், செல்வ மும், ஊக்கமுமில்லாமையேயாகும். இம்முறையைக் கைக்கொண்டு நம் தேயமக்கள் உழைத்தால், கிராமங்கள் சீர்திருந்துவதோடு, நகரங் களும் மேன்மையுறும்.

கிராமங்களில் விவசாயம், கல்வி, சுகாதாரம், நாகரிகம் இவை பரவ வேண்டுமானால், ஒவ்வொரு கிராமத்திலும் ஐக்கிய நாணயச் சங்கங்களை நிறுவ வேண்டும். மற்றத் தேசங்களிலுள்ள கிராமங் கள் வளனுற்றுச் சீர்பட்டதற்குக் காரணம், ஐக்கிய நாணயச் சங்கங் களை நிறுவிக் கிராம ஜனங்களுக்கு எவ்வெத்துறைகளில் உதவி செய்யக் கூடுமோ, அந்த அந்த வழிகளில் உதவி வந்ததேயாகும். நம் நாட்டிலுள்ள படித்தவரும், தேச நலத்திற்குப் பாடுபடும் தொண் டரும் கிராமங்கட்குச் சென்று வேலை செய்வாராயின், மிக

விரைவில் நம் தாய்நாடு பொன்னுடாகும். அவர்கள் ஐக்கிய நாணயச் சங்கங்களின் மூலம், கிராம ஜனங்களுக்கு வேண்டிய பணம், நிலங் களுக்குப் போடவேண்டிய உரம் முதலியவற்றைக் கொடுத்து உதவி புரிதல் வேண்டும்; கிராமங்களைச் சுத்தமாய் வைத்துக்கொள்ளவும், வைசூரி, காலரா, பிளேக்கு, விஷசுரம் முதலியவை பரவாமலிருக்கவும் தொண்டாற்ற வேண்டும். ஐக்கிய நாணயச் சங்கங்களினுல் கிராம வாசிகள், வேளாண்மைத் தொழிலன்றி, நெசவு, தச்சு வேலை முதலி யவைகளையும் கற்றுக்கொள்ளுமாறு செய்ய வேண்டும்.

குடிசைத் தொழில்கள் கிராமங்களில் பரவினுல், நாட்டிற் பல பொருள்கள் நயமாகக் கிடைக்கக் கூடும். குடிசைத் தொழில்கள் ஆடவர்கட்கு எத்துணை இன்றியமையாதவையோ, அத்துணை பெண் டிர்கட்கும் இன்றியமையாதனவாகும். நம் நாட்டில் ஆண்கள் கொண் டிருக்கும் உரிமை போன்று பெண் மக்கட்கும் தொழிலிலும் கல்வி யிலும் உரிமை கொடுப்பது மேன்மையைத் தருவதாகும். நம் மக்கள் பண்டைப் பெருமையைப் பேசிக் காலங் கழிப்பதையே வேலை யாகக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு, இக்காலத்திற்கேற்ப, யாது செய்தல் வேண்டுமென்பதை ஒரு சிறிதும் ஆராய்வதில்லை. மற்றும், கிராமங்களிற் செய்யும் வேலைகளில் மிகவும் முக்கியமானது, ஒவ் வொரு கிராமத்திலும் வயது வந்தவர்கட்காக இராப்பள்ளியும், புத்தக நிலையமும், வாசக சாலையும் நிறுவுவதோடு, ஒளிப்படங்களின் மூலம் கைத்தொழில், விவசாயம், சுகாதாரம், மது விலக்கு முதலியவைகளை யும் விளக்கிக் காட்ட வேண்டுமென்பதே.

நமது தேசத்தில், மது முதலிய லாகிரி வஸ்துக்களை உபயோகப் படுத்தி, அநேக ஏழை மக்களும் செல்வரும் வறுமையாளராகித் துன்பத்திற்கு ஆளாகிறார்கள். நாம் இத்தீய பழக்கத்தை நம் நாட்டை விட்டு அகற்றுவதற்கு வேலை செய்தல் வேண்டும். அமெரிக்கா முதலிய தேசங்களில் குடியினுல் மக்கள் கெடுவதையறிந்து வெகு வாக நீக்கிக்கொண்டு முன்னேறி வருகிறார்கள். எவ்வளவு தூரம் குடிப்பழக்கம் நகரவாசிகளிடையும் கிராமவாசிகளிடையும் நீங்குகின் றதோ, அவ்வளவு தூரம் நம் மக்கள் முன்னேற்றமடைவதாகக் கருதப்படும்.

நம் கிராமங்களில் பண்டைக்காலத்தில் பஞ்சாயத்துகள் மூலம் எல்லாக் காரியங்களையும் கவனித்து நடத்தி வந்தார்கள். பஞ்சாயத்

தின் வழியாகக் கிராமங்களில் உண்டாகும் சண்டை சச்சரவுகள், நிலத் தகராறுகள், கொடுக்கல் வாங்கல் முதலிய வழக்குகள் ஒரு செலவுமின்றித் தீர்த்துவைக்கப்பட்டன. பஞ்சாயத்துகளே கல்வி, சுகாதாரம், கைத்தொழில் முதலியவற்றையும் கவனித்து வந்தன. இதற்கு அறிகுறியாக இப்போதும் அநேக கிராமங்களில் ஊர்க் கூட்டம் கூடுவதற்காகப் பொதுக் கட்டடங்கள் இருப்பதைக் கண் கூடாகக் காணலாம்.

ஆகையால், நம் கிராமங்களில் உள்ள மக்கள் நன்னிலை பெற வேண்டுமாயின், அவர்கள் ஐக்கிய நாணயச் சங்கங்களின் மூலமாயும், பஞ்சாயத்துகள் மூலமாயும் கல்வி, கைத்தொழில், விவசாயம், சுகாதாரம், குடிசைத் தொழில் முதலியவற்றில் தேர்ச்சியுற்றே தீர வேண்டும்.

பொதுவாக, மாணவர்கள் உத்தியோகத்திற்கென்று கல்வி பயிலாது, தங்கள் கிராமங்களிற் செய்ய வேண்டிய சீர்திருத்த வேலை களுக்காகக் கல்வி பெறுதல் வேண்டும்; கற்ற பின்னர், கிராமங் களுக்குச் சென்று, மேற்கூறியவாறு பல துறைகளிலும் உழைக்க வேண்டும். இளைஞர்களின் ஒத்துழைப்பு இன்றேல், இந்நாட்டுக் கிரா மங்கள் சீர்படாவென உறுதியாய்க் கூறலாம்.

---

12. இராம்மோஹனரும் சீர்திருத்தங்களும்

(தி. கி. கோபாலையர் அவர்கள், தமிழாசிரியர்,
கிறித்தவ கல்லூரி, சென்னை)

இராம் மோஹனர் பிறந்தபொழுது அஞ்ஞான இருள் இந்தியா வின்மேல் பரவிக்கொண்டிருந்தது. அவர் பிறப்பதற்குச் சில நூற் றாண்டுகளுக்கு முன்னதாக அதிநிபுணர் எவரும் அவதரிக்கவேயில்லை. சம்ஸ்கிருத பாஷா பாரங்கதர் தோன்றி மறைந்து அநேக வருஷங்க ளாயின. அந்த அந்த நாட்டுத் தாய்மொழிகளிலும் சிறந்த பெரியார் எவரும் தோன்றவேயில்லை.

இங்கிலையில் இருந்த தேசத்தில் இராம்மோஹனர் பிறந்தார். அவர் அடைந்த மேன்மைக்குச் சாதனங்கள் அவர் காலத்து எவையுமில்லை. அவருக்குப் பின் வந்தவர், அவருடைய முயற்சி யின் பயனுய்ப் பெற்ற கல்வி சம்பந்தமான சௌகரியங்களை, அவர்

ஒரு சிறிதும் அடைந்திருக்கவில்லை. அரசியல், ஜன சமூக நன்மை, கல்வி ஆகிய இவைகளில் முன்னேற்றம் அடைவதற் கேற்ற அறிகுறி ஒன்றுமேயில்லை. இராம்மோஹனர் அடைந்த பெருமைக்குக் காரணம், எல்லா விதத்தாலும் இருளடைந்திருந்த இந்தியாவைச் சீரும் சிறப்பும் பெற்று ஒளிரும் இந்தியாவாகச் செய்வதற்குத் தமக்கு முற்றிலும் விரோதமான சம்பவங்களிடையே சிறிதும் மனச்சோர்வின்றி உழைத்துத் தாம் நினைத்தபடி முடித்த தேயாகும். இளமைப் பருவத்திலேயே, தாம் தேசத்திற் குச் செய்ய வேண்டிய காரியம் இன்னதென்றுணர்ந்து, அதற் குத் தக்கவாறு அவர் தம் வாழ்நாளைப் பண்படுத்திக்கொண்டார்; பதினாறு வயது நிரம்புவதற்கு முன்னமேயே, தம் நாட்டு மத நிலையின் சீர்கேட்டை யுணர்ந்து அக்காலத்து வழங்கி வந்த விக்கிரக ஆராதனையைக் கண்டித்து எழுதலானார். அதனால் வீட்டை விட்டு வெளியேற நேரிட்டது. அவர் அதையும் பொருட்படுத்தவில்லை. நான்கு வருஷ காலம் சுற்றித் திரிந்து, இந்தியாவின் உண்மை நிலையை அனுப வத்திற் கண்டறிந்து, காசியில் தங்கிச் சம்ஸ்கிருத பாஷா ஞானம் பரி பூரணமாய் வரப்பெற்று, ஆங்கிலமும் பயின்று, கம்பெனி உத்தி யோகத்திலமர்ந்து, மிகுந்த திரவியத்தைச் சம்பாதித்துக் கல்கத் தாவில் வந்து 1814ல் தங்கலாயினர். அப்பொழுது இந்தியா முழுமையும் பெருந்தூக்கத்திலிருந்தது. 1830ல் அவர் இந்தி யாவை விட்டு இங்கிலாந்துக்குப் புறப்பட்டபொழுது இராஜீய, ஜனசமூக, மதசம்பந்தமான விஷயங்களில் புத்துயிர் பெற்று, அந்நாள் முதல் இதுகாறும் வளர்ந்து வந்திருக்கின்ற தன்மையை அடையக் கூடிய அடையாளங்களைக் காட்டி நின்றது. இராம்மோஹனர் இந்தப் பதினாறு வருஷ காலத்திற்குள், ஒரு தேசத்தாரின் நல் வாழ்க்கைக்கு இன்றியமையா இயக்கங்களாகிய பயிருக்கு விதையை விதைத்து விட்டார். இவர் கண்ட இயக்கங்களாகிய ஊற்றுக்களினின்றே தேசிய வாழ்க்கையாகிய ஆறுகள் கிளம்பி வெகு வேகமாய்த் தேசம் முழுவதும் பாய்ந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தியா, புத்துயிரும் புது வாழ்க்கையும்பெற்று எழுந்த தற்கு நமது இராஜாராம்மோஹனராய் எவ்வளவு தூரம் உதவி புரிந்தனர் என்பதைக் கவனிப்போம்:

தேசியக் கிளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் முக்கிய காரணம் ஆங்கிலக் கல்விப் பயிற்சியே. இந்தியா மேன்மேலும் உயர்ந்து

இக்காலத்தில் நாகரிகம் பெற்ற ஜாதியாரையொப்ப எண்ணப்பட வேண்டுமானால், மேனாட்டார்போல விஞ்ஞான சாஸ்திரீயக் கல்வியைப் பெறவேண்டுவது அவசியமெனப் பின் வரப்போவதை முன்னரே தமது திரிகால உணர்ச்சியால் அவர் தெரிந்துகொண்டார்; தாம் கல்கத்தாவில் நிரந்தரமாய்த் தங்கியவுடன் ஆங்கிலக் கல்வியைத் தம் நாட்டினருக்குக் கற்பிக்க முயற்சி செய்யலானார். அம்முயற்சிக்குப் பல இடையூறுகள் நேர்ந்தன. இந்துக்களிற் பலர் அதனை அலட்சியஞ் செய்தனர். பிரமுகர்களிற் சிலரும், உயர்ந்த இந்திய உத்தியோகஸ்தருமாகிய மேனாட்டினரும் அம்முயற்சிக்கு விரோதமாய் நின்றனர். அக்காலத்தில் ஆங்கில மொழியைக் கற்பிக்கும் பள்ளிக்கூடங்கள் என்று சொல்லக்கூடியவை இந்தியாவில் எந்த விடத்திலும் இல்லையெனலாம்.

ஆங்கிலக் கல்வியைப் பரப்ப சென்ற ஒரு நூற்றாண்டாக முயன்று வரும் பாதிரிகள், அரசாங்கத்தார், அவர் ஆதரவு பெற்ற ஏனையோர் ஆகிய முப்பகுதியினரும் உழைப்பதற்கு ஆதி காரணராயிருந்தவர் நம் இராம்மோஹனரே. ஆங்கிலக் கல்வியைப் போதிக்கும்பொருட்டு ஏற்படுத்தப்பட்ட முதல் கல்லூரி 1819ல் ஸ்தாபிக்கப்பட்ட 'கல்கத்தா ஹிந்து கல்லூரியே' (Hindu College) யாகும். இராம்மோஹனரும், டேவிட் ஹேர் என்ற ஆங்கில அறிஞருமே இக்கல்லூரியின் ஸ்தாபன கர்த்தர்கள்.

மோஹனர் இந்தியர்களின் கல்வி யபிவிருத்திக்காகப் பாடு படும் படி பாதிரிமார்களைத் தூண்டி நல்ல போதகர்களை யனுப்பும்படி செய்தனர். அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் உள்ள சிறந்த பாதிரிகளுடன் பழக நேரும்போது ஒவ்வொரு சபைக்கும் சிறந்த போதகர்களை யனுப்பும்படி வற்புறுத்தி வந்தனர். கல்கத்தாவிலிருந்த ஸ்காட்லந்து தேசத்து மத போதகரான ரேவரெண்டு ஜேம்ஸ் பிரைஸ் (Rev. James Bryce) என்பவரைப் பன்முறை வேண்ட, அவர் ஸ்காட்லந்துக்கு எழுதி இந்தியர்களுக்குக் கல்வியும் அறிவும் வளரச் செய்விக்கும் வல்லமை பெற்ற பாதிரிமாரை அனுப்பச் செய்தனர். அதன் பயனாக அலெக்ஸாந்தர் டப் (Alexandar Duff) என்ற போதகர், ஸ்காட்லந்து தேச மதச் சபையாரால் 1830ல் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டனர்.

1830ஆம் ஜூலைமீ 13உ பள்ளிக்கூடம் நிறுவப்பட்டது. ஐந்து மாணவர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட அந்தச் சிறிய

கிறிஸ்தவப் பள்ளிக்கூடமே, இந்தியாவில் கல்வியறிவைப் பரப்பி அரிய பேருபகாரத்தைச் செய்து வரும் கிறிஸ்தவப் பள்ளிக்கூடங்களில் முதன்முதல் ஸ்தாபிக்கப்பட்டதாகும்.

இவ்வாறு பாதிரிகளை யூக்கியதுடன் அமையாது தமது சொந்தச் செலவில் ஒரு கல்விச்சாலையை அவர் நிறுவினர். அதில் ஹிந்து மாணவருக்கு ஆங்கிலக் கல்வியை இலவசமாகக் கற்பிக்கச் செய்தனர். அதற்கு 'ஆங்கில ஹிந்து கல்விச்சாலை' எனப் பெயரிட்டனர். மாதம் ஒன்றுக்கு நூற்றைம்பது ரூபாவில் ஒருவரும், எழுபது ரூபாவில் ஒருவருமாக இரண்டு ஆசிரியர் நியமிக்கப்பட்டனர். பெருஞ்செல்வமில்லாதிருந்தும், இராம்மோஹனரே செலவு முழுவதையும் ஏற்றனர். பல வருஷங்கள் வரையில் அக்கலாசாலை நடைபெற்று மிகுந்த நன்மையை யளித்தது. மஹரிஷி தேவேந்திரநாத தாகூர் ஆதியில் படித்தது அந்தப் பள்ளிக்கூடத்திலேதான். அப்பள்ளிக்கூடத்தின் தனிச்சிறப்பு யாதெனில், மதக் கல்வியும், நீதி போதமும், உலகக் கல்வியும் கற்பிக்கப்பட்டதேயாம். அதிலும் உலகக் கல்வி மிகுந்த சிரத்தையுடன் கற்பிக்கப்பட்டு வந்தது.

கல்வி விஷயமாய் இராம்மோஹனர் செய்த மற்றொரு நன்மையாவது, வங்க பாஷையில் வசன நூல்கள் வெளிவரச் செய்ததேயாம். முதன்முதல் வங்க பாஷையில்மட்டும் வெளி வந்த போதிலும் தேசம் முழுவதிலும் பரவி வழக்கில் உள்ள ஒவ்வொரு பாஷையிலும் வசன நூல்கள் வெளிவருவதற்கு வழி காட்டியாக இருந்தது இவரது முயற்சியே. ஒரு தேசத்தாருடைய நுண்ணறிவின் வளர்ச்சி அவர்கள் தாய்ப்பாஷையின் அபிவிருத்தியைப் பொறுத்தேயிருக்கிறது. சென்ற நூறு வருஷங்களாகத் தேசத்தில் வழங்கும் தாய் மொழிகள் அதிக அபிவிருத்தியையடைந்திருக்கின்றன. வங்காளம் சம்பந்தப்பட்ட வரையில் மற்றையவற்றிற் போலவே மொழி வளர்ச்சியிலும் இராம்மோஹனர் வழி காட்டியாய் விளங்கினர். எளிய இனிய வசன நடையில் அரிய சிறந்த கருத்துக்களையமைத்து மக்களின் அறிவு விருத்திக்குத் தக்க கருவியாக அதனைச் செய்த முதற் பெரியார் நம் இராம்மோஹனரே. வடமொழி வேதத்தை வங்க பாஷையில் வசன நடையில் மொழி பெயர்த்தார். வசன நடையிலேயே மதவாதங்களும் புரிந்தார். நீதி விஷயமாயும் ஜனசார சீர்திருத்த விஷயமாயும் கட்டுரைகளை யெழுதியதும் அந்த எளிய இனிய அழகிய வசன நடையிலேதான். மேலும், இலக்கணம், க்ஷேத்திர கணிதம், பூகோளம்

மூதலியவைகளைப்பற்றி உபயோகமுள்ள பல நூல்களைப் பாட புத்தக மாக வசன நடையில் எழுதியுதவினர். இக்கால நாகரிகத்தின் பகுதி யாகவும், மிக்க பலமுள்ளதாகவும் அறிஞர் கருதும் மாதாந்த, வாராந்த, தினசரிப் பத்திரிகைகளை வங்க பாஷையில் முதன்முதல் வெளியிட்ட வர் இப்பெரியாரே. 1819-ஆம் வருஷத்திலேயே 'சம்வத் கௌரி' என்ற பத்திரிகையைப் பிரசுரித்தார். வங்க மாகாணத்தில், ஜனங் களின் மனோபாவத்திலும் வாழ்க்கையிலும் ஏற்பட்ட அதிவிரைவான மாறுபாட்டுக்குக் காரணம் இப்பத்திரிகையே. இவ்வாறுகத் தொகுதி யிலும் வன்மையிலும் மேன்மேலும் வளர்ந்துகொண்டிருக்கும் புதிய வங்க மொழி இலக்கியமானது எழுந்தது.

வங்க மாகாணத்தில் வடமொழிக் கல்வியின் புனருத்தா ரணத்தின் பொருட்டும், வளர்ச்சியின் பொருட்டும் அவர் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றல் அரிது. அவர் காலத்தில் வடமொழி கற்போர் அருகிவிட்டனர் படிப்பவரும் இலக்கியத்தை யும், ஸ்மிருதியையும் மொந்தையுருப்போடுவதே சிறப்பென மதித் தனர். வேதங்களும், உபநிஷத்துக்களும், வேதாந்த நூல்களும் அநேகமாய் மறைந்தே போயின. விஞ்ஞான சாஸ்திரீயக் கல்வியை அவர் எவ்வளவு சிறப்பாய்க் கருதினரோ, அதனிலும் சிரிதாய் ஆரிய க் கல்வியையும் கருதி அதன் புனருத்தாரணத்திலும் அபிவிருத்தி யிலும் மிகுந்த சிரத்தை காட்டினர். 1826-ஆம் வருஷத்தில் வேதாந் தக் கல்லூரியொன்று ஸ்தாபித்தார். அதற்கென ஒரு வீடு கட்டி ஒவ்வொரு மாதமும் கணக்கற்ற தொகையைச் செலவு செய்து வளர்த்தார்.

ஹிந்துமத சாஸ்திரங்களின் நிகரற்ற பெருமையை மக்களெல் லோரும் உணரும் பொருட்டு ஆதிகாலத்திலெழுந்த சிறந்த நூல்களை, வங்கம், ஆங்கிலம், ஹிந்தி முதலிய பாஷைகளில் மொழி பெயர்த்து வெளியிட்டனர். அவர் விரும்பிய வண்ணமே ஏனையோரும் இவ்வழி யிற் பல நூல்களை வெளியிடலாயினர். அதனால், பழைய ஹிந்து மத சாஸ்திரப் படிப்பில் சிறந்த ஆர்வம் எல்லார் மனத்திலும் உதிக்க லாயிற்று.

இவ்வாறு தம் உடல் பொருள் ஆவியனைத்தையும் தம் தேசத் தாரின் கல்வி அபிவிருத்திக்காக உரிமையாக்கிய பெரியார் ஜன சமூகச் சீர்திருத்த சம்பந்தமாய் என்ன நன்மைகள் புரிந்தனரென் பதை இனிக் கவனிப்போம்:

உடன்கட்டையேறும் சதி என்னுங் கொடிய வழக்கம் ஒழிய இராம்மோஹனர் அரும்பாடு பட்டார். அதன் பயனாக, 1829 ஹூலை டிசம்பர்மீ 4வ லார்டு வில்லியம் பேண்டிங்கு ஓர் சட்டம் இயற்றினார். அச்சட்டத்தில் 'சதியென்பது நியாய விரோதமானது ; ஆதலால், அவ்வழக்கத்தைக் கைக்கொண்டவர் கிரிமினல் குற்றங்களைச் செய்தவர் அடையும் தண்டனையை அடைவார்கள். விதவைக்கு விருப்பமிருப்பினும், இல்லாமற் போயினும், அவள் தானே வேண்டினாலும், அல்லது கட்டாயப்படுத்தப்பட்டாலும், அவளை எரிப்பதற்கு உதவி செய்தவர் கொலை செய்தவரேயாவர். அப்படிப்பட்டவருக்கு நியாயாதிபதிகள் இஷ்டப்படி மரண தண்டனை விதிக்கலாம்,' என்று எழுதப்பெற்றிருந்தது. இதனால், 'உடன்கட்டையேறல்' என்ற பழக்கம் ஒருவாறு ஒழிக்கப்பட்டது.

தொன்று தொட்டு வழக்கிலிருந்த 'சதி'யென்ற கொடிய பழக்கத்தை யொழித்தது போலவே, சாஸ்திரங்களின் உட்கருத்தை நன்கு உணராது அறிவின்மையாற் பின்பற்றி வந்த பல வழக்கங்களையும் இராம்மோஹனர் போக்கலானார். எடுத்த காரியத்தைக் குறைவின்றி முடிப்பதற்கு அவர் கையாண்ட முறைகள் மூன்று : முதலாவதாகச் சாஸ்திரங்களிலிருந்து கிடைக்கக்கூடிய எல்லா உதவியையும் அவர் உபயோகப்படுத்திக்கொண்டார். இரண்டாவதாக, பகுத்தறிவுக்கும், மனச்சாட்சிக்கும் ஏற்ற காரணங்களைக் காட்டி மானிட வர்க்கத்தின் நன்மையைக் கருதும் அவசியத்தையும் நீதி மார்க்கத்தைக் கடைப்பிடித்தலின் முக்கியத்தையும் அவர் வற்புறுத்தினார். மூன்றாவதாக, அத்தியாவசியம் நேர்ந்த சமயங்களிலெல்லாம் அரசாங்கத்தாருடைய உதவியையும் அவர் ஏற்றுக்கொண்டார்.

சொல்லுதல் எவர்க்கும் எளிது ; சொல்லிய வண்ணஞ் செய்தல் சிலருக்கும் அரிது. தம் வாழ்நாளில், சொல்லளவிலன்றிச் செய்கையளவிலே தெரிவிக்கும் பெரியோர் வரிசையில் முதல்வராய் விளங்கிய மோஹனராய், கப்பலில் அயல் தேசங்களுக்குப் போதல் தகாது என்ற கட்டுப்பாட்டுக்கு அடங்காமல், தைரியமாய்க் கடல் கடந்த முதல் ஹிந்து ஆவர்.

அன்றியும், இக்காலத்தில் தேசாபிமானிகள் பலரும் மிக அவசியமெனக் கருதிவரும் விதவா புனர் விவாகத்தை அவர் ஆதரித்த தோடமையாது, நாதனற்ற ஏழை விதவைகளுக்கு உதவி செய்யும் பொருட்டு ஒரு நிதி யேற்படுத்தவும் முயன்றார்.

பெண் கல்வியின் அவசியத்தைப் பற்றியும், அவர்களின் அறிவு நிறை முதலியவற்றைப் பற்றியும், ஆண் பிள்ளைகளைப்போல நடத்தப்பட்டால் எவ்விஷயத்திலும் அவர்களைவிடப் பெண்மக்கள் குறைந்தவர்களாகார்கள் என்பதைப் பற்றியும் அவர் விரிவாகக் கூறியிருக்கிறார்.

'கடவுள் சந்நிதானத்தில், அவரால் படைக்கப்பட்ட மானிடர் அனைவரும் சமமானவரே; பிறப்பினால் உயர்வு தாழ்வு கருதுவது தகாது; அவரவர் செய்கையினாலும் அறிவினாலுமே மக்களை மதித்தல் வேண்டும்; பிரமத்தை யுணர்ந்தவனே பிராமணன்,' என்ற கொள்கையினையுடையவர் இராம்மோஹனர்.

இதுவரையும் கூறி வந்தவற்றால் இராம்மோஹனர், ஜன சமூகத்தின் முன்னேற்றத்திற்குத் தடையாயும் அதன் பெருமைக்குக் குறைவாயும் இருந்த தீமைகள் பலவற்றை ஒழிக்கக் கங்கணங் கட்டியவர் என்பது நன்கு விளங்கும். நியாயத்தை உணர்ந்தவரும், மானிட வர்க்கத்திற்குக் காட்ட வேண்டிய அன்புள்ளவருமான சீர்திருத்தக்காரர் ஒவ்வொருவரிடமும் இருக்க வேண்டிய ஆர்வமும், வினை செயல் வகையும், வினைத் திட்பமும் பொருந்தியிருந்தமையால், இக்கால இந்தியாவில் சீர்திருத்தம் செய்ய முயன்றவர் எவரினும் மிக்க வெற்றி பெற்றவரும் முதன்மையானவருமாக விளங்கினர் நம் இராம்மோஹனர்.

13. கலிங்கப் போர்

(திரு. தி. செல்வகேசவராய முதலியார் அவர்கள், M. A.)

ஒரு முறை காவிரியாற்றங்கரையிலே வேட்டையாடியிருந்த முதலாம் குலோத்துங்கன் பாலாற்றங்கரையிலே பரி வேட்டையாடச் சென்றான்; சென்று, கச்சித் திருப்பதியின் தென் குடதிசையிலே செய்த சித்திர மண்டபத்தின் நித்திலப் பந்தரில் அனேவருஞ் சூழத் திருவோலக்கங் கொண்டிருந்தான். அவ்வமயம் பற்பல சிற்றரசர் வந்து அடிபணிந்து திறைப்பொருளே அவ்வரசன் திருமுன்னர் வைத்துக் கை குவித்து நின்றனர்.

அப்போது அரசன், "இவர்களெழிய இன்னுந் திறை கொடாதவர் உளரோ?" என வினவினன். உடனே கடகர் முன் வந்து நின்று, 'எங்கள் திறை கொணர்ந்தனம்,' என்று கூறிக் கழல் வணங்கினர். 'வடகலிங்கத்தரசன் இரண்டு முறையாகத் திறை கொணர்கிலன்,' என்றவளவிலே, அரசன் வெகுண்டு, "அங்ஙனமாயின், வடகலிங்கஞ் சென்று அவன் ஆனைகளைக் கொண்டணைமின்; அவனையுங் கொணர்மின்," எனக் கூறினன். கூறலும், மந்திரத் தலைவன் கருணாகரத் தொண்டைமான், "அடியேனுக்கு விடை கொடுக்க; அங்ஙனே கொணர்ந்து தருவேன்," என, அரசனும் நன்றென நவின்றனன்.

உடனே கருணாகரன் வாரணமிவர்ந்தனன். நாற்படையுஞ் சூழ்ந்து நெருங்கி வழிக்கொண்டன; நாற்றிசையும் அதிர்ந்தன; எழுகடல்களும் அடங்கின; மலைகள் பிதிர்ந்தன; தூளிப்படலம் பிறந்தது; பாலாறு, குரைத்தலை, சுவர்ணமுகரி, கொல்லி என்னும் நாலாறுங் கடந்து பெண்ணையாற்றையும் தாண்டின; அப்பால் வையாறும் மண்ணுறுங் குன்றியுங் கடந்து, கிருட்டிணையும் பிற்படப் போயின; போய், கோதாவரி, பம்பாநதி, கோதமை நதி முதலிய நதிகளும் இப்பாலாக அப்பாற்சென்றன; சென்று, கலிங்கத்தைச்சேர்ந்து சில பதிகளிற் படரெரி கொளுவி, சில பதிகளைச் சூறை கொண்டன.

குடிகளெல்லாம், "மதில்கள் இடிகின்றனவே! வீடுகள் எரிகின்றனவே! புகைத்திரள்கள் எழுகின்றனவே! ஐயோ! அரண் எங்கே? நமக்குப் புகலிடமெங்கே? இங்கே தலைவன் யாரே? அதோ படைகள் வருகின்றன வருகின்றனவே! நாம் மடிகின்றனம் கெடுகின்றனமே!" என்றிரங்கியேங்கி, அலந்து துடித்தனர்; துடித்து, "அந்தோ! நம்மரசன், அபய குலோத்துங்க மகாராசனுக்குக் கொடுக்கத் தகுவதான திறை கொடாமல் உரை தப்பினன். எத்தனை சொல்

லினும், செவியில் ஏற்றுக்கொண்டிலன். அபயன் விடுபடை வந்து விட்டதே! இனி என் செய்கேம்! ஐயோ!'' என்று அலறி, உரைகுழறி உடல் பதறி ஒருவர்முன்னொருவராக அரையிற்கட்டிய ஆடை அவிழ ஓடி, அரசன் அடியில் விழுந்தனர்.

இவ்வலங்கோலத்தைக் கண்ட அரசன், வெகுண்டு வெய் துயிர்த்துக் கைபுடைத்து வியர்த்து, '' நான் அபயனுக்கு எளியனே யாயினும், அவன் தண்டினுக்கும் எளியனே!'' எனக் கூறி, வெடி சிரிப் பாகச் சிரித்தான். ''நமது நாடு, கானரணும் மலையரணும் கடலரணும் உடையதென்று அத்தண்டு அறிகின்றிலதோ? நன்று! காண்போம்!'' எனச் செப்பினன். அது கேட்ட அமைச்சனாகிய எங்கராயன்,

> '' அரசர் சீறுவ ரேனு மடியவர்
> உரைசெ யாதொழி யார்க ளுறுதியே.''

'' ஏனையரசரை வெற்றி கொள்ளச் சயதரனுடைய சேனையே போதுமே! அவனும் வருதல் வேண்டுமா? அவனுல் பாண்டியர் ஐவருங் கெட்ட கேட்டினை நீ கேட்டிலை போலும்! கடலைக் கடந்து அவன் விழிஞம் அழித்ததும், சாலை கைக்கொண்டதும் தனது தண்டு கொண்டன்றே? முன்னொரு முறை அவன் படையுடனே பொரும் படி எழுந்த நம் படை பட்டபாட்டை மறந்துவிட்டனையோ? தண்ட நாயகராற் காக்கப்பட்ட நவிலைப்பதியில் அவன் பற்றிக்கொண்டன ஆயிரங் களிறுகாண். அவனுடைய தண்டினுல் தங்களுடைய மண் டலங்களையிழந்த அரசர் எத்தனை பேரென்று எண்ணியறிய லாகுமா? ஆதலால், இப்பொழுது இத்தண்டின் முன்னே உன் புய வலி எம்மாத்திரம் என்பதை எண்ணித் துணிக. இப்பொழுது என் னைச் சிறிச் சினந்தாயாகிலும், நாளை அச்சேனையின் எதிரில் பொரும் பொழுதேனும் என் வார்த்தையை நினைவாய்,'' என்றெடுத்துச் சொல்லினன்.

அரசன் அது கேட்டு, ''அடா மந்திரிப் பைதலே! என் வார்த் தைக்கெதிர் உரைப்பதென்னுல், தேவர்தாமும் அஞ்சுவர். நெடு நாளாகப் போர் பெறுமல் என் தோள்கள் தினவு கொண்டி ருப்பதை அறியாய். அரியினை ஆனை முட்டி யெதிர்கிட்டி வருவதுண் மையாயின் அன்றே, இப்படை என் முன் வரும்? இத்தனை நாளாக என்னிடத்திலிருந்து பழகியும், என்னுடைய தோள் வலியும் என்னு டைய வாள் வலியும் யாதும் அறியாயாய்ப் பிறன்போன்று பேசினாய். இது நின் பேதைமை; ஒழிக. நமது சதுரங்க சைனியமுஞ் சோழன்

விட வந்த தண்டின் எதிர் சென்று போர் தொடங்குக,'' என்று ஏவினன். கலிங்கப் படை கலித்தெழுந்தது. அடவிகள் பொடி பட்டன. அருவிகள் அனல் பட்டன. அருவரைகள் துகள் பட்டன. முரசங்கள் மொகுமொகென்று ஒலித்தன. எள்ளிடுதற்கும் இடை வெளியின்றி ஒருவர் உடலில் ஒருவர் உடல் புக நெருங்கிச் சென்று, கலிங்கப்படையானது கருணாகரன் படையின் எதிரில் உற்றது.

'படையெடுமெடும்!' என்ற ஓசையும், 'படை விடும் விடும்!' என்ற ஓசையும், இரு திறத்தும் கடலோசை போன்றன. விற்களின் நாண் களைத் தெறிக்கின்ற ஓசை, திசைமுகம் வெடித்தாற்போன்றது. செரு வின் இடையிலே அவரவர் தெழிப்புரைகள், உலகமெல்லாம் செவிடு படச் செய்தன. இரு திறப்படைகளும் எதிரெதிராகக் கிடைப்பது, கடலொடு கடல் கிடைத்தாற்போன்றது. பரியொடு பரி மலைவது, கடலின் அலையோடலைகள் மலைவதுபோன்றது. யானையுடன் யானை பொருவது, மலையுடன் மலை பொருதாற் போன்றது. இரதமு மிர தமு மெதிர்ப்பன, முகிலு முகிலு மெதிர்ப்பன போன்றன. படை வீரரோடு படைவீரர் எதிர்ப்பது, புலி புலியோடெதிர்த்தாற்போலும். அரசருமரசரும் அடர்ப்பது, அரியுமரியும் அடர்த்தாற்போலும். வீரர் கண்களிற் சினக்கனல் மினலொளி யெறித்தன. அவர் கையிற் சிலைகள் உருமேறுபோல இடித்தன. சிலையினின்றும் கணை மழை பெய்தன; பெய்யவே, குருதி யாறுகள் பெருகின. அவ்வாறுகளில் அரசர் சந்திர வட்டக் குடைகள், நுரைகள் போல மிதந்தன. துணி பட்ட யானைகளின் உடல்கள் இருபாலும் அடுக்கியிருத்தல், அவ் வாற்றின் இரு கரை போன்றிருந்தது.

எதிரிகள் சிலையில் அம்பைத் தொடுக்கின்ற அளவிலே, கையில் அம்பில்லாத சில வீரர், தம் மார்பிற் பாய்ந்த பாணங்களைப் பற்றி யெடுத்துச் சிலையிற்றொடுத்து விடுவர். இரண்டு தொடைகளும் அறு பட்ட சில வீரர், தம் எதிரிலே வருகின்ற யானையின் வலி கெட அதன்மீது ஒரு தொடையைச் சுழற்றி எறிவர்; இனி எறியும்படி மற் றொரு தொடையை இட்டு வைப்பர். வாரணக் கைகளை வாளால் வெட்டித் தோளிலிட்ட வீரர், தோற்பையைத் தோளிலிட்டு நீர் விடுகின்ற துருத்தியாளரை ஒப்பர். சில வீரர், தங்கள் மார்பின் மீது பாய வருகின்ற இவுளியை ஈட்டியால் குத்தியெடுத்துத் திரிவது, விசய லக்ஷ்மிக்கெடுக்கும் வெற்றிக் கொடியே போன்றிருக்கும். யானை மத்தகத்தைப் பிளக்கும்போது அதில் நின்றும் உதிர்கின்ற

முத்துகள், அவ்விசய லக்ஷ்மிக்குச் சொரிந்த மங்கலப் பொரியை ஒக்கும்.

இங்ஙனம் இரு திறப் படைகளும் இளைப்பாமல் சமர் செய்யும் போது, கடுகெனவே களப்போரினை முடிவுக்குக் கொண்டுவரக் கருணாகரன் தன் வேழமுந்திச் சென்றனன். அவன் படையும் முந்தச் சென்றது. அவ்வளவிலே கலிங்கப் படையின் மதயானைகள் துணிபட்டன; குதிரைகளுடனே தேர்கள் முறிந்தன. எங்கும் திமிலகுமிலமாயிற்று. மதயானை ஆயிரம் கொண்டுவந்த கலிங்க வீரர், அமரில் எதிர்த்து நிற்கமாட்டாமல் ஒதுங்கினர்; அலதிகுலதியாய் அச்சங் கொண்டு, 'இப்படை மாயையோ! மறலியோ! ஊழியின் கடையேயோ!' என்றலறி மலை முழைகளிற் பதுங்கவும், அரிய பிலங்களில் மறையவும், அடவியில் கரப்பவும் சிதைந்தோடினர்.

கலிங்க வீரர் சிதைந்தோடிவிட, அநேகமரசரும் ஆனையும் குதிரையும் தேரும் ஒட்டகமும் நவநிதியும் பெண்டிருமென்ற இவ்வெல்லாம் அபயன் படை வீரர் கைப்பட்டன. கைக்கொண்ட அவர்களே அவற்றின் அளவைக் கணிப்பது அருமையானால், அவற்றைக் கணித்துரைப்பார் வேறு எவருளர்?

இவற்றைக் கவர்ந்த பின் கருணாகரன், "இனிக் கலிங்கத் தரசனையும் கைக்கொண்டு போதல் வேண்டும்; அவனிருக்கின்ற இடத்தை அறிதல் வேண்டும்," எனச் சொன்னன். ஒற்றர் சென்று வரையும் வனமும் துருவி, அடிச்சுவடும் காணப்பெறாது அலமந்து, இறுதியில், 'அவனை ஒரு மலைக் குவட்டிற் கண்டோம்,' எனக் கூறினர்கள். 'அங்ஙனுற்று அவனைக் கொணர்க,' என்று கருணாகரன் தன் படையைப் போக்கினன். படை வீரரும் கதிரவன் குடை குவடடையுமளவிலே கலிங்க மன்னன் கரந்திருந்த வெற்பினை அடைந்து, வேலாலும் வில்லாலும் வேலி கோலிக் காத்து நின்றனர்; பொழுது புலருமுன்னே கலிங்கவரசனைக் கைப்பற்றித் திரும்பினர்.

திரும்பும் வழியிலே எதிர்ப்பட்ட சில கலிங்கர், தம் உடல் முழுதும் மாசு பூசி, தம் தலை மயிரைப் பறித்தெடுத்து, அரையில் ஆடையைக் களைந்தெறிந்துவிட்டு, "ஐயோ! நாங்கள் அமணர்கள் கண்டீர்! கலிங்கரல்லேம்!" எனக் கூறி உயிர் பிழைத்தனர். சிலர், வில்லின் நாணை மடித்து முந்நூலாக்கித் தரித்துக்கொண்டு, "ஐயா! நாங்கள் கங்கையில் நீராடப்போந்தவர்கள்! விதி வலியால் இவ்விடம் அகப்பட்டுக்கொண்டோம். இந்நாட்டினர்களல்லோம்," எனச் சொல்லி

உய்ந்து போயினர். குருதி தோய்ந்த கொடிச் சீலைகளைக் காவிக் கலிங்க மாக உடுத்து, தலையினை முண்டனஞ் செய்துகொண்டு, "ஐயா, எங்கள் உடையினைக் கண்ட மாத்திரத்தில் எங்களைப் பௌத்தர்களென்று அறிந்துகொள்ளலாம். நாங்கள் இத்தேயத்தின ரல்லேம்," எனக் கூறித் தப்பிப் போயினர் சில கலிங்கர். சிலர், யானைகளின் கழுத் திற் கட்டியிருந்த மணிகளை யவிழ்த்துக் கையிற் பிடித்துக்கொண்டு, "ஐயா, நாங்கள் தெலுங்கப் பாணர்கள்; சேனைகள் மடிகின்ற கலிங் கத்துக் களப்போரினைக் கண்டு திகைத்து நின்றேம்," என்று சொல் லிப் பிழைத்துப் போயினர். இங்ஙனம் பிழைத்துப் போனவரும், கலிங்கத்து ஓவியர் சுவர்களில் எழுதி வைத்த உருவங்களும் தவிரக் கலிங்க நாட்டில் உய்ந்தவர் பிறரில்லை.

"கடற்கலிங்க மெறிந்துசயத் தம்ப நாட்டிக்
கடகரியுங் குவிதனமுங் கவர்ந்து தெய்வச்
சுடர்ப்படைவா ளபயனடி யருளி னேஞ்சே
சூடினன் வண்டையர்கோன் தொண்டை மானே."

---

14. கொலம்பஸும் புதிய கண்டமும்

(S.S. அருணகிரிநாதர் அவர்கள், தமிழாசிரியர், தொண்டை மண்டலத் துளுவ வேளாளர் உயர் கலாசாலை, சென்னை)

மூன்று கப்பல்களிலும் நூற்றிருபது பிரயாணிகள் புறப்படத் துணிந்து இருந்தார்கள். அப்போது கொலம்பஸ், தமக்குத் துணை நிற்கும்படி கடவுளை வணங்கினர். அவரைப் பின்பற்றி மற்றவ ரும் கடவுளை வணங்கினர். பிறகு கொலம்பஸ் முதலிய அனை வரும் கப்பலிலேறிக்கொண்டனர். உடனே மூன்று கப்பல்களும், ஸ்பெயினில் உள்ள 'பலாஸ்' என்னும் துறைமுகத்தை விட்டு 1492-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் மூன்றாந் தேதி காலையிற் புறப்பட்டன. கரையில் நின்று கப்பல்களைப் பார்த்துக்கொண்டிருந்த மக்களிற் பலர், 'இனி நாம் கப்பலிற் செல்லும் நம் நண்பர்களைப் பார்க்கப்போவ தில்லை,' என்று பேசிக்கொண்டனர். கரையிலிருந்தவர்களிற் பெரும் பாலோர், 'கப்பலிற் செல்லுவோர் திரும்பி வரமாட்டார்,' என்றே கருதினர்.

கப்பல்களில் இருந்த ஆட்களும், இனித் திரும்பி வந்து தங்கள் நாட்டையும் நண்பர் உறவினர் முதலானவரையும் காணப்போவ

தில்லே என்றெண்ணிக் கண்ணீர் விட்டு அத்துறைமுகம் தங்கள் கண்களுக்குத் தெரியும் வரையில் பார்த்துக்கொண்டே சென்றார்கள். துறைமுகம் கண்களுக்குத் தெரியாமல் மறைந்தவுடன், அவர்கள் தங்களைச் சூழக் கடல் நீரைத் தவிர வேறு எதையும் காண முடியாத வர்களானார்கள்.

கோலம்பஸ் செப்டம்பர்மீ ஒன்பதாந் தேதியன்று, அதுவரை எல்லோருமறிந்த நாடுகளெல்லாம் கடந்து அப்பாற் சென் றார். இனி அவர் செல்லும் வழி, அதுவரையில் எவரும் போகாத தாகும். கப்பல்கள் யாவும், இதற்கு முன் எவரும் சென்று அறியாத வழியில் வேகமாக ஓடத் தொடங்கின. 'இனி நமக்கு என்ன நேருமோ! நமது கதி யாதாகுமோ!' என்று எண்ணிக் கப்பல்களில் இருந்த ஆட்களெல்லோரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கலாயி னர். அவர்களில் தைரியமில்லாத சிலர், 'இனி நாம் எக்காலத் திலும் நமது நாட்டையும், உறவினரையும், நமக்குரிய பொருள் களையும் பார்க்கப் போவதில்லே,' என்று ஒருவரோடொருவர் பேசி அழலாயினர். அவர்களைக் கப்பல்களில் இருந்த தலைவர்கள், ஆறுதல் கூறித் தேறுதலடையச் செய்தார்கள்.

செப்டம்பர் மாதம் பதினேராந் தேதி கொலம்பஸும், அவர் சகாக்களும் கடலில் எப்பொழுதோ முழுகிப்போன ஏதோ ஒரு கப்பலின் பாய்மரம் (Mast) மிதந்துகொண்டிருப்பதைக் கண் டார்கள்; மிகப் பெரியதாய் இருந்தமையினால், அஃது ஒரு பெரிய கப்பலில் இருந்திருக்க வேண்டுமென்றும், கடலில் பல நாட்களுக்கு முன்னரே அது விழுந்திருக்க வேண்டுமென்றும், அதற்குரிய கப்பல் அங்கு மூழ்கியிருக்கக் கூடுமென்றும் எண்ணி அவர்கள் அஞ்சினர்கள்.

செப்டம்பர் மாதம் பதினன்காந் தேதி கடற்பறவையொன்று, கொலம்பஸ் முதலானவர் இருந்த கப்பலின்மீது பறந்து வந்தது. அன் றிரவு அவர்கள் தலைக்கு நேரே வானில் அக்கினியைப்போன்ற வெளிச்சந் தோன்றியது. அதற்குக் காரணம் இன்னதென்று அறியாத கப்பலாட்கள் அச்சங் கொண்டார்கள்.

[இக்காலத்து மாலுமிகளுக்கு உஷ்ண காலத்தில் சில சமயங் களில் கடலுக்கு மேலே வானில் அவ்வாறு வெளிச்சந் தோன்றுவது இயல்பென்பது தெரியும்.]

பிறகு கொலம்பஸ் முதலியவர்கள் கடலில் பல விதப் புற் பூடுகளும், நண்டு முதலியவைகளும் மிதக்கக் கண்டார்கள். கொலம்பஸ், நண்டுகளில் ஒன்றைப் பிடித்து, அஃது உயிர் வாழ் வதற்கு ஏற்றபடி தம்மிடத்தில் வைத்துக்கொண்டார். தாம் கண்ட புற்பூடுகள் கரையிலிருந்தே கடலில் வந்திருக்க வேண்டு மென்றும், அதனால் ஒரு தீவோ கண்டமோ சமீபத்தில் இருக்க வேண்டுமென்றும் கொலம்பஸ் முதலானவர் உறுதியாக நம்பினர்.

செப்டம்பர் மாதம் பதினெட்டாந் தேதி கடற்காற்று, ஒழுங்காக வும் வேகமாகவும் வீசியது. அப்போது கப்பலில் இருந்தவர், கரையி லிருந்து வெகுதூரம் வரை பறக்க முடியாத பருவுடலுள்ள ஒரு வகைக் கடற் பறவைகளில் இரண்டைக் கண்டனர். சில சிறு பற வைகளும் பகற்காலத்தில் கடலுக்குமேல் பறந்து இரவில் எங்கேயோ சென்று மறைந்தன. ஆயினும், பூமியே கண்களிற் படவில்லை. கப்ப லாட்களின் மனத்தில், இன்பமும் துன்பமும் மாறி மாறித் தோன்றிக் கொண்டே இருந்தன.

செப்டம்பர் மாதம் இருபத்தைந்தாம் தேதி, தீமை நேரக் கூடிய அளவுக்குக் காற்று இல்லாமலிருந்தும், கடல் நீர் மிகவுயரமாக எழுந்தெழுந்து அடங்கிக்கொண்டிருந்தது. அதிக தூரத்தில் கடும்புயல் அடித்திருக்க வேண்டுமென்றும், அதனாலேயே இவ்வாறு நேர்ந்திருக்கிறதென்றும் கொலம்பஸ் பிறருக்குச் சொன்னார். கட லின் நீர் மிகவும் உயரமாக எழுந்தெழுந்து அடங்கியதால், கப்பல் கள் தத்தளித்தன. கப்பல்களின் தடுமாற்றத்தைக் கண்டவுடன் பலரும் பயந்து நடுங்கலாயினர். 'கடவுளை நம்புங்கள்; அவர் துணை செய்வார்,' என்னும் வாக்கியத்தையே அடிக்கடி கொலம்பஸ் கூறி னர். சிறிது நேரத்திற்கெல்லாம் தண்ணீரின் எழுச்சி அடங்கியது; கப்பல்களின் நிலையும் ஒழுங்குபட்டுவிட்டது. எனினும், கப்பலில் இருந்தவருக்குத் திருப்தி உண்டாய்விடவில்லை. ஒவ்வொரு நாளும் கப்பல்கள் கரையை அடைவதற்கான வழியிலேயே சென்றன; ஆனால், அதையறியாத கப்பலாட்களின் அதிருப்தியும் பயமும் அதிகப் பட்டே வந்தன. புதியவொரு கண்டத்தைத் தாம் காணக் கூடும் என்னும் நம்பிக்கை கொலம்பஸுக்கு இருந்தபோதிலும், அவரு டைய ஆட்களைப் பிடித்த அச்சம் அவரையும் சிறிதளவு பற்றியது. ஆயினும், 'ஆபத்து ஒரு சிறிதும் உண்டாகாது,' என்று அவர் அடிக்கடி எல்லோருக்கும் சொல்லிக்கொண்டிருந்தார்.

கொலம்பஸ் எவ்வளவோ சமாதானம் சொல்லியும் அவருடன் சென்றவர்களுக்கு அமைதியுண்டாகவில்லை. அவர்கள், "நாம் இந்தக் கொலம்பஸைக் கடலில் எறிந்துவிட்டு ஸ்பெயினுக்குத் திரும்பிப்போய் இராணியாரிடம், 'கொலம்பஸ் வழியில் சுர நோய் கண்டு இறந்துபோனார்; ஆகையால், நாங்கள் அவர் பிணத்தைக் கடலில் எறிந்துவிட்டு வந்தோம்,' என்று சொல்லிவிடலாம்," என்று ஒருவரோடொருவர் பேசி முடிவு செய்துகொண்டார்கள்.

கப்பலாட்கள் கொண்ட கருத்தைக் கொலம்பஸ் ஒருவாறு அறிந்துகொண்டார். ஆயினும், அவர், அந்த ஆட்கள் ஒவ்வொருவரிடத்திலும் தனித்தனியே அன்புடன் பேசி, அவர்களைச் சமாதானப்படுத்த முயன்றார். கப்பல்கள் கடலில் ஓயாமல் ஓடிக்கொண்டே இருந்தன. கப்பலாட்கள், செய்வது இன்னதென்று அறியாமல் ஏக்கமடைந்திருந்தார்கள்.

செப்டம்பர் மாதம் இருபத்தைந்தாம் தேதி காற்று அனுகூலமாக வீசியது. கப்பல்கள் கஷ்டமின்றி வேகமாகச் சென்றுகொண்டிருந்தன. மாலை நேரத்தில் சேய்மையில் எதுவோ ஒன்று மேகத்தைப்போலக் கப்பலில் இருந்த சிலர் கண்களுக்குத் தெரிந்தது. உடனே எல்லோரும், 'தரை! தரை!!' என்று கூவினர். விரைவில் வெளிச்சம் நீங்கி இருள் சூழ்ந்துகொண்டது; அவர்களால் எதையுங் காண முடியவில்லை; ஆனால், கடற் பறவைகள் பல, கப்பல்களுக்கு மேல் வானிற் பறந்துகொண்டிருந்தன. பறக்கும் மீன்கள் பல, பறந்து வந்து கப்பலில் வீழ்ந்தன. இத்தகைய புதிய காட்சிகளைக் கண்ட கப்பலாட்கள் மகிழ்ச்சியுற்றார்கள். அதுவரையில் அவர்கள் ஸ்பெயின் தேசத்திலிருந்து இரண்டாயிரம் மைல் தூரத்திற்கு அதிகமாகவே வந்துவிட்டார்கள்.

மேலும் மூன்று கப்பல்களும் ஓடிக்கொண்டே இருந்தன. பொழுதும் விடிந்தது. அப்போது, கரையில் வசிக்கக்கூடிய சில பறவைகள் கடலில் பறப்பதை எல்லோரும் கண்டனர். 'பூமி சமீபத்தில் இருக்கக்கூடும்,' என்று எல்லோரும் கருதினர். ஆதலால், பின்னும் இரண்டொரு நாள் அவர்கள் மேலேக்கிச் சென்றார்கள். பூமியை அவர்கள் காணவில்லை. அதனால், கப்பலில் இருந்த ஆட்கள் அலுப்புற்றார்கள். அவர்கள், தாங்கள் செய்யுங் காரியம் வீண் என்று நிச்சயித்தார்கள். ஆதலால், அவர்கள் ஸ்பெயின் தேசத்திற்குத் திரும்பும்படி கொலம்பஸை வற்புறுத்தி வேண்டினார்கள். கொலம்பஸுக்குத்

தாம் கொண்ட கருத்து நிறைவேறும் என்ற நம்பிக்கை மிகுதியும் இருந்தது. ஆகையால், அவர் தம் ஆட்களை நோக்கி, "நண்பர்களே, கொஞ்சம் பொறுத்திருங்கள். நாம் தொடங்கிய காரியம் வீணானது அன்று; இன்னும் சில தினங்களில் நாம் கொண்ட கருத்துக் கை கூடும் என்று உறுதியாய் நம்புகிறேன்," என்று சொன்னார்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட கப்பலாட்கள் ஒருவாறு அமைதி யுற்றார்கள். மறு நாள் தரை சமீபித்திருக்கிறதென்பதற்குப் பல ஆதாரங்கள் கிடைத்தன. கற்பாறைகளில் மட்டும் பெரும்பாலும் வாழக்கூடிய மச்சங்களையும், ஆறுகளிலேயே விளையக்கூடிய சில புற் பூடுகளையும் அவர்கள் கடல் நீரின்மீது கண்டார்கள். இவற்றுல், கப்ப லில் இருந்த ஆட்கள் எல்லோரும், 'நிச்சயமாகச் சமீபத்தில் நிலம் தோன்றக்கூடும்,' என்றெண்ணினார்கள். அதனுல், அவர்களுள் ஒவ் வொருவரும், தாமே முன்னுல் பூமியைக் கண்டு அதை மற்றவருக் குக் காண்பிக்க வேண்டுமென்னும் ஆவலின் மிகுதியினுல், நேரே தம் கண்களுக்கு எட்டியவரையில் பார்த்துக்கொண்டிருந்தனர். அப்போது காற்று அவர்கள் பிரயாணத்திற்கு ஏற்றபடி அனு கூலமாக வீசிக்கொண்டிருந்தது. கொஞ்சங் கொஞ்சமாக எங்கும் இருள் சூழ்ந்துகொண்டது; ஆயினும், அன்றிரவு தரையைக் காணப் போகிறோமென்னும் ஆவலினுல், மூன்று கப்பல்களிலும் இருந்த மக்கள் எல்லோரும் விழித்துக்கொண்டேயிருந்தார்கள்.

கொலம்பஸ், கப்பலின் மேல் தட்டில் தக்கதோரிடத்தில் உட் கார்ந்து, முன்னுல் கடலில் நெடுந்தூரம் பார்த்துக்கொண்டே இருந் தார். அவர் பார்வை கூர்மையானது. அவர் எதையும் நன்முய்க் கவனிக்கக் கூடியவர். அவர் இரவு ஒன்பது மணிவரையில் எதையுங் காணவில்லை. பின்னும் சில நிமிடங்கள் சென்றன. மணி ஒன்பதே கால் ஆயிற்று; ஒன்பதரையும் அடித்தது. அதுவரை கொலம்பஸ் எதையுங் காணவில்லை. மணி சரியாகப் பத்தாயிற்று. அப்போது சேய்மையில் வெளிச்சம் தோன்றுவதைக் கொலம்பஸ் கண்டார். உடனே அவருக்கு உண்டான ஆனந்தத்திற்கு அளவேயில்லை. ஆனுல், தாம் காண்பது நிலத்தில் உள்ள வெளிச்சமோ, நட்சத்திர வெளிச்சமோ என்ற சந்தேகம் அவருக்கு உண்டாயிற்று. பிறகு, தாம் காண்பது நட்சத்திர வெளிச்சமன்று; நிலத்தில் தோன்றும்

வெளிச்சமேயென்று கொலம்பஸ் நம்பினார். உடனே அவர், தம் பக்கத்தில் அரைத் தூக்கத்திலிருந்த ஒருவனை எழுப்பி அந்த வெளிச் சத்தைக் காட்டினார். அவனும் உற்றுப் பார்த்து, 'அது பூமியில் தோன்றும் வெளிச்சமென்பதை ஐயமின்றிக் கூறலாம்,' என்றான். உடனே இச்செய்தி எல்லோருக்கும் தெரிந்தது. எல்லோரும் வந்து பார்த்து, 'அது தரையில் தோன்றும் வெளிச்சமே,' என்று உறுதி கூறினர். ஆனால், அந்த வெளிச்சம் அடிக்கடி மறைந்து மறைந்து வெவ்வேறிடங்களில் மாறி மாறித் தோன்றிக்கொண்டிருந்தது; 'மீன் பிடிக்கும் செம்படவனுடைய கட்டுமரத்திலிருந்து அந்த வெளிச்சம் நமக்கு வருகின்றது; அதனால்தான் அஃது அடிக்கடி அலைகளால் மறைக்கப்படுகின்றது; வெவ்வேறிடங்களில் மாறி மாறித் தோன்று கிறது,' என்று கப்பலாட்களிற் சிலர் சொல்லினர். வேறு சிலர், 'இல்லை இல்லை; யாரோ ஒரு மனிதன் கையில் விளக்கை வைத்துக் கொண்டு கரையில் அங்குமிங்குமாக உலவிக்கொண்டிருக்கிறான்,' என்று கூறினர்; எவ்வாறாயினும், சரியே! அவர்கள் பூமிக்குச் சமீபத்தில் வந்துவிட்டார்கள். ஆ! கொலம்பஸுக்கு உண்டான ஆனந்தத்திற்கு அளவேயில்லை!

மனிதர் வசிக்கின்ற புதிய தேசத்திற்குச் சமீபத்தில் தாங்கள் வந்து சேர்ந்துவிட்டதாக எண்ணிய கப்பலாட்கள் அனைவரும் ஆனந்த மெய்தினர். அவர்கள் தங்கள் மகிழ்ச்சிக்கு அடையாளமாகக் கப்ப லில் இருந்த ஒரு பீரங்கி வெடியைத் தீர்த்தார்கள். இதற்கிடையில் கப்பல்கள் சிறிது தூரம் சென்றன. அப்போது கப்பலில் இருந்தவர், கரை மிகவும் சமீபத்தில் இருப்பதாக உணர்ந்தனர். அதனால், அவர் கள், கப்பல்களை நிறுத்தி நங்கூரம் பாய்ச்சிச் சூரியோதயத்தை எதிர் பார்த்திருந்தார்கள். தமக்கேற்பட்ட ஆனந்தத்தைத் தாங்கக் கொலம்பஸால் முடியவில்லை. பல வருடங்களாக முயன்று, பல விதத் துன்பத்திற்கும் கவலைக்கும் இடையில் அவர் வெற்றி பெற்றாரன்றோ? சாதாரணமான மூன்று கப்பல்களையும், அறிவற்ற ஆட்களையும் துணையாகக் கொண்டு அவர் மகாசமுத்திரத்தைக் கடந்து, தாம் கருதியபடியே புதியதொரு தேசத்தைக் கண்டார். அவர் உழைப்பு, ஊக்கம் முதலியவற்றின் பயனாகவே அவர் பெயர் உலகம் உள்ளவரை யில் நிலை நிற்கலாயிற்று.

அக்டோபர் மாதம் பன்னிரண்டாந் தேதி, தங்களுக்குமுன் அழகான பல மரங்கள் அடர்ந்து வளர்ந்துள்ள நிலப் பரப்பைக் கொலம்பஸும், அவருடைய ஆட்களும் கண்டார்கள். கரையிலிருந்த மக்களோ, தாங்கள் இதுவரையிற் பாராத மூன்று கப்பல்களையுங் கண்டு வியப்பெய்தினர்கள். அவர்கள் உடல் போதிய அளவு ஆடையின்றி விளங்கியது.

கொலம்பஸ், தம் உடைகளையணிந்துகொண்டு, தம் ஆட்களோடு படகுகளிலேறிக் கரையை யடைந்தார்; தாமே முதலில் படகை விட்டுக் கீழிறங்கி, ஆனந்த மேலீட்டினால் தாம் கண்ட நிலத்தைக் குனிந்து முத்தமிட்டார். பிறகு அவர் முழங்காற் படியிட்டு ஆகாயத்தை நோக்கிக் கடவுளைத் துதித்தார்.

---

15. சரித்திர நூல்களைக் கற்பதனால் வரும் பயன்

(திரு. தி. த. கனகசுந்தரம் பிள்ளை அவர்கள், B. A.)

பயன் என்பதன் பொருள் :—எல்லாக் கல்வியும் பயனுள; முற்காலத்திலிருந்த மனிதருடைய செயல்களையும், உலகத்திலுள்ள பல்வகைப்பட்ட சனங்கள், சாதியார்கள், குலங்கள் என்பவைகள் விருத்தியடைந்தமையையும் அழிவடைந்தமையையும் விரித்துக் கூறும் நூல்களைப் படிப்பது உலக வாழ்விற்குப் பெரும்பயன் தருவதாகும்.

பண்டைக்காலத்து நிகழ்ந்த ராஜ காரியத்தைத் கூறுவதே சரித்திரமென்பர் சிலர். இது சரியன்று. உண்மையாக நோக்குமிடத்துச் சரித்திரம் முற்காலத்தில் உலகத்து நிகழ்ந்த சமயாபிவிருத்தி, சனபிவிருத்தி, தன விருத்தி, கல்வி விருத்தி, அரசியல் விருத்தி முதலிய சம்பவங்களெல்லாவற்றையுங் கூறுவதாகும்.

உலகத்திலிருந்த பெரியோரின் ஜீவ சரிதத்தைக் கூறுவது சரித்திரம் என்பாரும் சிலருளர்.

உலகத்து நிகழும் சம்பவங்கள் அடியோடு மாறுவன அன்மையின், சரித்திரங் கற்பது மிக்க பயனுடைத்து. முற்காலத்து நிகழ்ந்த சம்பவங்களே அதிகமாய் இக்காலத்தும் நிகழ்கின்றன. ஆகவே, அக்காலத்துச் சம்பவங்களின் ஆக்கக் கேடுகளைக் கற்பதனால் நாம் அறிவுடையராகின்றேம். சரித்திரக் கல்வி இவ்வாறு நமது அநுபவத்தை விருத்திசெய்து மக்களையும் மற்றவைகளையும் பற்றி நாம் கொள்ளும் எண்ணங்களை வலியுறுத்துகின்றது.

கல்வியினால் வரும் பயன் இரு வகைப்படும் : ஒன்று நமது உயிர் வாழ்க்கைக்கு, அன்றேல் உயிர் வாழ்வின்பொருட்டு மேற்கொண்ட தொழிலுக்கு உதவியாவது ; மற்றொன்று நமது அந்தக்கரணங்களைத் தொழிற்படுத்தி அவைகளை வலியுறுத்துவது. தக்க முறைப்படி கற்றால், சரித்திரக் கல்வி ஒன்று மாத்திரமன்று—மற்றெவ் வகைப்பட்ட கல்விகளும் நமது அந்தக்கரணங்களை விருத்தி செய்வதற்கேதுவாகும். ஒரு கல்வி ஓரந்தக்கரணத்தையும், மற் றொன்று வேறோரந்தக்கரணத்தையும் வளரச் செய்து வலியுறுத்தி, உலக காரியங்களை ஐயந்திரிபின்றி உணருமாறு அவைகளைப் பயிற்று கின்றன. இங்கே சரித்திரங் கற்பதனால் வரும் பயனென்று சொல் லப்பட்டது, பெரும்பாலும் நமது உயிர் வாழ்க்கைக்கு உதவியாகும் தன்மையினை; அஃதாவது நமக்கு முன்னிருந்தோருடைய வாழ்வினை யும் செயலினையும் நமக்கெடுத்துக் காட்டி இக்காலத்துள்ள மனிதரை யும் மற்றவைகளையும் உள்ளவாறுணரத் துணை செய்வதனை.

நமது காலத்தில் நிகழும் சம்பவங்களையும் நம்மோடாடும் மனி தரையும் பற்றி நாம் கொள்ளும் எண்ணங்கள், நமக்குள்ள விருப்பு வெறுப்புக்களாலும் கண்ணோட்டத்தினாலும், மிகவும் உண்மைக்கு மாறுகவிருக்கும். நெடுங்காலத்துக்கு முன்னிருந்த மனிதரையும் அவர்களுடைய செயலையும் எடுத்துக் கூறும் சரித்திரங்களில் இந்த விருப்பு வெறுப்புக்கள் செல்வதற்கிடமில்லை. அதனால், அவர்களைப் பற்றி நாமடையும் அபிப்பிராயம் அதிகம் உண்மைக்கு மாறுக இருக்க மாட்டாது. சரித்திரத்தை முற்காலத்து நிகழ்ந்த ராஜகாரியங்களின் வரலாறென்று ஓராசிரியர் கூறுவர். சரித்திர நூலார் கூறும் ராஜ காரிய வரலாற்றில் கட்சி பேதங்களாலுண்டாகும் பொய்ம்மையும் பொருமையும் ஒழிக்கப்பட்டு, மனிதர்களும் அவர்கள் செயல்களும், உள்ளது உள்ளபடி காணப்படும்.

சரித்திரத்தை முற்காலத்து ராஜ காரியங்களின் வரலாறென்று சொல்வது சரியன்று ; அது கூறுவது கட்சி பேதங்களின் வரலா றென்று சொல்வது சரியன்று ; அது கூறுவது கட்சி பேதங்களின் வரலாறன்று; மக்கட் கூட்டத்தின் வரலாறு. உண்மையாகப் பார்க்கு மிடத்துச் சரித்திர நூலாசிரியரின் கடமை, முன்னிருந்த அரசர்களின் செயலையும், அவர்களின் வைபவங்களையும், அவர் பொருத போர்களை யும் கூறுவதன்று ; பின்னை என்னை எனின், முன்னிருந்த மனித ரின் வாழ்வையும், செயலையும், கல்வி, செல்வம், சமயம், ஜனசம்சர்க்

கம், கைத்தொழில், சிற்பம் முதலியவைகளில் அவர்களடைந்த விருத்தியையும் எடுத்து விளங்கக் காட்டுவதேயாம். சரித்திரத்தைக் கல்வி கேள்வி வீரம் முதலியவற்றுல் பெரியோரின் சரிதம் என்று கூறுவதும் சரியன்று. சரித்திரம் இப்பெரியோர்களின் சரித்திரத்தை மாத்திரமன்று, ஆதி தொட்டு உலகத்து நிகழ்ந்த ஒழுக்க வழக்கங்களே எல்லாம் உள்ளது உள்ளபடி கூற வேண்டும்.

இவ்விதமாக எழுதப்பட்ட சரித்திர நூல்களைக் கற்பதனால் பெரும்பயனுண்டு. மக்கள் படும் வருத்தங்களும் துன்பங்களும் ஆசைகளும் முதலாகிய உலக வாழ்க்கையில் நிகழும் சம்பவங்கள் காலத்துக்குக் காலம் மாறுவனவல்ல; முற்காலத்தில் நிகழ்ந்தவைகளே பிற்காலத்தும் நிகழ்கின்றன. அவைகளின் ஆக்கக் கேடுகளால் நாம் இக்காலத்துச் சம்பவங்களின் ஆக்கக் கேடுகளை யறிந்துகொள்ளலாம். இந்த விதமாகச் சரித்திர நூல்களை நாம் சரியாக ஆராய்வோமாயின், அவை நமக்கு எரிச்சலோடும் மயக்கத்தோடும் சேராத பெரிய தோருண்மை யநுபவத்தைப்பயக்கும். அநுபவம் இயற்கையிற் கொடிதாயினும், சரித்திரவாராய்ச்சியால் வருவது அத்தன்மைத்தன்று; அது கொடுமை தீனையளவுமின்றி, அறிவு பனையளவாயிருக்கும். பிறரடைந்த கஷ்ட நஷ்டங்களால் நாம் பேரிலாபமடைகின்றேம். உலகத்தில் நமக்கு முன் சென்றோருடைய அடிச் சுவடுகள் நமக்கு வழி காட்டிகளாக நின்று நம்மைப் பள்ளத்தில் வீழாமலும் மேட்டிலேறுமலும் விலக்குகின்றன. மனிதருடைய இயற்கை, முன்னிருந்ததற்கு இப்போது சிறிதும் மாறுபடவில்லை. காலம், பல விதமாக மாறுபாடடைய, அதனுடு விகற்பமடையாது எப்போதும் ஒரியல்பாயிருப்பது அதுவொன்றே. ஆகலான், முற்காலத்து நடந்த செயல்களிலிருந்தும், வர்த்தமான காரியங்களோடு பெரிதும் வேறுபாடில்லாத காரியங்களிலிருந்தும், இப்போதுள்ள நமது காரியங்களை நடத்தும் முறையை நாம் கற்றுக்கொள்ளலாம். முற்காலத்து வரலாறு கூறும் சரித்திரவாராய்ச்சியால், இப்போதுள்ள காரியங்களில் கணிகமாய் அவ்வப்போது நிகழ்வனவற்றினின்றும் நிலையுதலுடையவாயவற்றிற்கெப்போது மியல்பாயுள்ளவைகளை வேறு படுத்துணரலாம். உதாரணமாக முற்காலத்திருந்த கலா சாலைகளின் வரலாற்றையும், தேசங்கள்தோறும் அவைகளின் விருத்தியையும் தன்மையையும் மாற்றுதல் செய்தவைகளையும், இடையில் அழிவுறுது நிலைத்தவற்றின் சித்திக்குக் காரணமாயிருந்தவைகளையும், அவைக

ளடைந்த சித்தியின் தன்மையையும் கற்றறிதல் அவ்விதமான புதியதொரு கலாசாலை ஸ்தாபிப்பதற்கு இன்றியமையாத துணையாயிருக்கும். இனி, பேர் போன பிரஞ்சு தேசக் கலகத்திலிருந்து 'பர்க்கு' முதலிய பெரும்புலவர்கள் எத்துணைப் புத்திமதிகள் எடுத்துக் கூறினர்! அத்தகையோர் துணையைக்கொண்டு ஒரு பெரிய சம்பவத்தின் காரண காரியங்களைக் கற்றுணர்தல் பெரும்பயன் தராமற் போகாது. பிரஞ்சுக் கலகத்தால் நாம் அறிந்துகொண்டன பல; அவற்றின் உணர்ச்சி இக்காலத்திற்கின்றியமையாதது. அவற்றை யறிய வேண்டுவோர், அவற்றினையறியாது கழித்தல் அவர்க்குப் பெருங்கேடு பயக்கும்.

Printed at the Royal Printing Works, Mount Road, Madras.